1206

குண்டூசி

ஜூன் 1959 . . 75 காசு

For pleasing results. . .
INSIST ON
Klein & Peyerl BLOCKS
30, MOUNT ROAD, MADRAS-2

விரைவில்
வருகிறது
G.K. புரொடக்ஷன்ஸ்
சகோதரி
டைரக்ஷன்: A. பீம்சிங்
வசனம்: முரசொலி மாறன் M.A
பாடல்கள்: கண்ணதாசன்
ஸ்டுடியோ: ஏவி எம்

ஜூன் வெளியீடு!

பொன்னலூரி பிரதர்ஸாரின்

தெய்வபலம்

பாதிக்கு மேல் கலரில்

[சரித்திரக் கதை]

டைரக்‌ஷன்

வசந்தகுமார் ரெட்டி

செம்ரியா
ரிலீஸ்

CHARI.

134165

பஹோலா

ஆர்னிகேடட் ஆயில்

கேச கோளங்களை ஆரோக்கிய முடையதாக செய்து அழகான, நீண்ட கேசத்தை வளரச் செய்யும் ஓர் சக்தி வாய்ந்த ஹோமியோ பதித் தயாரிப்பு.

சாதா சைஸ் (3 oz) ரூ. 2_25
குடும்ப உபயோக
சைஸ் (16 oz) ரூ. 8-50

கிடைக்குமிடம்:

இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட்
கும்பகோணம்.

சென்னையில்

6, ஸ்டிரிங்கர் தெரு, G. T. மவுண்டு பார்மஸி, மதராஸ்-2.

பெஜவாடா, பெங்களூர், ஹைதராபாத், புது டெல்லி. பம்பாய் மற்றும் இதர இடங்களிலும் ஸ்டாகிஸ்ட்கள் தேவை.

இந்த ஊசியில்

ஜூன், 1959

மாலை-2] [மலர்-4

ஒன்று கூடுங்கள் ... 5
படம் பேசுகிறது ... 14
கீதாவின் தந்திரம் ... 21
வாழ்க்கை (வி)சித்திரம் ... 29
வில்லன் 'சோமு' ... 32
கடவுள் எங்கே? ... 36
பிரஸிடெண்ட்
—பஞ்சாட்சரம் ... 37
(பட அனுபந்தம்)
பொதுஜனம் பேசுகிறார் ... 41
நுனிப்புல் ... 47
மரண வாக்குமூலம் ... 50
கலைக்கூடங்களில்
கடந்த மாதம் ... 60
இப்படிப் பேசுவார்களா? 64
இந்திய திரைப்படத்
தொழில் ... 67
எழில் ரோஜா ... 69
வளரும் படங்கள் ... 70
நாலு வேலி நிலம் ... 76
நாட்டுக்கொரு நல்லவள் ... 79
(பட அனுபந்தங்கள்)
இது செய்தி ... 83
பிரேம் நஸீருடன்
- ஒரு நாள் ... 89
பண்ணையார் மகன் ... 99
(பட அனுபந்தம்)
மஞ்சள் மகிமை ... 103
கேளுங்கள் ... 107
நேயர் விமர்சனம் ... 115

★

வர்ணப் படங்கள்:

ஈ. வி. சரோஜா, மல்லிகா, சந்திரகாந்தா, லலிதா.

கதை கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே. யாரையும் குறிப்பிடுபவன அல்ல.

கிடைத்தது அமுதமா? நஞ்சா?......

ஒன்று கூடுங்கள்

நடப்பு வருஷத்திற்கு தென்னிந்திய பிலிம் வர்த்தக சபைக்கு விஜயா அதிபர் பி. நாகி ரெட்டி போட்டியின்றித் தேர்நதெடுக்கப்பட்டுள்ளது தென்னகப் பட உலகு மகிழ்ச்சி அடைய வேண்டிய விஷயம்.

அன்று அவர் நிகழ்த்திய தலைமையுரை ஊன்றிப் பார்க்கத் தக்கது.

"தென்னகத் திரையுலகில் இனம் தெரியாத ஒரு மந்த நிலை ஏற்பட்டுள்ளது. நிதி வசதிக் குறைவு காரணமாக இப்போது ஒரு பயங்கரமான சூழ்நிலையில் அது இருந்துவருகிறது. அரைகுறையாகத தயாராகி நிற்கும் பல படங்களில சுமார் இரண்டு கோடி ரூபாய் முடங்கிக் கிடக்கிறது" என்று மனம் வருந்திக் கூறியிருக்கிறார், "இந்த நிலை மாற வேண்டுமானால் அதற்கு அனைவரது ஒத்துழைப்பும் தேவை; ஒன்று கூடுங்கள், அதைத் தாருங்கள்" என்று வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

அவருடைய உரையிலே எத்தனையோ விஷயங்களை உள்ளடக்கித்தான் பேசியிருக்கிறார். படங்கள் அரைகுறையாக நிற்பதற்கு நிதி பற்றாக்குறை நிலை மட்டும் காரணமல்ல என்பதும் அவருடைய உரையில் நன்கு தொனிக்கிறது. அதில் நடிக்கும் நட்சத்திரங்கள் அளிக்கும் தொல்லைகளும் ஒரு முக்கியகாரணம் என்பதைச் சொல்லாமல் சொல்லியிருக்கிறார்.

பி. நாகி ரெட்டி



தண்ணீரில் மூழ்கித் தத்தளிப்பவன் ஒரு துரும்பு கிடைத்தாலும் அதைப் பிடித்து கரைபேற முடியுமா என்று முயற்சிப்பது இயற்கை. அப்படியிருக்க நல்ல ஒரு படகே அவனுக்குக் கிடைக்கும் போது. தயங்குவானா? தண்ணீரில் தத்தளிக்கும் மனிதன் நிலையில் இன்று இருக்கும் தென்னகப் பட உலகம் நல்ல படகாக நாகிரெட்டி கிடைத்திருக்கும் போது அதை நழுவ விட்டு விடாமல், அவரைப் பயன்படுத்திக் கொள்ளுமென நம்புகிறோம். இந்த ஆண்டில் பி நாகி ரெட்டியார் தலைமையில் பிலிம் வர்த்தக சபை உபயோகமான பல காரியங்களைச் சாதிக்கும் என்பதில் நம்பிக்கை உண்டு.

புத்திசாலித்தனமான முயற்சி

இந்திய சலனப் படத் தயாரிப்பாளர் சங்கம் இதுவரை எவ்வளவோ தவறுகளைச் செய்திருக்கிறது. சமயத்தில் எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை எடுக்கத் தவறி, பொன்னான சந்தர்ப்பங்களை நழுவ விட்டிருக்கிறது. அப்பொழு தெல்லாம் பலரது குற்றச் சாட்டுகளுக்கு ஆளாகியும் இருக்கிறது, ஆனால் அவை அனைத்தையும் நாம மறந்து விடும்படி செய்வதாக இருக்கிறது. இப்பொழுது அது எடுத்துக் கொண்டுள்ள முயற்சி.

கூட்டுறவு முயற்சியிலே ஒரு நிதிக் கார்ப்பரேஷனை ஆரம்பிக்க அது முடிவு செய்திருப்பது ஒரு புத்திசாலித்தனமான முயற்சியாகும். இதற்கான வேலைகளில் சங்கம் முழு மூச்சுடன் இப்போது ஈடுபட்டுள்ளது. சங்கத்தின் அங்கத்தினர்களுக்கு உதவ முதலில் ஐந்து லட்சம் மூலதனத்துடன் இது ஆரம்பிக்கப் படவிருக்கிறது. ஆதரவு நல்ல முறையில் இருந்தால் மூலதனம் அதிகரிக்கப்படும் என்றும் சங்கத்தின் தலைவர் ரூங்டா உறுதி தெரிவித்திருக்கிறார்.

நம் படாதிபதிகளுக்கு என்றுமே ஒரு கடும் பிரச்னையாக இருந்து வருகிறது, பணம்! இந்திய சர்க்கார் நிறுவிய பிலிம் விசாரணைக் கமிட்டி

நன்கு ஆராய்ந்து தன்னுடைய பல சிபாரிசுகளில் ஒன்றாக "நிதி கார்ப்பரேஷன்" அவசியத்தை வலியுறுத்தியிருந்தது. உண்மையில் இந்திய அரசாங்கத்தற்கு இந்தப் பிரச்னையைத் தீர்க்க வேண்டுமென்ற எண்ணம் அன்றே இருந்திருக்குமானால், உடனடியாக நடவடிக்கை எடுத்திருப்பார்கள். படாதிபதிகளுக்கு பணத் தலைவலியும் நீங்கியிருக்கும்.

பல வருஷங்கள் மௌனமாயிருந்துவிட்டு இப்போது ஒரு நிதி கார்ப்பரேஷனை ஆரம்பிக்கப்போவதாக அறிவித்திருக்கிறார்கள். அதுவும் நகைப்புக்கிடமான, நாம ஏற்கெனவே குறிப்பிட்டபடி யானைப் பசிக்கு சோளப் பொரிபோல மிகச் சிறிய மூலதனத்துடன் ஆரமபிக்கவிருக்கிறது. சர்க்காரின் அலட்சிய மனப்போக்கை உணரும் போது 'தன் கையே தனக்கு உதவி' என்ற கொள்கையில் சங்கம் இறங்கியது பாராட்டத் தக்கது.

சங்கம் போடவிருக்கும் மூலதனம் மட்டும் பெரிய தொகை என்று நாம் சொல்லவரவில்லை. இதில் தொகையை விட, 'மற்றவர்களை நம்புவதை விட நாமே செய்து கொள்வது நலம்' என்ற எண்ணம் அதற்கு ஏற்பட்டிருக்கிறதே அதுதான் பெரிது. இந்திய சலனப்படத் தயாரிப்பாளர் சங்கம் தொடங்கவிருக்கும 'நிதி கார்ப்பரேஷன்' நல்ல முறையில் நடந்து நம் படத்தொழிலுக்கு உதவ வேண்டுமென்பது எமது ஆவல்.

குடந்தை மணம் கமழுகிறது

"கொசுக்களா, கொசுக்களா, கும்பகோணம் கொசுக்களா!" என்று பாட்டுப் பாடும் அளவுக்குப் பிரபலமாயிருந்த அந்த கும்பகோணம் கொசுக்கள் இப்போது பழங்கதையாகிவிட்டது. இப்பொழுது அந்த நகரத்திலே கொசு, 'தூசு' இரண்டுக்குமே இடமில்லை.

இரவெல்லாம் அவை பாடும் "முகாரியி"லே தூக்கமின்றித் தவித்து விடியற்காலை அசந்து தூங்கும் நேரத்தில் தெருவிலே எழும் எருமைக் குரல் பள்ளியெழுச்சியாக இருந்த காலம் மலையேறிவிட்டது.


டி. எஸ். ராஜகோபால அய்யங்கார்.

இவ்வளவுக்கும் காரணம் அந்த நகரம் சுத்தியாகி விட்டது; அதற்குக் காரணமாக இருக்கும் ஊழியர்கள் இருவர். புதிதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கும் நகர மன்றத் தலைவர் டி. எஸ். ராஜகோபாலய்யங்கார் அவர்களும், தணைத் தலைவர் ஏ. ஆர். ராமசாமி அவர்களுமே அந்த இருவர்.

பிரபல டி. எஸ் ஆர் கம்பெனியின் அதிபர் ராஜகோபால அய்யங்கார் தன் சரக்குகள் மணம் வீசுவது போல தன் பொறுப்பின் கீழுள்ள நகரமும் மணம் கமழ வேண்டுமென அவர் நினைக்கிறார். தன் சரக்குகள் போலவே தன் நகர நிர்வாகத் திறனும் அகில உலகப் புகழ்பெற வேண்டுமென எண்ணுகிறார். சமூக புத்தி சம்பந்தமான பல பணிகளுக்கும் கணக்

ஏ. ஆர். ராமசாமி

கில்லாது தர்மம் வழங்கி வருகிறவர் இவர். ஏழை மக்களின் கல்வியிலும சுகாதாரத்தி லும கண்ணும் கருத்தும் கொண்டவர்.

துணைத் தலைவர் ராமசாமியோ, 'போட்டுத துப்புவது சிறப்பான தன் ஏ. ஆர். ஆர். சீவலானாலும் அது துப்பப்பட வேண்டிய இடம் நடுத்தெருவிலல்ல; குப்பைத் தொட்டியில்' என்று கண்ணும கருத்தும் கொண்டவர். பல பொதுஸ்தாபனங்களில் பங்கு கொண்டு அதன் வளர்ச்சிக்கு உழைத்து வருகிறார். நகரமன்ற துணைத் தலைவராகும் முன்பே நகர மன்றப் பள்ளிககு ஐயாயிரம் ரூபாயை அள்ளிக் கொடுத்தவர்,

இந்த இருவரின் பொறுப்பிலே ஒப்படைக்கப் பட்டுள்ள குமபகோணம் நகரத்தைக் கண்டு நமக்குப் பொறுமையாகக் கூட இருக்கிறது. "ஒரு நகரம் எப்படியிருக்கவேண்டும் என்பதற்கு கும்பகோணத்தைப் பார்த்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லும நிலையே வந்தாலும் கூட வியப்பில்லை!

ராஜா ஸ்னோ

மேன்மையான உங்கள் மேனி அழகிற்கு மேலும் அழகு ஊட்டும்.

Use Raja Kasturi Soap for Luxury Bath
Raja Bar Soap for Easy Washing.

Mfrs: **MANYAM & CO., BANGALORE-3.**

GP.





மதுரை ஆர்.எஸ்.பதி வீட்டு கல்யாணம்

சிரஞ்சீவி சந்தான கிருஷ்ணன் — சௌபாக்கியவதி நர்மதா தேவி, திருமணம் சமீபத்தில் சென்னையில் மிகச் சிறப்பாக நடந்தது.





சினிமா உலகில்

[நிருபர் சரடு]

ஒரு பெரிய பைலை' புரட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தார் கண்ணதாசன் அவர் முகத்தில் சுருக்கமும், பிரகாசமும் மாறி மாறிப் பளிச்சிட்டதையும் கண்டேன்.

"வணக்கம்" என்று குரல் கொடுத்தபடி உள்ளே நுழைந்தேன்.

"வாருங்கள், உட்காருங்கள்" என வரவேற்றார் கவிஞர்.

"என்ன அது, சிவகெங்கைச் சீமை வசூல் ஜாபிதாவா?" என்று கேட்டேன்.

அவர் ஆச்சரியத்துடன் "ஆமாம், அது உங்களுக்கு எப்படித் தெரிந்தது?" என்று கேட்டார்.

"உங்கள் முகம்தான் சொல்லி விட்டதே அதை. சில இடங்களில் நன்றாகவும் சில இடங்களில்......." என்று இழுத்தேன்.

"ஆமாம் நான் எவ்வளவுதான் 'இது போட்டிப் படம் இல்லை' என்று கரடியாகக் கத்தினாலும் கூட அதைப் புரிந்து கொள்ள மாட்டேனென்கிறார்களே?"

"நீங்கள் அப்படி நினைக்காமல் இருக்கலாம். ஆனால் உங்கள் சமூக அபிமானிகள் சிலர் வெளியே அடிக்கும் வீண் கொட்டம்...... அது போகட்டும் புரட்சியாரே!"

"புரட்சியாரேயா? அவர் எங்கே இங்கு வந்தார்?" என்று கேட்டு, சுற்று முற்றும் பார்த்தார் அவர்.

"உங்களையேதான் புரட்சியார் என்று நான் சொல்லுகிறேன்" என்றேன் நான்

"நான் என்னய்யா அப்படிப்பட்ட புரட்சி செய்துவிட்டேன்?"

"ஒரு புரட்சியா செய்திருக்கிறீர்கள்? ஒரு தேதியைக் குறிப்பிட்டு விட்டு, அந்தத் தேதியில் படத்தைத் திரையிட முடியாமல் திணறித் தவித்து, நான்கு தவணைகள் மாற்றிப் போடும் இந்த சமயத்தில், ஒரு தேதியைச் சொல்லிவிட்டு மூன்று நாட்களுக்கு முந்தியே படத்தைத் திரையிட்டுக் காட்டும் அதிசயத்தைச் செய்து விட்டீர்களே..., நீர் அசகாய சூரர் தான்."

"ஓ... அதுவா? டில்லி சர்க்கார் பார்க்க வேண்டுமென்று தாக்கீது அனுப்பினார்கள்."

"சார், நான் சொல்கிறேனே என்று வித்தியாசமாக எண்ணக் கூடாது. உங்களுக்கெல்லாம் அதிருஷ்டத்தின் மீது நம்பிக்கை இல்லையே தவிர, அதற்கு உங்கள் மீது நம்பிக்கை இருக்கத்தான் இருக்கு."

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?"

"பின்ன என்ன? உங்கள் படத்திற்கு வலுவில் கிடைத்த ஒரு பெரிய விளம்பரமாகிவிடவில்லையா இது?"

"அது மட்டுமா? அது நாங்களாக ஏற்படுத்திக் கொண்ட விளம்பரம் என்றுகூட சிலர் புரளி பேசுகிறார்கள் உங்கள் காதில் அது விழவில்லையா?"

"விழாமல் என்ன? ஒரு படம் திரையிடப்பட்ட பின்தானே அதில் ஆட்சேபகரமான பகுதிகள் இருக்கின்றன என்பது தெரியும். அப்படியிருக்க படம் திரையிடப்படும் முன்பே சர்க்காருக்கு அது எப்படித் தெரிய முடியும்? ஆகவே, உங்கள்

ஆசாமிகளே கடிதம் எழுதிப் போட்டு..."

"சுத்த அபத்தம்... சுத்த அபத்தம்... நீர் நம்புகிறீரா அதை..."

"நான் நம்புவதும் நம்பாததும் இருக்கட்டும், நீர் செய்த இரண்டாவது புரட்சி சிவகங்கைச் சீமை பத்திரிகைக் காட்சியாகும்."

"என்ன நடந்தது..., என்ன நடந்தது?" என்று பதறிக் கேட்டார் அவர்.

"நான் நினைத்தது சரி. மாஜி பத்திரிகைக்காரராம் உமக்குத் தெரியாமல் இருக்குமா அவர்களை எப்படி நடத்த வேண்டும் என்பது?"

"என்ன நடந்தது?"

"படம் பார்க்க அழைத்த பத்திரிகைக்காரர்களை வயிறு காய நடக்க விட்ட அதிசயம் அன்று நடந்தது."

'மன்னிக்கணும்.'

"சரி. போகட்டும் உங்கள் அடுத்த முயற்சி?"

"மூன்றே மாதத்தில் ஒரு படத்தைத் தயாரித்துத் திரையிடப்போகிறேன்" என்று சொன்னார்.

"உங்கள் முயற்சிக்கு எங்கள் ஆதரவு என்றும் உண்டு" என்று கூறி விடைபெற்றேன்.

அவரது அன்பு நாய்க்குட்டி அவர் காலைச் சுற்றி வந்ததையும் கவனிக்காமல் தம் செல்ல மகள் விஜயசாமுண்டீஸ்வரியைக் கொஞ்சிக் கொண்டிருந்தார் ஜெமினி.

"ஜெமினி சார், 'ஹைடரஜன் பாம்' ஒன்றைத் தூக்கிப் போட்டு ரசிகர்களைக் கலங்க வைத்திருக்கிறீரே" என்று கேட்டேன்.

"ஓ. ஐந்து வருஷத்திற்குப் பின் தான் விலகப்போகும் விஷயமா?"

"ஒரு சின்னத் திருத்தம் செய்து அறிக்கை ஒன்று வெளியிட்டால் நல்லது" "என்ன திருத்தம் அது?"

"'ஐந்து ஆண்டுகளுக்குப் பின் அதிகப் படங்களில் நடிக்க மாட்டேன்.' சரிதானே."

"என் எண்ணமும் அதுவே தான்" என்று ஆமோதித்தார் ஜெமினி.

G.K. புரொடக்ஷன்ஸ்
சகோதரி
டைரக்ஷன்: ஏ. பீம்ஸிங்
ஸ்டூடியோ :
ஏவிஎம்
வசனம்:
மாறன் எம். ஏ.
பாடல்கள்:
கண்ணதாசன்





மூன்று பெண்களின் மனோபாவத்தை நிலைக்களனாக வைத்துப் பின்னப்பட்டிருக்கும் இக்கதை, "நல்ல குடும்பம் ஒரு பல்கலைக் கழகம்" என்ற தத்துவத்தை விளக்குவதாக உள்ளது.

படம் பேசுகிறது

வீரபாண்டிய கட்டபொம்மன்

"வானம் பொழிகிறது—பூமி தருகிறது. வரி உனக்கு நான் ஏன் கட்டவேண்டும்?" என்று கும்பெனியாரை எதிர்த்துக் கேட்ட அஞ்சாநெஞ்சினன் பாஞ்சை கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட சோகக் கதைதான் என் கதை. தான் பிறந்த பொன்னாட்டைக் காக்க, தன் உயிரையே தியாகம் செய்த ஓர் உண்மை வீரனின் ஜீவ சரித்திரம்தான் இது.

வீரபாண்டிய கட்டபொம்மனாக சிவாஜி கணேசன் நடிக்கிறார். நடிக்கவில்லை — வீரபாண்டியனாகவே மாறிவிடுகிறார். இறந்துவிட்ட கட்டபொம்மனைத் தனக்கே உரித்தான தனி நடிப்பினாலும், பேச்சுத் திறத்தினாலும் நம் கண்ணெதிரே கொண்டுவந்து நிறுத்துகிறார். அவரது நடிப்புத்திறன் தான் என்னே! வாய் பேசுகிறது; விழியும் சேர்ந்து பேசுகிறது: உள்ள உணர்ச்சிகளை முகம் அப்படியே பிரதிபலிக்கிறது. போர்க் கோலம் பூண்டு கோபக்கனல் கக்கும்போதும், அமைச்சரைக் கண்டிக்கும்போதும் அந்தப்புரத்தில் ராணி ஜக்கம்மாவுடன் உரையாடும்போதும் ரொம்பவும் இயற்கையாக உள்ளது. இவை அனைத்திற்கும் சிகரம் வைத்தாற்போல் அமைந்துள்ள, கைதியாக பானர் மென் முன் நின்று அன்னிய ஆதிக்கத்தையும் இனத் துரோகி எட்டப்பரையும் கண்டித்துக் காரித் துப்பும் காட்சியினை என்றும் யாராலும் மறக்க முடியாதபடி செய்துவிடுகிறார். விடுதலை வீரர் வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு இன்னும் பெருமை தேடித் தருகிறார் சிவாஜி கணேசன், அவர் வாழ்க.

வெள்ளைத்தேவராக ஜெமினி கணேசன் தனது பாகத்தையும் திறம்பட நடிக்கிறார். குறிப்பாக வைத்தியராக பத்மினி வரும் நேரத்தில் நடிப்பு ரொம்பவும் இயற்கையாக உள்ளது. வேஷம் மிகவும் பொருத்தம். ஊமைத்துரையாக தேவரும், பானர் மேனாக ஜாவர் சீதாராமனும் தானாதி பிள்ளையாக சந்தானமும் நன்கு நடிக்கிறார்கள். ஹாஸ்ய பாத்திரங்கள் பரவாயில்லை. வெள்ளையம்மாவாக பத்மினி சிறப்பாக நடிக்கிறார். "போகாதே என் கணவா" என்று தடுத்து நிறுத்தும் காட்சியிலும், காதல் காட்சியிலும் பத்மினியின் நடிப்பு ரொம்ப நன்றாக உள்ளது. பத்மினியின் அழகுக்கு அழகு செய்கிறது இக் கலர்ப் படம். ராகினியும், வரலட்சுமியும் முத்துலட்சுமியும் தங்கள் பாகத்தை உணர்ந்து நடிக்கிறார்கள்.

கதை-வசனம் சக்தி கிருஷ்ணசாமி. நாடக வசனங்கள் அப்படியே உபயோகிக்கப் பட்டுள்ளன. போருக்குக் கிளம்பும் நேரத்திலும், கடைசியில் பானர்மேன் முன்பு கட்டபொம்மன் பேசும் வசனங்களும் நன்றாகவே அமைந்துள்ளன.

பி. ஆர். பந்தலு டைரக்ஷனிலே உருவானது இம் முழுநீள கலர்படம். கலர் ரம்மியமாக உள்ளது. பின்னணிப் பாடல்கள் சில உள்ளத்தை உருக்கும் படி உள்ளன. "போகாதே என் கணவா" "அல்லேலக்குயிலே" நாட்டுப் பாடல்கள் நன்றாக உள்ளன. வாட் போரையும், வெள்ளையத்தேவர் காளையை அடக்குவதையும் இன்னும் கொஞ்சம் தத்ரூபமாக எடுத்திருக்கலாம். பானர்மேன் ஆங்கிலம் கலந்த கொச்சைத் தமிழில் பேசியிருந்தால் இன்னும் நன்றாக இருந்திக்கும். பிரம்மாண்டமான வெளிப்புற சண்டைக் காட்சிகள் பிரமாதம். தேவருக்கும் ராகினிக்கும் பொருந்தவில்லை; கருணாநிதி பெண் வேஷக் கூத்து விரஸமாக உள்ளது.

சிறந்த படம். எல்லோரும் தவறாமல் பார்க்கவேண்டிய படம்.

சிவகெங்கைச் சீமை

சீர்மிகு சிவகெங்கைச் சீமையிலே வேலுநாச்சியார் மடிந்த பிறகு மருது

குடும்பத்தின் நலனுக்காக தன் உயிரையே தியாகம் செய்யத் தயங்காத நங்கை — "சகோதரி"யில் ராஜ சுலோசனா.

சகோதரர்கள் பட்டம் ஏற்கின்றனர். பாளையங்கோட்டை சிறையினின்று தப்பிய ஊமைத்துரை மருது சகோதரர்களிடத்தில் அடைக்கலம் புக, அவனை தம்மிடம் ஒப்படைக்கும்படி கும்பெனித் துரை மேஜர் வெல்ஷ் உத்திரவிடுகிறார். அதுநாள் வரை நண்பனாக இருந்த மருது சகோதரர்களுக்கும் கும்பெனி துரைக்கும் இதன் காரணமாக விரோதம் வளர்கிறது. சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்த உடையணத்தேவர் "நல்ல சமயயடா" என்று எண்ணி சிவகெங்கைச் சீமையை தன் வசபபடுத்த முயற்சிக்கிறார். சகோதரர்களுக்கும் கும்பெனிக்கும் போர் மூள்கிறது. மருது பாண்டிய சகோதரர்களை கைதாக்கி திருப்பத்தூரிலே தூக்கிலிடுகிறார்கள். இதுதான் என் கதை.

இதை கவிஞர் கண்ணதாசன் எழுதி, அதற்கு வசனமும்-பாடலும் தானே எழுதியுள்ளார். சரித்திரப் பின்னணி கொண்ட கற்பனைக் கதை. வசனமும், பாடலும் தெள்ளும் தமிழ் நடையிலே அழகாக அமைந்துள்ளன.

பெரிய மருதுவாக டி. கே. பகவதி தன் பாகத்திற்கேற்ப ராஜரீக முறைப்படி சிறப்பாக நடிக்கிறார். ஊமைத்துரை மேஜர் வெல்ஷ் உடனபடிக்கையின் போதும், மருது மரத்தை தானே வெட்டப் போகும் நேரத்திலும் நடிப்பு தத்ரூபமாக உள்ளது. சின்ன மருதுவாக முஸ்தாபா துடிப்புடன் நடித்துச் செல்கிறார். ஊமைத்துரை—முருகிருஷ்ணனுக்கு நடிக்க அதிக வாய்ப்பில்லை.

முத்தழகாக எஸ். எஸ். ராஜேந்திரன் நடிக்கிறார். தளபதிகளுள்ள உடலமைப்புமற்றவர்களைப்பார்க்கும்போது மிகவும் மெலிந்தவராகக் காணப்படுகிறார். வேல் தாங்கி வெல்ஷ் துரையை அவையிலே கண்டிக்கும் காட்சி நன்றாக உள்ளது. இருப்பினும் வீரப் பேச்சிற்கேற்ப முகபாவங்கள் அவ்வளவு அதிகமில்லை. அண்ணன் சின்னசாமியோடு சண்டை போடும் காட்சி உடலமைப்பின் காரணமாக இயற்கைக்கு விரோதமாகத்தான் தெரிகிறது. அண்ணியைவிட்டுப் பிரியும் போது நடிப்பு சிறப்பாக உள்ளது. முதலில் கிழவனாக வரும்போதும், கடைசியில் மாறுவேடத்திலும் நடிப்பு பரவாயில்லை. சின்னச்சாமி தேவராக வீரப்பாவும், உடையணத்தேவராக நாராயணசாமியும் நடிக்கிறார்கள். மேஜர் வெல்ஷாக வஹாப் காஷ்மீரி நன்றாகவே நடித்துள்ளார். தமிழ் கலவாத ஆங்கிலம் பேசுகிறவர், எபபடி தமிழில் சொல்லும் பதிலைப் புரிந்து கொள்கிறார் என்று மட்டும் கேட்டுவிடாதீர்கள்! எம். என். ராஜம் எப்போதும் போல் நன்றாகவே நடிக்கிறார். சிட்டாக வரும் கமலாவின் நடிப்பைவிட கடைசியில் ஆடும் ஊழிக்கூத்து நடனம் நன்றாக உள்ளது. காதல் கட்டங்கள் சோபிக்கவில்லை. சாயி-சுப்புலெட்சுமி நடனம் விறு விறுப்பாக உள்ளது.

கே. சங்கர் டைரெக்ட் செய்கிறார். ஜெமினி தம்பு காமிராவைக் கையாண்டுள்ளார். வெளிப்புறக் காட்சிகளும், நீரில் சண்டை போடுவதும் நன்கு எடுக்கப்பட்டுள்ளன. வீரம் நிறைந்த மருது சகோதரர்கள் போடும் வாட்போரை இன்னும் தத்ரூபமாக எடுத்திருக்கலாம். ஹாஸ்யம் இல்லை. பின்னணிப் பாடல்கள் நன்றாக உள்ளன. பொதுவாக ஓஹோ இல்லை. படம் பரவாயில்லை.

பரதநாட்டியப் பயிற்சி பெற்றுள்ள கலையரசி குமாரி கே. ஆர். சந்திரகலா, நாராயணன் கம்பெனியார் படத்தில் நடித்து வருகிறார்.



ஈ. வி. சரோஜா

நாட்டியத்தின் மூலம் படஉலகில் புகுந்து, நடிப்பின் மூலம் நிரந்தரமாக இடம் தேடிக்கொண்டுவிட்டார்.

போட்டோக்கள் : வி. சிவராம

லலிதா

"படிதாண்டாப் பத்தினி" யில் புது முகமாகப் பிரவேசித்தவர் "சைனா பஜார்" என்ற படத்தில் பிரதம பாகத்தில் நடித்து வருகிறார்.

மல்லிகா

"பேசும் பொற்சித்திரம்" வெளிவந்ததும் அதில் நடித்துள்ள இவருக்கு ஒரு பொன்னான எதிர்காலம் திரையுலகில் காத்திருக்கிறது.

சந்திரகாந்தா

“ மாய மனிதன் ” படத்தில் முதல் முதலாக கதாநாயகியாக நடித்த இவர், இன்று பல படங்களில் நடிக்க சந்தர்ப்பம் பெற்றுள்ளார்.

கதாபாத்திரங்கள் :

பெண்கள் உஷா, கீதா, (இரட்டை சகோதரிகள்) ரகு, ரவிசுந்தர், சுபத்ரா

நேரம் : காலை

காட்சி 1

(உஷா பரதநாட்டியம் ஆடிக்கொண்டிருக்கிறாள். ரகு வருகிறான்.)

ரகு:—பேஷ்... பேஷ்... உஷா, உன்னுடைய இந்த பாவம் ஜோராக இருக்கிறது. நான் அப்படியே சிலையோ

என்று எண்ணி ஏமாந்து போய் விட்டேன்

உஷா: (கோபத்துடன் முகத்தைச் சுளித்துக் கொண்டே) போதும் அத்தான், நிறுத்துங்கள். திடீரென்று வந்து இப்படித்தான் ஆட்டத்தைக் கலைப்பதா? உங்களுடைய குரலை திடீரென்று கேட்டதால் பயந்து போய்விட்டேன். காலையில் இருந்தே எனக்கு அந்த பாவம் வரவில்லையே என்று கஷ்டப்பட்டுக் கற்றுகொண்டிருக்கிறேன். உங்களுக்குக் கொஞ்சமாவது ரஸிகத் தன்மை இருந்தால்தானே?

ரகு: என்ன உஷா, இப்படிக் கோபித்துக்கொள்கிறாய்? இது கூட உன்னுடைய ஆட்டத்தைச் சேர்ந்த பாவம் தானா?

உஷா: அத்தான், உங்களுக்கு கலை என்றால் என்ன தெரியும்? கலை ரூபாய்க்கு எத்தனை படி என்று கேட்பீர்கள் நீங்கள். அதுவே ரவி சங்கராக இருந்தால் எப்படி ரஸிப்பார் தெரியுமா?

சுபத்ரா: என்ன உஷா இது? எப்பொழுது பார்த்தாலும் ஆட்டம் ஆட்டம் தானா? சம்சாரததில் உள்ளவர்கள் இப்படி சதா ஆடிக் கொண்டு இருப்பார்களா? ஏதோ குழந்தையாக இருக்கும்பொழுது ஆசைப்பட்டாயே என்று பரதநாட்டியம் சொல்லிக் கொடுத்தது, பெரிய அனர்த்தமாகி விட்டதே? போறாத வேளைக்குத் தகுந்தாற்போல அந்த ஆட்டக்கார னுடன் சிநேகம் வேறே செய்கிறாய்?

ரகு: ஆமாம் உஷா, நானும் அதைச் சொல்வதற்காகத்தான் வந்தேன். அந்த ரவிசுந்தருக்கு நல்ல பெயரே கிடையாது. நீ இனிமேல் அவனுடன் சிநேகம் செய்யாதே?

உஷா: (கோபத்துடன்) உங்களுக்கு நல்லவர்களைக் கண்டாலே பிடிக்காது. நீங்கள் ஒன்றும் எனக்கு புத்தி சொல்ல வரவேண்டாம், நான் அவருடன் கூட ஆடத்தான் போகிறேன்.

சுபத்ரா: இதோ பார் உஷா, நீ இப்படி எல்லாம் பேசுவது நன்றாக இல்லை. உன்னைப் போல்தான் கீதா நாட்டியம் கற்றுக்கொண்டாள். அவள் இப்படியா அடம்பிடிக்கிறாள். பேசாமல் அத்தான் சொல்வதைக் கேள் உஷா.

உஷா: கலகம் செய்வதற்கு என்று தான் இந்த அத்தான் காத்துக்கொண்டிருக்கிறாரே, போறாதா? அம்மா இதோ பாரு, நான் ரவிசுந்தருடன் கல்கத்தாவிற்குப் போகப்போகிறேன். என்னை யாரும் தடுக்க முடியாது. இன்னும் மூன்று நாளில் ஐம்பது பேர்கள் சேர்ந்துகொண்டு கோஷ்டியாகப் போகப்போகிறார்கள். அவர்களுக்குத் தலைவராக ரவிசுந்தர் வரப்போகிறார் அவருடன் கூட நானும் வருவதாக ஒப்புக்கொண்டிருக்கிறேன். இனிமேல் மாற்ற முடியாது. அதோ, ரவி கூட வந்திருக்கிறார். அவருடன் கூட கடைத்தெருவு வரையில் போய் வருகிறேன.

(போகிறாள்.)

சுபத்ரா: (கண்ணீர் விடுகிறாள்.) ரகு, நான் என்னடா செய்வேன். உஷா இப்படிக் குதிக்கிறாளே. இரட்டையாகப் பிறந்த குழந்தை நன்றாக வளர்ந்தால் திருஷ்டி வந்துவிடுமென்று கீதாவை உன்னுடைய தாயாரிடம் சிறு குழந்தையிலேயே கொடுத்துவிட்டு இவளை மாத்திரம் நான் வளர்த்து வந்தேன். அத்தை வீட்டில் கீதா சமர்த்தாக வளரும் பொழுது என்னுடைய பாவம் இவள் மாத்திரம் இப்படி அடங்காப் பிடாரியாக வளருவானேன்! எல்லாம் என்னுடைய பாவம் தான்?

ரகு: கவலைப்படாதீர்கள், பார்க்கலாம். (கீதா வருகிறாள்.)

கீதா: (பதற்றத்துடன்) என்ன அத்தான், அம்மா எதற்காக அழுகிறாள்? என்ன நடந்தது? உஷா எங்கே? அம்மா, ஏன் அழுகிறாய், சொல்லேன்?

சுபத்ரா: நான் என்ன செய்வேன் கீதா? நான் எவ்வளவு சொன்னாலும் கேட்கமாட்டேன் என்கிறாள் உஷா. அந்த சோதா ரவிசுந்தருடன் கல்கத்தாவுக்குப் போகத்தான் போவேன் என்று ஒரே பிடிவாதம் பிடிக்கிறாள்.

கீதா: என்ன அத்தான் இது, உண்மையாகவா? அந்தப்பாவி ரவிசுந்தருடன் போகவே கூடாது. எப்படியாவது தடுத்துவிடுங்களேன் அத்தான்?

ரகு: அவளை எப்படி கீதா தடுப்பது? அவள் நம்முடைய வார்த்தையைக் கேட்டால்தானே! அவள் தான் ஒரே பிடிவாதமாக இருக்கிறாளே.

கீதா: அத்தான், நான் சொல்வதைக் கேளுங்கள். நாம் எப்படியாவது ஒரு வழி கண்டுபிடித்து அவளைத் தடுத்துவிடலாம். அம்மா, கவலைப்படாதே. அத்தானும்நானுமாகப்பார்த்துக்கொள்கிறோம். அத்தான், வாருங்கள் போகலாம். அத்தை நமக்காக சாப்பிடாமல் காத்துக்கொண்டிருப்பாள்.
(போகிறார்கள்)

காட்சி 2

உஷா: (மனதிற்குள்) இது என்ன அதிசயமாக இருக்கிறதே, கல்கத்தா போவது பற்றி வீட்டில் என்ன ரகளை நடக்குமோ என்று பயந்தோமே! அம்மாவோ அத்தானோ அந்தப் பேச்சை எடுக்கவில்லையே? அப்பாடா, இனி மேல் நம்முடைய ஜோலிக்கு அத்தான வரமாட்டான். நாம் ஒரு மாதம் ஆனந்த மாக சுற்றுப்பிரயாணம் போய் வரலாம். (ஊருக்குப் புறப்படுவதற்கு மூட்டை கட்டுகிருள்.) அப்பாடா, எல்லா ஏற்பாடுகளும் செய்தாகிவிட்டது. இன்னும் மூன்று மணி நேரம்தான் பிறகு......ஆமாம், இந்த அத்தான் ஏன் வரவில்லை. அவனிடம் சொல்லிவிட்டுப் போகலாமா, வேண்டாமா?

(கீதா வருகிருள்.)

கீதா: என்ன உஷா, புறப்பட்டு விட்டாயா? கடைசியில் உன்னுடைய இஷ்டப்பிரகாரமே தான் நடக்கிருய், ஆமாம், போனல் எத்தனை நாட்களில் திரும்பி வருவாய். உன்னுடன் கூட யார் யார் வருகிருர்கள்.

உஷா: எனக்கு அந்த விவர மெல்லாம் தெரியாது? நானும் உன்னைப் போல சந்தேகப் பிராணியா என்ன? குடைஞ்சு குடைஞ்சு கேட்பதற்கு எனக்குத் தெரியாது? ரவிசுந்தர் வருகிருர், இன்னும் ஐம்பது பேர் வரப் போகிறதாகச் சொன்னர்.

கீதா: சரி உஷா, வா, நாம் கீழே போகலாம். அத்தானும் வந்திருக்கிருர். போகும் பொழுது உன்னுடன்கூட 'டிபனு'வது சாப்பிடலா மென்றுதான் வந்திருக்கிருேம்.

உஷா: கீதா, என்மேல் கோபமா? கலையின்மேல் உள்ள ஆசையினல்தான் கோபித்துக்கொண்டேன். உன்னுடைய சகோதரி எவ்வளவு புகழுடன் திரும்பி வரப்போகிறேன் பார். நான் புகழடைந் தால் உனக்குப் பெருமை இல்லையா? (தாயாரைப் பார்த்து) அம்மா, பரத நாட்டியம் ஆடுவதற்கு என்று செய்து வைத்த வைர நகைப் பெட்டியை எங்கே வைத்திருக்கிருய்?

சுபத்ரா: நகைதானே, பீரோவில் வைத்திருக்கிறேன், எடுத்துக் கொள்ளேன்.

உஷா: (காப்பியைக் குடித்துக் கொண்டே), அம்மா கா... பி... ம... ய... (மயங்கி விழுகிருள்.)

சுபத்ரா: (பரபரப்புடன்) வா கீதா, சீக்கிரம் வா. இவளைப் பிடித்து படுக்கை யில் படுக்க வை. அந்தப் பாவி வந்து விடப் போகிருன். நீ சீக்கிரம் புறப்படு, ரகு, என்ன செய்கிருய்.

ரகு: ஆமாம், கீதா, நீ போய் உஷா வின் உடுப்புகளைப் போட்டுக்கொண்டு தயாராக இரு. நானும் அந்த மேக்கப் செய்யுமிடத்திற்குப் போய் கண்ணம்மா வின் வேஷம் போட்டுக் கொண்டு வருகிறேன், மாமி. நான் சொன்னது ஞாபகம் இருக்கட்டும். உஷாவிற்கு சீக்கிரத்தில் மயக்கம் தெளியாது. கவலைப் படாதீர்கள். நான் போய் வருகிறேன். (போகிருன்)

(ரவிசுந்தர் வருகிருன்.)

ரவிசுந்தர்: என்ன உஷா, தயார் தான?

(உஷா வேஷத்தில் இருக்கும் கீதா வருகிருள்.)

உஷா: ஓ, எப்பொழுதோ தயாராகி விட்டேனே?

ரவிசுந்தர்: என்ன உஷா, உன் னுடைய குரல்கூட ஏதோமாதிரி இருக்கிறதே உடம்பு சரி இல்லையா என்ன?

உஷா: ஆமாம் சுந்தர், காலையி லிருந்து ஒரே ஜலதோஷம்.

ரவிசுந்தர்: அடடா, மறந்துபோய் விட்டேனே. உன்னுடைய வைர செட் நகையை எடுத்துக் கொண்டாயா? அதைப் போட்டுக்கொண்டு ஆடினால் தான் உன்னுடைய ஆட்டம் அங்கே சோபிக்கும்.

உஷா: எல்லாம் ரெடியாக எடுத்து வைததிருக்கிறேன்.

சுபத்ரா: இதோ பாருங்கள் சுந்தர், உஷாவை அனுப்புவதில் ஆக்ஷேபணை இல்லை. ஆனால் வேலைக்காரி கண்ணம்மா வையும் கூட அழைத்துக் கொண்டு போனால்தான் எனக்கு நிம்மதியாக

இருக்கும். உஷாவைக் கவனித்துக் கொள்வதற்குக் கண்ணம்மா இல்லா விட்டால் உஷாவிற்குச் சரிப்படாது. உங்களுக்கு அவள் துணை வருவதில் ஆக்ஷேபணையிருக்காது என்று நினைக்கிறேன்.

உஷா: ஆமாம் சுந்தர், கண்ணம்மா வந்தால் நமக்கு மிகவும் உபகாரமாக இருககும். அவளையும்கூட அழைத்துக் கொண்டு போவதாக நான் ஒப்புக் கொண்டிருக்கிறேன்.

ரவிசுந்தர்: [மனதிற்குள்) இதென்னடா இது சனியன், வேலைக்கார சனியனைக் கூட எதற்கு அழைத்துப் போவது? ஹூம், வந்து தொலைக்கட்டும். ஏதாவது ஆக்ஷேபணை சொன்னால் உஷாவையே அனுப்ப முடியாது என்று சொல்லிவிடுவார்கள். (உரக்க) அதற்கென்ன உஷா, உன்னுடைய வேலைக்காரி தாராளமாக வரட்டுமே.

சுபத்ரா: இதோ போய் கண்ணம்மாவை அழைத்துக் கொண்டு வருகிறேன். (பின் பக்கம் போகிறாள்).

சுபத்ரா: அடடா ரகு! கண்ணம்மா வேஷம்தான் உனக்கு எப்படிப் பொருத்தமாக இருக்கிறது. சீக்கிரமாக வா. அவர்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். கீதாவும் நீயும் ஜாக்கிரதையாகப் போய் வர

இவர் இப்படி நிற்பது போட்டோவுக்கு 'போஸ்' கொடுக்க அல்ல; மாடர்ன் தியேட்டர்ஸின் "தலை கொடுத்தான் தம்பி"யில் ஒரு ரசமான கட்டத்தில் மாலினி இப்படித் தோன்றுகிறார்.

வேணுமே என்று தான் கவலையாக இருக்கிறது.

ரகு: மாமி கவலைப்படாதீர்கள். போய் இரண்டு நாட்களில் திரும்பி வந்து விடுகிறோம். ரவிசுந்தர் நல்லவனா கெட்டவனா என்பதைத் தெரிந்து கொண்டு வருகிறேன். அப்படி ஆடவேண்டி வந்தாலும் உஷாவிற்குப் பதிலாக கீதா ஆடுகிறாள். கவலைப்படாதீர்கள்.

(இடுப்பில் சந்தைத் துணி மூட்டையுடன் வரும் வேலைக்காரியைப் பார்த்து அருவருப்புடன் முகத்தைத் திருப்பிக் கொள்ளுகிறான் ரவிசுந்தர்.)

காட்சி—3

[விமான நிலையத்திற்குப் போனதும் டிக்கெட் வாங்கிக் கொண்டு வருகிருன் ரவிசுந்தர்.]

உஷா: (கலவரத்துடன்) திரும்பித் திரும்பிப் பார்த்து விட்டு, என்ன சுந்தர் இங்கே நம்மைத் தவிர வேறு ஒருவரையும் காணுமே. நம்முடன் கூட இன்னும் 50 பேர் வரப்போவதாகச் சொன்னயே?

ரவிசுந்தர்: என்ன உஷா அப்படிப் பார்க்கிருய்? 50 பேரையும் விமானத்தில் கூட்டிக் கொண்டு போக முடியுமா என்ன? அவர்கள் எல்லோரும் நாளைக்கு ரயிலில் வருகிருர்கள். நாம் முன்னதாகச் சென்று ஏற்பாடுகள் செய்து வைக்கவேண்டும், அதற்காகத்தான் விமானத்தில் போகிருேம்.

(அவர்கள் விமானத்தில் ஏறிக்கொள்ள அது புறப்படுகிறது.)

காட்சி—4

இடம்: கல்கத்தா

ரவிசுந்தர்: இந்த பங்களா சுகமாக இருக்கிறதா உஷா? இதோ பார் இந்த அறைகள் ஏர்கண்டிஷன் செய்யப்பட்டவை. இந்த அறைதான் உன்னுடையது. இந்த பங்களா முழுவதும் காலி. நமக்காக கஷ்டப்பட்டு என்னுடைய சிநேகிதன் இந்த பங்களாவை ஏற்பாடு செய்து வைத்திருக்கிருன். கண்ணம்மா இதோ பார், என்னுடைய வேலைக்காரனை அழைத்துக் கொண்டு போய் ஊரைச் சுத்திப் பார்த்து விட்டு வா.

உஷா: (பயத்துடன்) வேண்டாம் சுந்தர், கண்ணம்மா எங்கேயும் போக வேண்டாம்.

ரவிசுந்தர்: ஏன், பயமாக இருக்கிறதா? பரவாயில்லை, போய் வா கண்ணம்மா.

(உஷாவிடம் ரவிசுந்தர் நெருங்கி வருகிருன்.)

ரவி: என்ன உஷா, ஏன் ஒரு மாதிரியாக உட்கார்ந்து கொண்டு இருக்கிருய். நான் இருக்கும் பொழுது உனக்கு என்ன கவலை?

உஷா: கவலை என்ன? பிரயாண அலுப்புத்தான். வேறே ஒன்றுமில்லை.

ரவிசுந்தர்: இதோ பார் உஷா, நல்ல உடுப்பைப் போட்டுக் கொள்.

அச்சடிப்பதற்கும் இதர உபயோகங்களுக்கும் ஏற்ற எல்லாவிதமான அட்டைகள், காலிகோ, நியூஸ் பிரின்ட், ஆர்ட் பேப்பர், கிராப்ட் பேப்பர் முதலியவைகள் எம்மிடம் எப்போதும் கிடைக்கும்.

★

உங்கள் தேவைக்கு உடனே எழுதுங்கள்

பி. எஸ். நஞ்சப்ப செட்டி & சன்ஸ்

2/34, தங்கசாலை வீதி, சென்னை - 3.

டெலிபோன்: 55000

கலை உலகிலே பலருக்குத் 'தோழனு'க இருந்து புகழுடம்பு எய்திவிட்ட கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் நடித்து வரவிருக்கும் "தோழன்" படத்தில் கலைவாணர், என். எஸ். கே. மதுரம் மற்றும் சில நடிகர்களுடன்.

உஷா: இப்பொழுது எதற்காக உடுத்திக் கொள்ள வேண்டும். இன்றைக்கே ஆடவேண்டுமா என்ன! மற்றவர்கள் எல்லோரும் எப்பொழுது வருவார்கள்?

ரவிசுந்தர்: இதோ பார் உஷா, அதைச் சொல்வதற்காகத்தான் வந்தேன். உன்னை இங்கே ஆடுவதற்காக அழைத்துக் கொண்டு வரவில்லை. உன்னை விவாகம் செய்து கொள்வதற்காகத் தான் அழைத்துக் கொண்டு வந்தேன். என்னை உனக்குப் பிடிக்கிறதா இல்லையா?

உஷா: இதெல்லாம் என்ன பேச்சு சுந்தர், நீங்கள் சொல்வது புரியவில்லையே.

ரவிசுந்தர்: உஷா உன்னைப் பார்த்த முதல் நாளிலிருந்தே என் மனம் என் வசம் இல்லை. அதனல்தான் உன்னை ரிஜிஸ்டர் மேரேஜ் செய்து கொள்வது என்று தீர்மானம் செய்து கொண்டு உன்னை இவ்வளவு கஷ்டப் பட்டு இங்கு அழைத்துக் கொண்டு வந்தேன்.

உஷா: (பதற்றத்துடன்) என்ன சுந்தர் நமக்கு விவாகமா? உமக்குப் பைத்தியமா என்ன! வேண்டாம் சுந்தர், இந்த அநியாயம் நடக்காது, உன்னுடைய சூழ்ச்சிகளுக்கு நான் உடன்பட முடியாது.

ரவிசுந்தர்: இதோ பார் உஷா, நீ எவ்வளவு கத்தினலும் உன்னை யார் கேட்கப் போகிருர்கள், உன்னுடைய வேலைக்காரியைக் கூட வெளியில் அனுப்பி விட்டேன். ஹூம், உடுப்புகளை அணிந்து கொண்டு புறப்படு. கார் வந்து விடும். இன்றைய தினம் ரிஜிஸ்டர் மேரேஜ் செய்து கொண்டு நாளைக்கு விமானத்தில் அமெரிக்காவுக்குச் சென்று விடலாம். நாம் திரும்ப ஆறு மாதமாகும், அதற்குள் உன்னுடைய தாயார் உன்னை மன்னித்து விடுவாள்.

உஷா: வேண்டாம் சுந்தர், நாம் இப்பொழுதே மதருஸிற்குச் சென்று விடுவோம். என்னுடை தயாரிடம் சொல்லி நம்முடைய விவாகத்திற்கு

ஏற்பாடு செய்யும்படியாகச் சொல்லு கிறேன். சரிதானு.

ரவிசுந்தர்: ஹா....ஹா...ஹா...ா...... (விழுந்து விழுந்து சிரிக்கிருன்) உஷா நீ பலே ஆசாமிதான், மெள்ள ஆங்கிருந்து தப்பித்துச் செல்வதற்குப் பார்க்கிருயா? அதுதான் இந்த சுந்தரிடம் நடக்காது. உன்னுடைய தாயார் எப்படிப்பட்டவள் என்பது எனக்குத் தெரியாதா!

உஷா: நீ செய்யும் சூழ்ச்சிகளுக்கு நான் உடன்பட முடியாது. என்ன செய்வாய்?

ரவிசுந்தர்: அடடா, என்ன உஷா இது இப்படிப் பிடிவாதம் பிடிக்கிருய். ஏதடா நல்லதனமாகச் சொல்லிப் பார்த்தேன், கேட்காவிட்டால் உன்னை பலவந்தமாகத் தூக்கிக் கொண்டு போய் காரில் ஏற்றிக் கொண்டுதான் போகணும்.

உஷா: (மனதிற்குள்) ஐயையோ, இப்படித் தனியாக வந்து அகப்பட்டுக் கொண்டு விட்டோமே, துணைக்காக வந்த அந்த அத்தானும் எங்கேயோ போய்விட்டாரே. என்ன செய்வேன். (கண்ணீர் விட்டுக் கொண்டே உடுப்பு அணிந்து கொள்கிருள்.)

ரவிசுந்தர்: பேஷ், இப்பொழுது தான் பழைய உஷாவாக இருக்கிருய். எங்கே கொஞ்சம் சிரி பார்க்கலாம்.

உஷா: (அழுதுகொண்டே) வேண்டாம் சுந்தர் இந்த அநியாயம், வேண்டாம். நான் வர முடியாது. நாட்டியம் ஆடுவதற்கு என்று கூறி அழைத்துக் கொண்டு வந்து விட்டு இப்படி அநியாயம் செய்யலாமா?

ரவிசுந்தர்: வா உஷா, நாழிகை ஆகிறது. உன்னுடைய புலம்பல் எல்லாம் இருக்கட்டும் (தர தர வென்று இழுத்துக் கொண்டு போய் டாக்ஸியில் ஏற்றி விட்டுத் தானும் ஏறிக் கொள்கிருன். கார் புறப்படுகிறது. கீதா கவலையுடன் உட்கார்ந்து கொண்டிருக்கிருள்.)

[ரிஜிஸ்தர் ஆபீஸில் சுந்தர் தவியாய்த் தவிக்கிருன்]

ரவிசுந்தர்: சோம்பேறிகள். எவ்வளவு நேரம் காத்துக் கொண்டு இருப்பது. டேய் முனியா, போய்ப் பார்த்து விட்டு வா ரொம்பவும் நேரம் ஆகுமென்ருல் வீட்டிற்காவது போய் வரலாம் (கதவைத் திறந்து கொண்டு போலீஸ்காரர்கள் பர பர வென்று உள்ளே நுழைகிருர்கள்.)

ரவிசுந்தர்: யாரது உள்ளே நுழைவது? இது தனி அறை. இங்கே லேடீஸ் இருக்கிருள். வேறு யாரும் இங்கே இல்லை.

போலீஸ்காரர்: வேறு யாரையும் தேடிக் கொண்டு இங்கே வரவில்லை. உன்னைத் தேடிக் கொண்டுதான் வந்தேன். கையை நீட்டு.

ரவிசங்கர்: (திடுக்கிட்டு) என்ன? என்னையா அரெஸ்டு செய்கிறீர்கள்? நான் என்ன தவறு செய்தேன்.

போலீஸ்காரர்: உங்களைத்தான் அரெஸ்டு செய்ய வந்தோம், மரியாதையாகக் கையை நீட்டுங்கள்.

ரவிசங்கர்: (கோபத்துடன்) என்னை எதற்காக அரெஸ்டு செய்கிறீர்கள்?

(ரகு வருகிருன்,)

(ரகுவைக் கண்டதும் சோர்ந்துபோய் நாற்காலியில் சாய்ந்து விடுகிருன் ரவி சுந்தர். உஷா ஓடிவந்து "அத்தான், அத்தான் என்னைத் தனியாகத் தவிக்க விட்டு விட்டு எங்கே போனீர்கள்?"

ரகு: என்ன காரணமா? நாட்டியம் ஆடுவதற்கு என்று ஏமாற்றி அழைத்துக் கொண்டு வந்து விட்டு ஒரு பெண்ணை ரிஜிஸ்டர் ஆபீஸிற்கு அழைத்துக் கொண்டு வந்தீர்களே, அதற்காகத் தான் அரெஸ்டு செய்கிருர்.

சுந்தர்: (ஏளனமாக) என்ன? ஏமாற்றி அழைத்துக் கொண்டு வந்தேனே? யார் சொன்னது. உஷாவையே கேளுங்கள். அவளாகத்தான் இஷ்டப்பட்டு வந்தாள்.

உஷா: பொய்... பொய்... நான் இஷ்டப்பட்டு வரவில்லை, முதலில் நான் உஷாவே இல்லை.

சுந்தர்: துள்ளிக் குதித்தபடியே, என்ன, நீ உஷா இல்லையா?

உஷா: ஆமாம், நான் உஷா இல்லை, இதோ பாருங்கள் ஸார், நான் அவளுடைய சகோதரி கீதா. நாங்கள் இரட்டையாகப் பிறந்தவர்கள். ஆதலால் இவருக்கு எங்களுக்குள் வித்தியாசம் தெரியவில்லை. உஷாவை இவர் சூழ்ச்சி செய்து ஏதோ காரணத்திற்காக அழைத்துக் கொண்டு வருகிருர் என்று சந்தேகப்பட்டுத்தான் அத்தானும் நானுமாக வதோம்.

சுந்தர்: பொய்... பொய்... இந்த அத்தான் நேற்று எங்களுடன் வரவே யில்லை.

ரகு: உங்களுடன் கூட வந்த கண்ணம்மா யார் ஸார், நான்தான் அது. உங்களுக்கு சந்தேகம் இருந்தால் இந்தப் பையில் இருக்கும் உடைகளைப் பார்த்துக் கொள்ளுங்கள்.

போலீஸ்காரர்: ஸார், எங்களுக்கு நேரம் ஆகிறது போய் வருகிறோம், (சுந்தரை இழுத்துக்கொண்டு போகிறார்கள்.)

கீதா: அத்தான், உன்னைக் காணமல் நான் எவ்வளவு பயந்து போய்விட்டேன் தெரியுமா? ஆமாம் அத்தான், நீங்கள் அந்த வேலைக்காரனுடன் கூட சென்றீர்களே, எப்படி இந்த ஆபீஸிற்கு வந்தீர்கள்,

ரகு: என்னை வேலைக்காரனுடன்கூடப் போகும்படியாக அவன் சொன்னதுமே எனக்கு சந்தேகமாக இருந்தது. கொஞ்ச தூரம் போனதும் அந்த வேலைகாரனை ஏமாற்றிவிட்டு நான் திரும்பி வந்து தோட்டத்திற்குள் ஒளிந்து கொண்டிருந்தேன். உன்னை பலவந்தமாக டாக்ஸியில் ஏற்றிவிட்டு டிரைவரிடம் இந்த ஆபீஸின் விலாசத்தைச் சொல்லும் பொழுது கேட்டுக்கொண்டிருந்தேன். உடனே ஒரு டாக்ஸியில் ஏறிக்கொண்டு பே லீஸ் ஸ்டேஷனுக்குப் போய் இவர்களையும் அழைத்துக் கொண்டு வந்து சேர்ந்தேன்.

கீதா: அத்தான், நாம் வராமல் உஷா வந்திருந்தால் அவளுடைய கதி என்ன ஆகியிருக்கும், (பயத்துடன் கண்களை மூடிக்கொள்கிருள்.)

காட்சி—6

(உஷா சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டிருக்கிருள்.)

உஷா: அம்மா, எனக்கு என்ன உடம்பு? நான் ஏன் படுத்துக்கொண்டு இருக்கிறேன். ஐயோ, இந்த பாழாய்ப் போன உடம்பால் என் பிரயாணம் நின்று போய் விட்டதே. அம்மா, ரவி சுந்தர் என்ன சொன்னர்? அவருக்கு என்மேல் கோபமா?

சுபத்ரா: கோபித்துக் கொண்டு என்ன செய்வது, நீ திடீரென்று மூர்ச்சித்து விழுந்ததைக் கண்டதும் பயந்து போய் பேசாமல் போய்விட்டான். இந்தா, தினசரிப் பத்திரிகை இதைப் படித்துக் கொண்டு இரு, வருகிறேன், (போகிருள்.)

(உஷா மேஜைமேல் இருந்த தினசரியைப் படிக்கிருள்)

"ஏமாற்றம்! ஏமாற்றம்! ஏமாற்றம்! நாட்டியத்திற்காக வென்று ஏமாற்றி கல்கத்தாவிற்கு அழைத்துக் கொண்டுபோய் நாட்டியராணி உஷாதேவியை மணம் புரிவதற்கு முயன்ற ரவி சுந்தர் என்பவரைக் கைது செய்தார்கள். அவருடைய சூழ்ச்சியை முதலிலேயே தெரிந்து கொண்ட அவருடைய சகோதரி கீதாவும் அத்தான் ரகுவும், இந்த மோசடியில் இருந்து உஷாதேவியைக் காப்பாற்றினர்கள்". என்று தினசரியில் இருந்ததைக் கண்டதும் "அம்மா அம்மா" என்று இரைந்தாள் உஷா.

உஷா: அம்மா இது என்னம்மா சமாசாரம் ஒன்றும் புரியவில்லையே...

சுபத்ரா: ஐயோ ரகுவும் கீதாவும் ஆபத்து ஒன்றுமில்லாமல் வந்து சேரணுமே, எல்லாம் உன்னல் வருவது தான். நீ பிடிவாதமாக இருந்ததால் உன்னை அனுப்புவதற்கு இஷ்டமில்லாமல், உனக்குப் பதிலாக கீதாவும் துணைக்கு அத்தானும் போனர்கள். ரவி சுந்தர், மிகவும் நல்லவன் என்று குதித்தாயே. இப்பொழுதாவது அவனுடைய மோசடியைத் தெரிந்து கொள். (கீதாவும் ரகுவும் வருகிருர்கள்.)

கீதா: அம்மா... அம்மா... உஷா உடம்பு எப்படி இருக்கிறது?

சுபத்ரா: வந்தாயாடி கண்ணே, (ஓடிவந்து அணைத்துக் கொள்கிருள்)

உஷா: (அத்தானைப் பார்த்து வெட்கத்துடன்) என்னல் தானே உங்களுக்கு இவ்வளவு கஷ்டம்.

கீதா: பைத்தியமே. எனக்கு பதில் நீ போயிருந்தால் உன்னுடைய கதி என்ன ஆயிருக்கும்...?

ரகு: என்ன ஆகும், உஷாதேவிக்கும்... ரவிசுந்தருக்கும்... வி...வாகம்...

உஷா: (கண்ணீருடன்) அத்தான் அப்படியெல்லாம் சொல்லாதீர்கள்.

கீதா: இதென்ன பிரமாதம் ரவி... என்கிற இடத்தில் ரகு என்று போட்டு விட்டால்... (உஷா வெட்கத்துடன் தலையைக் குனிந்து கொள்கிருள்.)

(திரை விழுகிறது)

வாழ்க்கை(வி)சித்திரம்
MN
ராஜம்
அமைப்பு:
குண்டூசிக்குழு
சித்திரம்:
முத்து


மதுரையில் 1935ம் வருடம் பிறந்தார்.
ஐந்து வயதிலேயே நாடகத்தைப்பார்த்து விட்டு தந்தையிடம் அதேமாதிரி நடித்துக் காட்டுவார்
தகப்பனர் காலமானவுடன் எட்டாவது வயதில் தாயாரின் அனுமதியின் பேரில் நாடகத்தில் நடிக்க, எம்.கே.ராதாவிடம் என்.எஸ். கிருஷ்ணன் அவர்களுக்கு சிபார்சு கடிதம் பெறுகிறர்
என்.எஸ்.கே.தயாரிப்பான நல்ல தம்பி பயித்தியக்காரன் முதலிய படங்களில் நடிக்க சந்தர்ப்பம் கிடைத்தது
என்.எஸ்.கே நாடகக்கம்பெனியிலிருந்து விலகி டி.கே.எஸ் நாடகக்கம்பெனியில் சேருகிறர்
அவர்களுடைய பிரபல நாடகங்களான 'ரத்தபாசம்' 'கள்வனின் காதலி' முதலிய நாடகங்களில் முக்கிய பாகங்களில் நன்கு நடித்து ரசிகர்களின் பாராட்டுதலைப் பெறுகிறர்
டி.கே.எஸ். கம்பெனி கலைக்கப்பட்டதும் தொடர்ந்து சினிமாவில் நடித்து 'மாப்பிள்ளை' படத்தில் நர்ஸாக வந்து டோஸ் கொடுத்தார்!

"மனிதனும் மிருகமும்" படத்தில் பிரதம பாகத்
தில்வந்து நன்றாக நடித்து நட்சத்திர
உலகில் அடி எடுத்து வைத்தார்
ரத்தக்கண்ணீரில் அவரது அபார
நடிப்பு படாதிபதி உலகில் பரபரப்பை
உண்டுபண்ணியது உடனே, மாட
ர்ன் தியேட்டர்ஸில் மூன்று படங்களு
க்கு ஒப்பந்தம் ஆயிற்று
சேலத்திலிருந்து 'பாசவலை' முடித்து
காரில் வரும்போது எதிர்பாராமல் கண
வர் தட்சணாமூர்த்தி கார்விபத்தில் மாண்
டார்
சிறிது கால ஓய்விற்குப்பிறகு அவர்
நடித்த 'மங்கையர்திலகம், நான்பெற்ற
செல்வம் "அலிபாபா" இவைகள் ஒரு
குணச்சித்திர நடிகையென நிரூபித்தன
சிறந்த துணை நடிகை என சினிமா
ரசிகர்சங்கம் கௌரவித்தது!
நாடோடி மன்னன் படத்தில் ராஜத்
தின் நடிப்பு உச்சநிலை அடைந்தது
தற்போது தயாராகிவரும் படங்களில்
ராஜம் இல்லாத படம் இல்லை
என்ற அளவில் அவரது புகழ்
மேலோங்கி வருகிறது

'வில்லன்' சோமு

வாழ்க்கையில் 'மனிதன் எண்ணியபடி எதுவுமே நடப்பது இல்லை; முக்கியமாக உத்தியோக விஷயமாக பெருத்த ஏமாற்றமே ஏற்பட்டு வருகிறது. அதுவும் இன்று படத் துறையில, டைரெக்டர்களாகவும், சங்கீத டைரெக்டர்களாகவும் இப்படி கலை நிபுணர்களாக (டெக்னீஷியன்கள்) இருப்பவர்கள் பலரும், இந்தத் துறையில் பணியாற்றப் போகிறோம் என்று சொப்பனமாவது கண்டிப்பார்களா என்பது சந்தேகமே! அதற்கு சரியான ஒரு உதாரணம்தான் இன்று பல படங்களை டைரெக்ட் செய்து வரும் கே. சோமு!

முனுசிபல் ஆபீஸில் ஒரு குமாஸ்தாவாகப் புகுந்து, இன்று மானேஜர் பதவிக்கு உயர்ந்திருக்க வேண்டியவர் தான் அவர். அதிக பட்சம் அவர் சினிமாத் துறையில் விரும்பியது வில்லனாக நடிக்கவேண்டும் என்பதுதான்.

கோகுலன்

*1917*ம் ஆண்டு ஜூன் மாதம் *12*ம் தேதி பழனியில், கந்தசாமி பிள்ளை சந்திரபூர்ணம்மா தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தார் கே சோமு. அவர்களுக்கு சோமு பன்னிரண்டாவது குழந்தை. அவருடைய தந்தை விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருந்தார்.

சோமுவுக்கு 5 வயதான போது அவருடைய தந்தை காலமாகிவிட்டார். அன்னையுடன், உடுமலைப் பேட்டையில் வக்கீலாக இருந்த தம் சகோதரர் வீட்டிற்கு வந்தார். அவருடைய ஆதரவில்தான் வளர்ந்து, கல்வி கற்றார். அவரது பள்ளிப் படிப்பு பழனியிலும உடுமலைப் பேட்டையிலுமாக நடந்துவந்தது.

சிறு வயதிலிருந்தே அவருக்குக் கலையார்வம் உண்டு. பள்ளி நாடகங்களில் சிறு சிறு பாத்திரங்களில் நடித்து வந்தார். 1925ம் வருஷம் "கிருஷ்ண தேவராயர்" என்ற நாடகத்தில் முதல் முதலாக கொலையாளியாக அவர் நடித்தார். அதன் பின்னர் பள்ளிக்கூடத்தில் நடித்த நாடகங்களில் எல்லாம் அவர்தான் பிரதம பாகம ஏற்றுக் கொண்டார்.

சோமு அடிக்கடி அருகாமையிலிருந்த கோவைக்கு அங்கு நடக்கும் நாடகங்களைப் பார்க்கப் போய் விடுவார். அப்படிப் போனபோது ஒரு சமயம் காலஞ்சென்ற டைரெக்டர் ராஜா சாண்டோவுடன் அவருக்குப் பரிச்சயம் ஏற்பட்டது. 1934ம் ஆண்டு "சந்திரகாந்தா" சமயம் ராஜா சாண்டோ அவருக்கு படத்தில் நடிக்க ஒரு சந்தர்ப்பம் அளிக்க முன் வந்தார். ஆனால், சோமு அப்போது தயங்கி, மறுத்து விட்டார்.

1937ம் ஆண்டு எஸ். எஸ். எல். ஸி. பரீட்சையில் தேறினார். அது சமயம் மேட்டுப் பாளையத்தில் டி. கே. எஸ். கோஷ்டியினரின் நாடகங்கள் நடந்து கொண்டிருந்தன. கே. சோமு அங்கு சென்று அவர்கள் கம்பெனியில் தன்னையும் சேர்த்துக் கொள்ளும்படி கேட்டார். சகோதரர்களில் மூத்தவரான டி. கே. சங்கரன் "வீட்டிலிருந்து கடிதம் கொணடு வந்தால் சேர்த்துக் கொள்ளுகிறேன்" என்று நிபந்தனை போடவே, அவர் ஏமாற்றத்துடன் திரும்ப வேண்டியதாயிற்று.

ஏற்கெனவே சந்தர்ப்பம் அளிக்க முன் வந்த டைரெக்டர் ராஜா சாண்டோவைப் போய்ப் பார்த்தார். சந்தர்ப்பம் கிட்டியபோது சோமு சம்மதிக்கவில்லை. அவர் சம்மதித்துப் போனபோது சந்

தர்ப்பம் கிட்டவில்லை. அப்போது ராஜா சாண்டோ மரணப் படுக்கையில இருந்தார். மனம் ஒடிந்து போன சோமு உடுமலைப்பேட்டைக்கே திரும்பி வந்தார்.

உடுமலைப்பேட்டையில் முனிசிபல் ஆபீசில் ஒரு டைபீஸ்ட் வேலை காலி இருந்தது. அவர் அதை ஏற்றுக் கொண்டார். சிந்தனையெலலாம் கலை உலகிலே சஞ்சரித்துக் கொண்டிருக்க, 'தட்டெழுத்து'டன் தடுமாறிக் கொண்டிருந்தார். ஒரே வருஷம்தான் அநதக் கட்டுணட வாழ்க்கை.

1941ம் வருஷம் ராணுவத்தில் போய்ச் சேர்ந்து விட்டாா. இரண்டு ஆண்டு காலம் எங்கெங்கோ சுற்றினா. கப்பல் ஏறிப் போகத் தகுதியற்றவர் என்ற காரணத்தால 1943ம் ஆண்டு ராணுவ வேலையிலிருந்து விடுவிக்கப் பட்டார்.

உடுமலைப்பேட்டைக்குத் திரும்பினார். மீண்டும் முனிசிபல் ஆபீசில் உத்தியோகம் ஏற்றார். இம் முறை பொககிஷதாராக கொஞ்சம் உயர்ந்த உத்தியோகம் கிடைத்தது! அவர் எங்கெங்கோ சுற்றிக்கொண்டிருநதாலும் கூட கலைத்துறை ஆசை அவர் நெஞ்சத்தை விட்டு அகலவில்லை. "உடுமலை அமெச்சூர் நாடகக்குழு" என்று ஒன்றை ஆரம்பித்து நாடகங்கள் நடத்தினார். "இழந்த காதலை", "பத்மா" என்ற பெயரில் நாடகமாக டைரெக்ட் செய்து, அதில் வில்லனாகவும் நடித்தார். அது முதல் தான எப்படியாவது ஒரு வில்லன் நடிகனைப் பிரகாசிக்க வேணும் என்ற ஆசை அவருக்கு ஏற்பட்டது. அந்த ஆசை பிறந்து விட்டால் குமாஸ்தா வேலை நிலைக்குமா ?

1946ம் ஆண்டு "வேலைக்காரி" பட சமயம் ஜுபிடர் பிக்சர்ஸில் சர்வாதிகாரம் நடத்திவந்த ஒரு டைரெக்டர், சோமுவை "இன்று வா நாளை வா" எனப் பல முறை அலைக்கழிக்கவைத்து, இறுதியில் கையை விரித்து ஏமாற்றி விட்டார். வெதும்பிப்போன உள்ளத்துடன் அங்கிருந்து சேலத்திற்கு வந்தார் சோமு.

சேலத்தில் ஒரு மாரியம்மன் கோவிலில் குமாஸ்தாவாக வேலைக்குச் சேர்ந்தார். அந்தக் கோவிலின் தர்மகர்த்தா சுப்பிரமணியம் செட்டி



யார் 'தங்கமான' மனிதர். சோமுவையும் அவர் கலை உள்ளத்தையும் நன்ருகப் புரிந்து கொண்டார்.

1947ம் வருஷம், அப்பொழுது இன்று எம. ஏ. வி. பிக்சர்ஸ் அதிபரா யிருக்கும், எம். ஏ. வேணு மாடர்ன் தியேட்டர்ஸில் புரொடக்ஷன் மானேஜராக இருந்தார். சுப்பிரமணியம் செட்டியார் அறிமுகக் கடிதம் கொடுத்து, வேணுவிடம் அனுப்பி வைத்தார். வேணுவின் சிபார்சின் பேரில் மாடர்ன் தியேட்டர்ஸில் காப்பீஸ்டாகவும் துணை நடிகராகவும் மாதம் முப்பது ரூபாய் சமபளத்தில் சோமுவுக்கு வேலை கிடைத்தது. ஆனுல், அவரது திறமையைக் கணட டி. ஆர். சுந்தரம் முதல் மாதமே அறுபது ரூபாய் சம்பளம் கொடுத்து ஆதரித்தார். அங்கு தயாரான ஒன்றிரண்டு படங்களில் அவர் உப பாத்திரங்களில் கூட நடித்திருக்கிருர்.

அவர் அங்கு சேர்ந்த மூன்ருவது மாதமே உதவி டைரெக்டராக உயர்த்தப் பட்டார். அவர் முதன் முதல் அந்தப் பொறுப்பேற்று வேலை செய்த படம் ''தேவகி''. அதன் பின்னர் அங்கு பல படங்களுக்கு உதவி டைரெக்டராக இருந்தார். ஹாலிவுட்டிலிருந்து வில லியம் பர்க் என்பவர் சேலத்திற்கு வந்து காடு (Jungle) என்ற படத்தைத் தயாரித்தபோது, அவர் ஏற்கெனவே எல்லிஸ் ஆர். டங்கனிடம் வேலை செய்து பழக்கப்பட்டிருந்த காரணத்திஞல், சோமுதான் உதவி டைரெக்டராக தேர்ந்தெடுக்கப் பட்டார்.

*1953*ம் ஆண்டு ஜுலை மாதம் வரை மாடர்ன் தியேட்டர்ஸில் சேவை செய்துவிட்டு சோமு சுந்தரத்தின் நல்லாசியுடன் அங்கிருந்து வெளியேறிஞர். அப்பொழுதுதான் மாடர்ன் தியேட்டர்ஸிலிருந்து விலகிய எம். ஏ வேணு "மாங்கல்யம்" படத்தைத் தயாரிக்க ஆரம்பித்தார். அவர் துணிந்து அப்படத்தை டைரெக்ட் செய்யும் சந்தர்ப்பத்தை சோமுவுக்கு அளித்தார். வேணுவின் நமபிக்கை வீண்போகவில்லை என்பதை அந்தப் படம் நிரூபித்தது. அதன் பின் வேணுவால் தயாரிக்கப்பட்ட பல படங்களை சோமுவே டைரெக்ட் செய்தார்.

ஏற்கெனவே பல ஆண்டுகளாக சோமு, ஏ. பி. நாகராஜனை அறிவார். என்ருலும் எம். ஏ. வி. படங்கள் தொடர்பினல் அவர்கள் நட்பு வளர்ந்தது. அதன் முடிவு அவர் 'நால்வரி'ல் ஒருவராக ஐக்கியமாகி விட்டதுதான்.

அந்த மலரில் மணம் இருப்பது போல வி. எஸ். பி. பிக்சர்ஸ் "இரு மனம் கலந்தால் திருமணத்" தில் ராகினியின் நடிப்பு பரிமளிக்கப் போகிறது.

எம். ஏ. வேணுவை தம் வழிகாட்டியாகவும், ஏ. பி. நாகராஜனைத் தம் கலை வழித் துணைவராகவும் கருதுகிருர் சோமு.

1944ம் வருஷம் பட்டம்மாள் என்பவரைத் தம் வாழ்க்கைத் துணைவியாக அடைந்தார். அவருக்கு தற்போது ஆறு (நான்கு பெண், இரணடு பிள்ளை) குழந்தைகள் இருக்கின்றனர்.

தற்போது நாகராஜன் குழுவின் பல படங்களையும் ''அருந்ததி'' யையும அவர் டைரெக்ட் செய்து வருகிருர். பழகுவதற்குத் தங்கமானவர்; தொழிலில் உண்மையான சிரத்தையும், ஆர்வமும் கொண்டவர். பலமாகக்கூடப் பேசமாட்டார். நேர்மை மிக்கவர். அவர் இத்துறையில் மேலும் பல வெற்றிகளை அடைவார் என்பது திண்ணம்.

கடவுள் எங்கே?

★

கடவுள் ஏதடா அவர் கருணை ஏதடா—தம்
கருத்துப் போல நடந்து நடந்து
கடமை தவறும் மடையருக்கே (கடவுள்)

மாதுமது சூதொழித்த மகானென்பார்—தீமை
மனதினிலே நினைப்பதுவும் தகாதென்பார்!
பாதபூசை ஆறுவேளை தேவையென்பார்—அதை
பாவையரால் செய்வித்தலே சேவையென்பார்! இவர்க்கு (கடவுள்)

அரிநமோ நாரணீயம் படித்திடுவார்—அதை
படித்துக்கொண்டே துளசிமாலை தொடுத்திடுவார்!
பருவரதி யொருத்தியங்கே வந்திடிலோ—சுவாமி
மாலையதை அவளுக்கிட்டே லீலைபுரிவார்! இவர்க்கு (கடவுள்)

காணிநிலம் பறித்திடவே கழுத்தும் வெட்டுவார்—அந்த
கர்மந்தீர நிலமதிலே கோயில் கட்டுவார்!
கேண கூட வெட்டிடுவார்! கூலி மறுப்பார்—தட்டி
கேடபவரை மாட்டு இனம் போல வெறுப்பார்! இவர்க்கு (கடவுள்)

பொய்வேஷம் நம்பவைத்து வாழ்ந்திடுவார்—முடிவில்
பொதுத்தெய்வ சக்தியினல் தாழ்ந்திடுவார்!
கைப்பொருளும் சுழனிவிடும் கடந்தபின்னே—பாரில்
கடவுளேது என்றிகழ்வார் மக்கள் முன்னே! இவர்க்கு (கடவுள்)

பாடுபட்ட கூலிதரும் பண்பினிலே—உயிர்
பலிதடுத்துக் காப்பாற்றும் அன்பினிலே
கேடுகெட்ட செயல்மறுசகும் தன்மையிலே—கடவுள்
காலமெல்லாம் வாழுகின்றார் உண்மையிலே! மறுப்பார்க்கு (கடவுள்)

கோவை குமாரதேவன்

ஹாஸ்ய
சித்திரம்
பிரஸிடெண்ட்
பஞ்சாட்சரம்
சாவித்திரி பிக்சர்ஸ்
டைரக்ஷன்
A. பீம்சிங்
சங்கீதம்
G. ராமனாதன்

ஆபீஸரைக் கண்டு நடுங்கும் ப்ரஸிடெண்ட பஞ்சாடசரமாக எஸ். வி. சகஸ்ரநாமமும், அவர் மகள் மேகலையாக பி. சரோஜா தேவ்யும் நடிக்கின்றனர்.

பல் தமாஷான நிகழ்ச்சிகளைக் கொண்ட
இக்கதையில் உணர்ச்சி மிக்க கட்டங்
களும் நிறைய உண்டு. ஸேவா ஸ்டேஜ
மூலம் பிரபலமான நாடகம் இது. பரணி
ஸ்டூடியோவில் திரைப் படமாகிறது.

டி. ஆர். ராமச்சந்திரனும் குலதெய்வம் ராஜ கோபாலும் ஜோடி சேரும் போது அங்கு நகைச் சுவை மழை பொழியத்தானே செய்யும்.

பொதுஜனம் பேசுகிறார்

பாடமாக இருக்கட்டும்

சமீபத்திலே தான் மாணவர்களின் உணவுக்கென சிவாஜியின் நன்கொடை பற்றிப் படித்தேன். ஒரு லட்ச ரூபாய் நன்கொடையாகக் கொடுத்த சிவாஜியின் சிறந்த மனப்பான்மையை நினைக்குங்கால் நெஞ்சம பூரிப்பால பொங்கி வழிகிறது! ஐந்து படி அரிசியை கஞ்சியாகக் ஐம்பது பேருக்கு தானம் செய்து விட்டு, அழகான விளம்பரத்தை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும பிறவிகள் நிறைந்த இக்காலத்திலே, ஒரு லட்ச ரூபாயை மனம் வந்து தந்திருக்கிறார் என்றால், அவரை நாம எப்படித்தான் போற்றுவது!

உலகத்தில் உருண்டோடி விளையாடும பணத்தை ஏராளமாக சம்பாதித்து வைத்துக் கொண்டு, நாளை நடக்கப்போவதை அறியாமல், பணம காத்த பூதமாய் பலகாலம வாழ்ந்து விட்டு, நிலையற்ற வாழ்வை சதமென எண்ணியிருக்கும் பலருக்கும் சிவாஜியின் தர்மசிந்தனை ஒரு படமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

பி. லட்சுமி நரசிம்மன், வீரமாங்குடி.

பின்பற்றுக!

தெருவிற்கு ஒரு கோவில் கட்டி, பல லட்சம் பாழ் செய்து பாலாபிஷேகமும் கும்பாபிஷேகமும் நடத்தி வரும் இந்நாளிலே சிவாஜி கணேசன் ஏழை மாணவர்களின் கல்விக்காக லட்ச ரூபாய் நன்கொடை ஈந்து இருக்கிறார் என்றால் அவரின் ஈகையை எப்படித்தான் புகழ்வதோ? நடிகர்களிலே ஒரு சிலரைத் தவிர மற்றவர்கள் மௌனமாய் இருக்கும இந்த நேரத்திலே சிவாஜியின் கொடைத்தன்மை, அவர்களுக்கெல்லாம் ஒரு பாடமாக இருக்கும என்பது திண்ணம்.

நம நாட்டிலே பணத்தைச் சேமித்து வைத்துக்கொண்டு பிளைமௌத் காரில பவனி வரும பெரிய மனிதர்கள் அதை விட்டுவிட்டு ஏழை மாணவர்களுக்கென ஏதாகிலும கொஞ்சம செலவு செய்தால் நம நாட்டில அறியாமை அகலும். பஞ்சம நீங்கும! வறுமை ஓடும! கொடுப்பவருக்குப் பெருமை உயரும! செய்வார்களா மற்றவர்களும!

இரா. மாமுண்டி, கண்ணனூர்.

'கோடம்பாக்கம் கேட்'

தமிழ் நாட்டில் இன்று ஒரு நிரந்தரமான தொழிலாக சினிமா வளர்ந்து விட்டது. தமிழ் நாட்டின் தலைநகரான சென்னை கோடம்பாக்கத்தில தான் பெரும்பாலான பட உற்பத்தி நிலையங்கள் உள்ளன. அவசர வேலை நிமித்தம் அங்கு செல்பவர்களுக்கு வழியிலுள்ள ரயில் கேட் மிகப் பெரும் தடையாக உள்ளது. பெரும்பாலான சமயங்களிலும் மூடியே இருக்கும் அக்கதவுகள். சாலையில் வரிசையாக கார்கள் சில சமயங்களில் அரை மணி நேரத்திற்கு மேலாகவே கூட காத்து நிற்க வேண்டி வருகிறது. அரசாங்கம் மேலும காலதாமதம் செய்யாமல் அங்கு மேம்பாலம அமைத்தால் சம்பந்தப் பட்டவர்களுக்கு மிகவும் சௌகரியமாக இருக்கும்.

எம். ஆர் புருஷோத்தம், சென்னை-7.

பெயர் மாற்றமா?

உணவு நிதிக்காக சிவாஜி கணேசன் ஒரு லட்ச ரூபாய் அளித்த செய்தியைப் பார்த்து மிகவும் பெருமை அடைந்தேன. ஆனல், அதற்காக "பெஸண்ட் ரோட்"டைச் "சிவாஜி கணேசன் ரோட்" என்று மாற்றப் போகும் யோசனையைக் கண்டிக்காமல் இருக்க முடியாது. மாற்ற வேண்டுமானல "ஹாரிஸ் ரோடு" போன்ற ஆங்கிலேயர்களின் பெயர் தாங்கிய ரோடுகள் எத்தனையோ இருக்குமே! அவற்றில் ஒன்றின் பெயரை மாற்றிக் கொள்ளலாமே.

பி. வி. பக்தவச்சலு, சென்னை-1.

ஆதரவு தேவை

ஆபாசம், ஆபாசம் என்று ஆபாச சுவரொட்டிகளுக்கும் வெளியீட்டுகளுக்கும் அரசாங்கம் தடை விதிக்க இருக்கிறது. வரவேற்க வேண்டிய விஷயம்தான். கண்டிப்பாக பொது மக்களின் அனுதாபமும் கிடைக்கும். ஆபாச விளம்பரத் தடைக்கு பத்திரிகைகளும் ஆதரவு கொடுக்க வேண்டும். சில மாத வாரப் பத்திரிகைகள் வெளித்தோற்றத்திற்கு ஆதரவு கொடுப்பது போல் தோன்றினலும் நம்ப முடியவில்லை. பெண்களின் படங்களை (நடிகைகளும் சேர்த்து) பல கோணங்களில் வர்ணப் படங்களாகவும் கவர்ச்சி மிளிரவும் பிரசாரம் செய்கிறார்கள். சில குடும்பப் பத்திரிகைகளும், பெண்கள் பார்த்தால் தலை குனியும் நிலையில் படங்கள் வெளிபிடுகின்றன. இந்த நிலையும்மாற வேண்டும்.

பி. சொக்கலிங்கம், மதுரை.

துப்பாதே!

சினிமா தியேட்டரில் புகை பிடிக்கக் கூடாது, பிடித்தால் தண்டனைக்கு உள்ளாவார்கள் என்று அரசாங்கம் அறிவித்து அமுலிலும் நடத்தி வருகிறார்கள். இது போலவே இன்னும் சிலவற்றுக்கும் அரசாங்கம் தடை விதித்தால் பொது ஜனங்களுக்கு மிக சௌகரியமாக இருக்கும். அதாவது, படம் நடக்கும்போது சில்லறை சாமான்கள் விற்கமாலிருத்தல், வெற்றிலை பாக்கு எச்சிலை உமிழ்தல் முதலியனவைற்றைத் தவிர்க்க வேண்டும்.

வி. சங்கரநாராயணன, நாகர்கோயில்.

ஏமாற்றாதே!

"தயாராகிறது, துரிதமாகத் தயாராகிறது, விரைவில் வருகிறது, 'இம்மாத வெளியீடு' ... தேதி வெளிவருகிறது" என்றெல்லாம் படம் ஆரம்ப பூஜை முதல் வெளி வரும் வரையிலும் விளம்பரங்கள் செய்கின்றனர். ஆனல், அவர்கள் குறித்த காலத்தில வெளி வருவதே யில்லை, தற்காலப் படங்கள். இவர்கள் கால செய்வது ரஸிகர்களை ஏமாற்றுவது போலாகும். இனிமேலாவது ஆதரவாளர்களான ரஸிகர்களை ஏமாற்றாமல் தயாரிப்பாளர்களே குறித்த சமயத்தை நன்ருக அறிந்து பின்னர் தேதி-மாத விளம்பரங்களை வெளியிட வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

இசக்கியா பிள்ளை, சுசீந்திரம்.

அசோகா பிக்சர்ஸ் தயாரித்து வரும் "இந்திரா, என் செல்வம்" படத்தில் பண்டரிபாய் ஒரு நர்ஸ் பாத்திரத்தை ஏற்று நடித்து வருகிருர்.

நாட்டியக் கூத்து

தில்லையம்பலத்தில் ஆனந்தத் தாண்டவமாடினுர் நடராஜப் பெருமான். ஆண்டவனின் இத்திருக் கூத்தை தெருக்கூத்தாக ஆக்கி வருகிறார்கள். இன்று கலைத் தொண்டர்கள் என்று தங்களைக்



கூறிகொள்வோர். இப்பொழுது அநேகமாக எல்லாப் படங்களிலும் பரதநாட்டியத்தையோ, பலவித நடனங்களையோ நாம் பார்க்கத் தவற முடியாது. கவலையைத் தீர்க்கும் நாட்டியக் கலையை கவலையாக மாறச் செய்து வருகிறார்கள். அதாவது, நாட்டியம் என்றால் படி என்ன விலை என்று கேட்கும் பண்டோதரிக்கு நாட்டிய ராணி என்ற அடை மொழியைச் சூட்டி, தொப்பங் கூத்து ஆடச் செய்து, பருத்த அவரது கை, கால்களை (அரை நிர்வாண உடையுடன்) அப்படியும் இப்படியும் தூக்கி ஆட்டி அசைத்து 'இதுதான் நடனக் கலை' என்று நம்மை நம்ப வைக்கின்றனர். ஒரு அரச சபை என்றால் அங்கே ஒரு அரைநிர்வாண நாட்டியம். ராமனின் தர்பாரில் இலை மறைவு டான்ஸ்! ஒரு அரசகுமாரி என்றால் அவளுக்கு கண்டிப்பாக நாட்டியம் தெரிந்திருக்கவேண்டும். பக்தையாயின் தேவிக்கு முன்னால் நாட்டிய மாடும் திறமை யிருக்க வேண்டும். ஆகவே, அவளை தகப்பன் முன்போ, அல்லது ஜனங்களின் முன்போ, சேஷ்டைகளுடன் கூடிய அரை நிர்வாண நடனம் ஆடச் செய்யவேண்டும். ஒரு உன்னதக் கலை 'தடியெடுத்தவன் தண்டல்காரன்' என்பதுபோல இவர்கள் கையில் அகப்பட்டுக்கொண்டு விழிக்கிறது. இப்படி அந்தப் புனிதக் கலை இழிவு படுவதை நிறுத்தி பட முதலாளியும், கலை நுணுக்க நிபுணர்களும் நாட்டியம் என்றால் என்ன என்பதையும் அதை எங்கெங்கு எந்தச் சந்தர்ப்பங்களில் புகுத்த வேண்டும் என்பதையும் கற்றுக் கொண்டு பின் கலைத்தொண்டு செய்யட்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கலைச்செல்வி, தாம்பரம்.



ஸ்தாணு நாதன் — சமலா
இவர்கள் திருமணம் சமீபத்தில் சிறப்பாக நடந்தது.

இதுவன்றோ பத்திரிகை தர்மம்!

தன்னைப் பற்றித் தானே சுயதம்பட்டம் அடித்துக் கொண்டு ரசிகர்களைக் கூப்பிட்டு ஆதரவுதேடும் தான் தோன்றிப் பத்திரிகைகள் சிலவை போலல்லாது தனக்கு என தனிப் பாணியில் 'போற்றுவன போற்றி தூற்றுவன தூற்றி' ஒரு நிலையான நேர்மைத் தன்மையைக் கடைப் பிடிக்கும் சினிமாப் பத்திரிகைகளை விரல் விட்டு எண்ணி விடலாம். அவற்றுள் "குண்டூசி" முதன்மையான ஸ்தானம் வகிப்பதைப் பெருமையுடன் கூறுவது மிகையாகாது. ராஷ்டிரபதியின் பரிசு விஷயமாக தமிழ் நாட்டைப் பொருத்தவரை இதுவரை 'திருப்தியற்ற தீர்ப்பு இருந்து வருகிறது' என்று தைரியமாகக் கூறியது "குண்டூசி" ஒன்று தான். பிரபல நட்சத்திரத்தின்

கொடைத் தன்மையைப் போற்றி அதன் விளைவாக பணம் வாங்கியதற்காக அவர் பெயரில் தெருப் பெயரை வைப்பதை ஆணித்தரமாக கண்டிக்கிறது எல்லாவற்றிற்கும் மேலாக 'சகோதரப் பத்திரிகை' என "பேசும் பட"த்தைச் செல்லமாக அழைத்து அதில் அவர்கள் அடைந்த பேற்றைத் தனது வெற்றியாகக் கருதி பூரிப்படைந்தது "குண்டூசி" ஒன்றுதான். உண்மையான பத்திரிகை தர்மம் இதுவன்றோ!

"குண்டூசிப் பிரியன்", சென்னை.

சிவாஜியின் நடிப்பு

"அமரதீபம்" என்ற பெயரில் வெளி வந்த தமிழ்ப் படத்தைத் தான் சிவாஜி புரொடக்ஷன்ஸார் 'அமர்தீப்' என்ற பெயரில் ஹிந்தி பாஷையில், தயாரித்து வெளியிட்டு இருக்கிறார்கள். வடநாட்டில் நல்ல நடிகர் என்று சொல்லும் தேவ் ஆனந்த் சிவாஜி கணேசனின் பாகத்தை ஏற்று நடிக்கிறார். அவர் நடிப்பைப் பார்க்கும் பொழுது, பரிதாபம் என்று தான் சொல்ல வேண்டியிருக்கிறது. சிவாஜியின் நடிப்பு எங்கே! இந்த சில்லறையின் நடிப்பு எங்கே!

சீதபதி, சிதம்பரம்.

"வடநாட்டுக்குப் பாடம்"

அண்மையில் வெளி வந்த 'அமர்தீப்' என்ற அமரதீபத்தைப் பார்க்க எனக்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தது! அய்யோ கண்றாவியே! தேவ் ஆனந்தின் நடிப்பு தேள் கொட்டுவதைப் போல இருக்கிறது! வடநாட்டிற்கேற்ப வைஜயந்தி ஆடி விட்டார். ஆனாலும் நடிப்பு இல்லை! பத்மினியின் நடிப்பு வடநாட்டு நடிகர்களுக்கும், நடிகைகளுக்கும் பாடத்தைக் கற்பிக்கிறது! சிவாஜி புரொடக்ஷன்ஸாருக்கு வெற்றிகரமான முதல் தோல்வி இப்படம்.

சென்னையில்

நவீன ரகப் பட்டுச் சேலைகளுக்கு

நம்பிக்கையான கடை

கண்ணைக் கவரும் கலர்களில் அற்புதமான பார்டர்கள், கவர்ச்சிகரமான முந்திகளுடன், கொள்ளேகாலம்—ஆரணி, காஞ்சீபுரம் பனாரஸ்-காஷ்மீர்-பட்டுச் சேலைகள் — பாவாடைகள் சோலிகள் முதலியவைகள் உத்தரவாதத்துடன், எப்பொழுதும் எங்களிடம் கிடைக்கும்.

ஆரணி ஸில்க் ஹவுஸ்

(பட்டுச்சேலை உற்பத்தி மற்றும் விற்பனையாளர்கள்)

5, ஸன்னதி தெரு — மயிலாப்பூர் — மதராஸ் 4.

போன் :- 71349

ஜூன் 12ம் தேதி முதல்

நுனிப்புல்

வெட்டுக்கிளி

முதன் முதல் வெளிவந்த தமிழ் சினிமாப் பத்திரிகை என்ற பெருமை "சினிமா உலகம்" பத்திரிகையினுடையது. ஆம், இப்போது புனர்ஜன்மம் எடுத்திருக்கும் அதே அந்தப் பத்திரிகைதான். இப்பொழுது பிரசுரகர்த்தாவாகவும் ஆசிரியராகவும் இருக்கும் (பி. எஸ் செட்டியர்) பண்டித பக்கிரிசாமி செட்டியாரேதான் அப்பொழுதும் அதே பணிகளைச் செய்து வந்தார். பல ஆண்டுகளாகத் தொடர்ந்து ஒழுங்காக நடந்து வந்த அந்தப் பத்திரிகை, அதன் ஆசிரியர் படத் தொழிலில் ஈடுபட்டது காரணமாக, பத்திரிகை சிறிது காலம் ரை குறித்த காலத்தில் வெளிவராது நினைத்தபோது வெளிவந்து கொண்டிருந்தது; பிறகு அப்படி வருவதும் நின்றுவிட்டது.

* * *

சினிமாப் பத்திரிகைகளின் சரித்திரத்திலே பறக்க முடியாத ஒரு பத்திரிகை "ஸில்வர் ஸ்க்ரீன்" என்பது. என். கிருஷ்ணசாமி என்பவர் இந்தப் பத்திரிகையை 1935ம் ஆண்டில் தொடங்கி தமிழ்-ஆங்கிலம் இரு மொழிகளிலும் வாரப் பத்திரிகையாக நடத்தி வந்தார். கண்ணைப் பறிக்கும் கலர் படங்கள், வாழ்க்கை வர்ணனை, நட்சத்திர பேட்டி இவை அனைத்தும் கொண்டு நிறையப் பக்கங்களுடன் அது வெளிவந்தது. இவ்வளவுக்கும் விலை என்ன தெரியுமா? ஓர் அணாதான்.

* * *

இந்தப் பத்திரிகைகளில் ஆசிரியராகப் பணிபுரிந்து வந்தார் காலஞ்சென்ற எஸ். ஜி. அய்யா ப்.ஏ.பி.எல். திடீரென்று ஒருநாள் முதலாளிக்கும் அவருக்கும் அபிப்பிராய பேதம் ஏற்பட்டு, அவர் அங்கிருந்து விலகினார். அந்த சூட்டோடு சூடாக "மூவி ஹெரால்ட்" என்ற பத்திரிகையை தமிழ்-ஆங்கிலம் இரு மொழிகளிலும் தொடங்கி நடத்தினார். அதற்கு அவருக்கு பக்கபலமாக இருந்து உதவினார் 'சண்டே டைம்ஸ்' ராமய்யா என்று இன்றும் அழைக்கப்படும் அவரது சகோதரர். ஸில்வர் ஸ்க்ரீனும், மூவி ஹெரால்டும் ஒன்றுடன் ஒன்று போட்டி

எம். ஜி. ராமச்சந்திரன் காதல் கீதம் பாடி, ஜமுனாவின் கையைப் பற்றுவது கல்பனா கலா மந்தர் அளிக்கும் — "தாய் மகளுக்குக் காட்டியதாலி"க்காகத்தான்

போட்டுக் கொண்டு வெளிவந்தன. அவர்கள் போட்டி வாசகர்களுக்கு நன்மையாக முடிந்தது என்று சொல்லத் தேவையில்லை. ஆனால் அவைகளும் காலக்கிரமத்தில் ஒன்றன்பின் ஒன்றாக மூடப்பட்டன.

* * *

இதே சமயத்தில்தான் வீரராகவன் என்பவர் "ஆடல் பாடல்" (தமிழ்) ஸினி ஆர்ட் நியூஸ் (ஆங்கிலம்) ஆக இரு பத்திரிகைகளை நடத்தினார். அத்துடன் நட்சத்திரங்கள் கலை நுணுக்க நிபுணர்கள் பற்றிய வாழ்க்கைக் குறிப்புகள் அடங்கிய டைரக்டரி ஒன்றையும் முதன் முறையாக வெளியிட்டார்.

"சினிமா ரஸிகன்" என்ற பத்திரிகை வெளிவந்ததும் இதே காலத்தில்தான். அதன் ஆசிரியரான பி. ஆர். நாராயணன், "குடும்பப் பெண்கள் சினிமாவில் நடிக்கலாமா" "பெண்கள் ஆண் வேடம் போடலாமா?" போன்ற பல பிரச்னைகளைக் கிளப்பி விட்டு பத்திரிகை வட்டாரத்திலே ஒரு பரபரப்பை ஏற்படுத்தி அதன் மூலம் தானும் பிரபலமானார்.

எஸ். வி. வஸந்தா

நடிப்பு, நடனம் இவைகளில் பயிற்சி பெற்றிருப்பதுடன், நல்ல முகவெட்டும் பெற்றுள்ள இவர் சீக்கிரம் பல படங்களில் தோன்றவிருக்கிறார்.

* * *

இன்று நட்சத்திரங்களின் ஆதரவுடன், அதாவது அவர்களுடைய பணம், செல்வாக்கு, கட்சி பலம் இம்மாதிரி உதவிகளுடன், பத்திரிகைகள் நடந்து வருகின்றன. அந்தக் காலத்திலும் கட்சியின் பெயரால் இல்லாவிட்டாலும் - இம்மாதிரி உதவிகள் சில பத்திரிகைகளுக்குக் கிடைத்து வந்தன. ஆனால், ஒரு குறிப்பிட்ட சில நட்சத்திரங்களிடம் உதவி பெற்று வந்த அம்மாதிரிப் பத்திரிகைகள் அதிக காலம் நடை

பெறவில்லை. காரணம், நட்சத்திரம் பண உதவி செய்கிறார் என்பதற்காக முதல் அட்டை முதல் கடைசி அட்டை முடிய அந்த நட்சத்திரத்தின் படத்தையே போட்டு அவர் புராணத்தையே பாடிக் கொண்டிருந்தால் யார் படிப்பது?

* * *

அந்தக் காலத்தில் படாதிபதிகளின் ஆதரவுடன் நடந்து வந்த பத்திரிகைகளில் இரண்டை முக்கியமாகக் குறிப்பிடலாம். ஒன்று "பிலிம் மெயில்" 1937-ம் வருஷம் டைரக்டர் கே. சுப்பிரமணியம் பட உலகில் முடிசூடா மன்னனாக இருந்த சமயத்தில் தாமே சொந்தத்தில் அந்தப் பத்திரிகையை நடத்தினார்.

மற்றொன்று "விமர்சனம்" என்ற பத்திரிகை. இது மாடர்ன் தியேட்டர்ஸின் ஆதரவில், சேலத்திலிருந்து வெளிவந்தது. இன்று பட உலகில் ஒரு பெரும் புள்ளியாக விளங்கும் "கண்ணதாஸன்" கூட சில காலம் இதில் ஆசிரியராகப் பணி புரிந்து வந்தார்.

* * *

இடைக்காலத்திலே "மூவி எக்ஸ்பிரஸ்" "சினிமா மித்திரன்" இப்படி எத்தனை எத்தனையோ பத்திரிகைகள் மழைக் காலத்து காளான்களைப் போல் தோன்றி மறைந்திருக்கின்றன. "கினிமா" என்ற பெயரில் கும்பகோணத்திலிருந்து ஒரு பத்திரிகை வெளிவந்தது. இதே பெயரில் தான் பிற்காலத்தில் விஜயா அதிபர் நாகிரெட்டி கூட தமிழ் - தெலுங்கு இரு மொழிகளில் பத்திரிகை ஆரம்பித்து நடத்தினார். நினைத்ததை செய்து முடிக்கும் அசகாயசூரர் நாகிரெட்டியே "கினிமா" விஷயத்தில் பின்வாங்கிவிட்டார். என்பதையும் சொல்லவே வேண்டியிருக்கிறது.

* * *

இவ்வளவையும் படித்துவிட்டு வாசகர்கள் "சினிமாப் பத்திரிகை ஆரம்பித்தால் நாசமாகத்தான் போகவேண்டும் போலிருக்கிறது" என்ற முடிவுக்கு வந்துவிடவேண்டாம். மேற்குறிப்பிட்ட பத்திரிகைகளின் மறைவுக்கான உண்மைக் காரணத்தை ஆராய்ந்து பார்த்தால் உண்மை புலப்படும். சுருங்கச் சொல்ல வேண்டுமானால், இரண்டு முக்கிய காரணங்களைக் குறிப்பிடலாம். 1) சரியான நிர்வாகத் திறமை இல்லை. 2) பத்திரிகை நடத்தியவருக்கு அக்கறை அதில் இல்லை அதை வியாஜ்யமாகக்கொண்டு வேறு பல காரியங்களை சாதித்துக் கொள்ள நினைத்தார் இந்த இரு காரணங்களில் இரண்டுமேயோ, அல்லது ஒன்று மட்டுமோ காரணமாக இருந்திருக்கிறது.

சாரி சாரியாக மக்கள் கூட்டம் ஆஸ்பத்திரியை நோக்கிச் சென்று கொண்டிருந்தது.

ஆஸ்பத்திரி வாசலில் பலத்த போலீஸ் பந்தோபஸ்து. முதல் நாள் இரவு அந்த ஊர் வடக்குத் தெரு பங்களாவில் இரண்டு கொலைகள் விழுந்துவிட்டன.

இந்த சமயத்தில்தான் ஆஸ்பத்திரியில ஒருவர் ம ண வாக்குமூலம கொடுக்கப் போவதாக விஷயம காட்டுத் தீபோல் பரவிவிட்டது. அந்தக் கொலைகளுக்கும அந்த மரண வாக்குமூலத்துக்கும என்ன தொடர்பு இருககும? அவர் தன் மரண வாககுமூலத்தில் என னென்ன திடுக்கிடக்கூடிய தகவல் களை வெளியிடப்போகிறார் என்பதை யெலலாம் அறியவே மக்கள் கூட்டம் அங்கு காத்துக்கிடந்தது.

ஆஸ்பத்திரியின 'ஆபரேஷன' தியேட்டர் மேஜை மீது மரண வாககுமூலம் கொடுக்கப் போகிறவர் கிடத்தப்பட்டிருந்தார். கடைசியாக ஸப் மாஜிஸ்ட்ரேட் நேரிட அவன் படுக்கை அருகில் வந்தார்.

"நீ ஏதாவது சொல்லப் போகிருயா?" என்று கேட்டார்.

"ஆமாங்க, ஒரு எழுத்துவிடாமல் எழுதககுங்க" என்ருன அவன். மரண வாக்குமூலம் கொடுககும் போது நானும அருகில் இருந்தேன. வாசகாகள் மரண வாக்குமூலத்தை அவன் வாயிலாகக் கேட்பதற்கு முன்பு நான் நேயர்களிடம் சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

நேற்று இரவு நான் நடந்து கொணடது முறையானதா? நான் மட்டும் மனப்பிராந்தி அடையாமல் பொறுப்பு உணர்ச்சியுடன் நடந்து கொண்டிருந்தேனே யாஞல் இரண்டு கொலைகளைத் தடுத்திருக்கலாம் அலலவா? நான் அபபடி என் கடமையைச் செய்திருந்தால் ஒரு வேளை என்னையும் சந்தேகபபட்டு கொலைக் கேஸில மாட்டிவிட்டிருந்தால் என்மனைவி, குழந்தைகள் கதி?

என் மனம் ஒரு நிலையில் இல்லை. எண்ண அலைகள் மோதியபடி இருந்தன.

நேற்றிரவு எதிர்வீட்டில் நீண்ட நேரம் விளக்கு எரிந்தது. தர்ம

லிங்கமும் வேறு ஒருவரும் பேசிக் கொண்டிருந்தார்கள். எதிரே ஒரு பையும் ஒரு கிளாஸில் பாலும் இருந்தன.

எதிர்வீட்டு தர்மலிங்கம் என்று இப்போது எல்லோராலும் மரியாதையாக அழைக்கப்படும் வரை எங்கள் ஊர்க்காரர்கள் பதினைந்து வருடங்களுக்கு முன்பு 'போக்கடாப் பயல்

'காலிப்பயல்' 'ரௌடிப்பயல்' என்று இழிவாகக் கூறிவந்தது ஊர் அறிந்த விஷயம்.

அப்போது அவன் கால்காசு பொருதவன். பெரிய போக்கிரி, அவன் பெயரைக் கேட்டாலே அழுத பிள்ளை வாய் மூடும்.

கடைசியாக அவன் கிராமப்பெரிய தனக்காரர் பைரவன் சேர்வையின் வைக்கோல் போருக்கு நெருப்பு வைத்துவிட்டபோது அவனைப் பிடித்து சுண்ணும்புக் காளவாயில் போடாவிட்டால் நான் பைரவன்

சேர்வை யில்லை' என்று சவால் விட்டான் பைரவன் சேர்வை. தர்மலிங்கத்தைப்போல பத்து தர்மலிங்கம் சேர்ந்தவர் பைரவன் சேர்வை.

அப்பொழுது ஊரைவிட்டு ஓடினவன்தான் தர்மலிங்கம்.

பதினைந்து வருடங்கள் கழித்து திரும்பி வந்தான் தர்மலிங்கம்.

வெறும் தர்மலிங்கமாக வரவில்லை. லட்சாதிபதியாக வந்தான். பைரவன் சேர்வையே அவனைக் கூப்பிட்டு விருந்துவைத்து கௌரவித்தபோது கிராம மக்கள் அவனைப் புகழ்வதைப் பற்றிக் கேட்பானேன்!

தர்மலிங்கம் இப்போது ஊரில் பெரிய மனிதன ஆகிவிட்டான். எந்தப் பொதுக் காரியமானாலும் 'தர்மலிங்கம் அண்ணுச்சியைக் கேட்டீர்களா? அண்ணுச்சி பார்த்து எது சொன்னாலும் சம்மதம். அண்ணுச்சிக்குத் தெரியாதா' என்று அவனைத் தூக்கி வைத்தார்கள்.

அவன் வந்து ஒரு வருட காலம் ஆகிவிட்டது. பெரிய வீட்டைக் கட்டிக் கொண்டான். ஊர் மாரியம்மன் கோவில், துரௌபதையம்மன் கோயில் இவைகளுக்குப் பணம் கொடுத்தான். ஏராள ரொக்கத்தை வீட்டோடுவைத்திருந்தான்.

சரோஜா தேவி எதைக்கண்டு இப்படி அரண்டு போய், எம். ஜி. ராமச்சந்திரனுக்குப் பின்னல் ஒளிந்து கொள்கிருர்?
—"திருடாதே"யில்

தர்மலிங்கத்திற்கு என்னிடம பூனைக்குட்டி விசுவாசம். எனக்குப் பொழுதுபோகாத நேரங்களில் அவனுடன் இரவு பாய் பேசிக் கொண்டிருப்பேன். வீட்டுக்குப் போக எழுந்தால் 'என்ன அவசரம், போனல் போச்சு' என்று என்னை உட்கார வைத்துவிடுவான்.

தான் ஊரைவிட்டுக் கிளம்பி மலேயா போனதையும் அங்கு கஷ்டப்பட்டு வேலை செய்ததையும், திடீரெனத் தனக்குப் புதையல் கிடைத்ததையும் தாய் நாட்டுக்குத் திருபியதையும் கதை கதையாச் சொல்வான் அவன்.

மூன்று நாட்களுக்கு முன்பு.

இரவு எட்டு மணி இருக்கும். அவன் வீட்டுக்குப் போனேன்.

"வாங்க, இன்னிக்கு தூக்கமே வரல்லே, விடிய விடியப் பேசலாம்" என்றான.

"சரி" என்றேன் நான்.

அரை மணி பேசிக்கொண்டிருந்திருப்போம்.

திடீரென்று "தர்மலிங்கம்" என்று கூப்பிட்டுக் கொண்டு ஒருவர் வந்தார். அவரைப் பார்த்ததும் தர்மலிங்கத்தின் முகம் பேயறைந்ததைப் போல் ஆகிவிட்டதைக் கவனித்தேன்.

அடுத்த நிமிடமே, "நீங்க போயிட்டு நாளைக்கு வாங்க" என்று என்னைக் கிளப்பிவிட்டான், தர்மலிங்கம்.

வந்தவரை 'வா' என்று கூட அவன் அழைக்கவில்லை.

'விடிய விடியப் பேசவேண்டும்' என்று சொன்னவன் என்னைக் கிளப்பிவிடுவதில் அவசரப்பட்டான்.

"விருந்தாளிபோல இருக்கு. நான் வரேன" என்று புறப்பட்டேன்.

வாசல் கதவைத் தாளிட்டான் தர்மலிங்கம்.

அவன் அறியாமல் பங்களாவின் பின்புறம் போய் நின்று கொண்டேன். உள்ளே அவர்கள் பேசியது காதில் விழுந்தது.

"டேய் தர்மலிங்கம், மகா பாவி, உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்த பாவி நீ உருப்படுவியா?" என்று இரைந்தான் வந்தவன்.

"கத்தாதிங்க, உங்க சொத்து அப்படியே இருக்கு, எடுத்துக்குங்க" என்று கெஞ்சினன் தர்மலிங்கம்.

"சும்மா எடுத்துப்பேனா? ஊரைக் கூட்டி உன் அயோக்கியத்தனத்தை வெளிப்படுத்தி விட்டல்லவா ஒரு காசைத்தொடுவேன்."

"நடந்தது நடந்து விட்டது. உங்க பணம அப்படியே இருக்கு"

"பணம கிடக்கட்டும், நீ செய்த வேலை சரியாடா?"

அவர்கள் அதன் பின் வெகு காரசாரமாகப் பேசிக் கொண்டார்கள்.

நவீன வேலைப்பாடமைந்த
வைரம், தங்க
நகைகளுக்கு

நம்பிக்கையான இடம்
கௌரி
ஜுவல்லரி மார்ட்

தங்களுக்குத் தேவையானபடி
பல மாதிரி நகைகள்
தயார் செய்து தரப்படும்

Naveen

72/75, பைக்ராப்ட்ஸ் ரோடு
திருவல்லிக்கேணி, சென்னை-5.

அவர்கள் பேச்சிலிருந்து நான் தெரிந்து கொண்டது இதுதான்.

புதிதாய் வந்தவர் மலேயாவிலே கோலாலமபூரில் பெருத்த தனவந்தவர். அவர் வீட்டிலதான தர்மலிங்கம் வேலை செய்து வந்தான். அவருடைய நன்மதிப்பிற்குப் பாத்திரனுனன். அவருக்கு ஒரு மனைவி மட்டுமே இருந்தாள.

ஜப்பான் படையெடுப்பு ஆரம்பமாகியது.

இருநத எல்லாவற்றையும் ரொக்கமாக்கி பணமாக்கி அவர், அவர் மனைவி, தர்மலிங்கம் மூவரும் தாய்நாடு திரும்பத் திட்டமிட்டிருந்தார்கள்.

அவர்கள் புறப்படுவதற்கு முதல் நாள், அவர் பக்கத்து நகரத்துக்குப் போய் வந்தார். திருமபி வந்த போதுபார்த்தால் வீட்டின் அருகில் குண்டுவிழுந்து அவர் மனைவி இறந்து கிடந்தாள். தர்மலிங்கம் என்னவானுன் என்று தெரியவில்லை பணமும் காணவில்லை. ஒரு வாரம் பித்துப் பிடித்தவர் போல் அவர் இருந்தார். கடைசியில் அவர் கேட்ட விவரம் அவர் உடலை உறைய வைத்தது.

ஏராளப் பணத்துடன் தர்மலிங்கம் அவரை ஏமாற்றிவிட்டு முதல் நாள் கிளம்பிய கப்பலில் தாய்நாடு போய் விட்டான்

அவனை எப்படியும் மறுபடி பிடித்து பழிவாங்கிவிடுவது என்று அவர் இரண்டு வருட காலம் கஷ்டப்பட்டு தாய்நாடு வந்து சேர்ந்தார். தர்மலிங்கத்தின் சொந்த கிராமம் அவருக்கு ஏற்கெனவே தெரியும். விசாரித்துக் கொண்டு வந்து விட்டார்.

தன் ஜம்பம் சாயாது என்று கண்ட தர்மலிங்கம் அவர் பணத்தை அவரிடம் கொடுத்து விடுவதாகச் சொன்னன்.

நேற்றிரவு.

இரவு இரண்டு மணி இருக்கும். அவன் வீட்டில் விளக்கு எரிந்தது. நான் உள்ளே எட்டிப் பார்த்தேன்.

"இதோ உங்கள் பணம்" என்று தர்மலிங்கம் ஒரு பெரிய பையை அவர் முன் வைத்தான்.

அவர் "தர்மலிங்கம, நான் வரும் போது பணமே கிடையாது' என்று சொலலிவிடுவாயோ என்று பயந்தேன். இந்தப் பணத்தில் உனக்கு ஆயிரம தருகிறேன். நீ எனக்கு முதலில் துரோகம் செய்தால் கூட நான கேட்டபோது திருப்பித் தந்து விட்டாய. நன் விடியற்காலம் ஊர் திரும்பவேண்டும" என்ருர்.

"ஒரு தடவை தவறி நடந்தால் எப்போதுமே நடப்பேனு. முன்பு செய்த துரோகம என் மனதைக் கொலகிறது. பால் சாப்பிடுங்கள்" என்று கூறி ஒரு கிளாஸ் பாலைக் கொடுத்தான்

அவர் சாப்பிட்டார். அரை மணி பேசிக் கொண்டிருந்தார்கள். என்ன இது? அவர் தலை ஏன் தொங்கிவிட்டது?

"விஜயபுரி வீரன்" மூலம் புது முகம் ஹேமலதா அறிமுகமாகிருர்.

தர்மலிங்கம் வாய்விட்டுப் பேசினுன்." ஏண்டா, பணம் வாங்கவா வந்தாய். பணம கிடையாது என்று சொன்னுல் ஊரைக் கூட்டி என் துரோகத்தை சொல்லியிருப்பாய். உன்னை ஏமாற்றவே உனக்கு பணத்தைக் கொடுத்து, உன்னிடமிருந்து பறித்துவிடத் திட்டமிட்டேன். பாலில் விஷம் கலந்துவிட்டேன். நீ பிழைப்பது ஏது? இநத நிமிடமே பணத்துடன் புறப்பட்டு விட்டேன். இனி இந்த தர்மலிங்கத்தை யருமே கண்டுபிடிக்க முடியாது."

எல்லாவற்றையும் மூட்டை கட்டினுன் தர்மலிங்கம்.

அதே சமயம் அவன் மண்டையில் ஒரு அடி விழுந்தது. "ஐயோ அப்பா" என்று கூச்சலிட்டான்.

எட்டிப் பார்த்தேன். வேறு ஒரு மனிதர் தர்மலிங்கத்தின் மண்டையில் விறகு கட்டையால் பலமாக அடித்துக் கொண்டிருந்தான்.

எனக்குக் கால்கள் வெட வெட என்று ஆ ன. யார் இவன்? ஏன் அவனைக் கொல்லவேண்டும். ஓடிப் போய் அவனைப் பிடிக்கலாமா. என்னையும் கொன்றுவிட்டால...? ஓடிவிட்டேன் என் வீட்டிற்குள். இரவு முழுவதும் தூக்கமில்லை. விடியற்காலம கண்ணயர்ந்தேன். மனைவி வந்து எழுப்பினள்.

"எதிர்வீட்டிலே மூணு கொலை. உள்ளே உங்க தர்மலிங்கம் மண்டையில் காயத்துடன் இறந்து கிடக்கிறர். இன்னெருவருத்தன் உடம்பு பூரா விஷம பரவிச் செத்துக் கிடக்கிறன்"

எழுந்தேன். என்ன செய்வது என்று தெரியவில்லை. போலீஸ் ஸ்டேஷனில் போய்ச் சொன்னல என்ன?

நம்மையே திருப்பிவிட்டால்......?

அங்கு முளைத்த மூன்ருவது மனிதன் யார்? திருடனு?

ஆஸ்பத்திரியில் ஒருவன் மரண வாக்குமூலம் கொடுப்பதாக ஜனங்கள் ஓடினர்களே. அவன்தானே என்னவோ? ஓடினேன் ஆஸ்பத்தரி பக்கம க.

டாக்டர் வேண்டியவர். உள்ளே போனன். அவன் படுக்கையில கிடந்தான்.

மாஜிஸ்ட்ரேட் வாக்குமூலம் எழுதிக கொண்டிருந்தார். மெதுவாக அவன் பேசினன்:

"நான் தமிழ் நாட்டைச் சேர்ந்தவன்தான். சிறு வயதிலேயே என் பெற்ருேர் கோலாலாபூர் போய் விட்டார்கள் என் தகப்பனர் ஏராள சொத்தை வைத்துவிட்டு இறந்து விட்டார் என் தாய் மாமன்தான் என்னையும் என் சொத்துக்களையும் பராமரித்து வந்தார்.

அவர் பேராசையால் என்னை அவருடைய வேலையாள் ஒருவன் மூலம அப்புறப்படுத்தி விட்டார். இந்த விஷய மெல்லாம் எனக்கு வெகு காலம் வரையில் தெரியாது. நான் சிறியவன். அப்போது நான் ரப்பர் தோட்டத்தில் கூலி வேலை செய்து பிழைத்து வந்தேன்

அப்பொழுது தான் யுத்தம் தொடங்கியது. குண்டு விச்சு நடந்தது.

என் தாய் மாமன் செய்த துரோகம என் எண்ணத்தில் எழுந்தது. அவரைப் பழிவாங்கிவிடுவது என்று புறப்பட்டேன.

ஆனல் நான் வந்தபோது அவர் வீடு இடிந்து கிடந்தது. அவரும் அவருடைய வேலையாளும் தாய்நாடு திரும்பிவிட்டதாகக் கேள்விப்பட்டேன். என சொத்தைத் திருப்பிப் பெற வந்தேன்.

எங்கெங்கேயோ விசாரித்து மூன்று நாட்களுக்குமுன்பு இவ்விடம் வந்தேன. ஒருவரும் அறியாமல் அவர்களைக் கவனித்தேன். முந்தா நாள் கண்டு பிடித்தேன.

நேற்றிரவு அவர்கள் சொத்தைப் பங்கு போட்டுக்கொண்டு கிளம்பப் போவது தெரிந்தது.

இருவரையும் தீர்த்துவிடத் துடித்தேன்.

என் அதிர்ஷ்டம் வேலையாளே விஷம் வைத்து என் மாமனைக் கொன்றுவிட்டான்.

என் வேலை மிச்சமாகிவிட்டது.

அவனைப் பொட்டில் தடியால் அடித்தேன்

அவன் சுருண்டு விழுந்தான்.

எல்லாவற்றையும் வாரிச் சுருட்டிக் கொண்டேன். யாரோ வருவது போன்ற சப்தம் கேட்டது.

விளக்கை அணைத்து விட்டு ஓடலானேன்.

அடுத்த நிமிடம் இருட்டில் ஒரு பெரிய கல்தூணில மண்டை வேகமாக மோதி பிரக்ஞை இழந்தேன். கண்விழித்துப் பார்த்தால இங்கு கிடக்கிறேன் எல்லாவற்றையும் சொல்லி விட்டால் மனப் பாரம் குறையும் என்று சொல்லிவிட்டேன்.

அடுத்த நிமிடம் அவன் தலை தொங்கிவிட்டது.

"முன்னேற்றத்திற்கு வேண்டிய திறமைகள் என்னிடம் இருக்கின்றன, சீக்கிரமே முன்னுக்கு வருகிறேன், பாருங்கள்" என்று, பிரபல நட்சத்திரமாகிவிட்ட ராஜசுலோசனவிடம் முன்னணிக்கு வந்து கொண்டிருக்கும் இளம் நடிகையான பத்மினி பிரியதர்ஸினி தோள்மீது கைபோட்டு உறுதி கூறுகிருர் போலும்.


டி.எஸ்.ஆர். & கோ
கும்பகோணம்
T.S.R'S
GOKUL
SANDAL
WOOD
TOILET POWDER
"GOKUL"
SANTOL
TOILET POWDER

தமிழ் நாட்டின் தலை சிறந்த மருத்துவ ஸ்தாபனம்

குரு மருந்துசாலை

60 ஆண்டுகள் அனுபவம்
[ஆங்கிலம்—தமிழ் தயாரிப்பு முறைகள்]

★

குரு தைலம்
குரு பல்பொடி

உங்கள் இல்லங்கள் அனைத்திற்கும் இன்றியமையாதவை

★

குரு குழந்தை மருந்துகள் அவசியம் பரீட்சியுங்கள்

ஸ்தாபகர்
லேட்—ராவ்பகதூர்
டாக்டர் எ. மதுரம்

N. B: குரு பற்பொடி புதிய மூவர்ண அச்சு டின்களில் விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. பழைய டின் தயாரிப்புகள் அறவே நிறுத்தப் பட்டுவிட்டன.

குரு தைலம் குரு டிரேட் மார்க் அச்சிட்ட பச்சை (GREEN CAPSULES) உரையால் மூடப்பட்டிருக்கும்.

விபரங்களுக்கு:

டாக்டர் எ. மதுரம் சன்ஸ்

குரு மருந்துசாலை :: திருச்சிராப்பள்ளி

கலைக் கூடங்களில் கடந்த மாதம்

அந்த பானம் எவ்வளவு ருசிக்கிறது என்பதை அவர்கள் முகமே காட்டுகிறதே!
—"பிறந்த நாள்" படப்பிடிப்பில் தேவிகா, மனோரமா.

"கல்லானாலும் கணவன்; புல்லானாலும் புருஷன்" என்ற கடமை உணர்ச்சியுடன் தொண்டு செய்து வருகிறாள் அவள். கணவனோ, குடியும், கூத்தியுமாக கொட்டம் அடித்து, தவறான பாதையில் போய் சீரழிகிறான். முடிவு, பிறர் பணத்தைக் கையாடிவிட்டு, சிறைக்குச் செல்லுகிறான். ஆனால், சிறை செல்லும் முன் தான் அவன் தன்னைத் தானே உணருகிறான். தன் மனைவியின் பெருந்தன்மையை உணர்கிறான். காலம் கடந்த ஞானோதயம் ஏற்படுகிறது. மனைவி கதறக் கதற கணவனை போலீஸார் இழுத்துச் செல்கின்றனர்.

இந்த உருக்கமான காட்சி ஏவி. எம் ஸ்டுடியோவில் தயாராகி வரும் ஜி. கே. புரொடக்ஷன்ஸாரின் "சகோதரி" யில் இடம் பெற்றுள்ளது. ஒளிப்பதிவாளர் புல்புலே பீம்ஸிங் டைரெக்ஷனில் இந்தக் காட்சியை சென்ற மாதம் படமாக்கினார். இந்தக் காட்சிகளில் கடமை உணர்ச்சியுள்ள மனைவியாக ராஜசுலோசனாவும், தீய வழியிலே செல்லும் கணவனாக பாலாஜியும் முரசொலி மாறன் எழுதிய வசனங்களைப் பேசி நடித்தனர்.

இப் படத்திற்கென ராஜசுலோசனா சம்பந்தப்பட்ட காட்சிகள் அனைத்தும் படமாகிவிட்டன. மற்றும் இப் படத்தில் பிரேம் நஸீர், முத்துராமன், ராமராவ், தேவிகா, தாம்பரம் லலிதா ஆகியோர் முக்கிய பாத்திரங்களில் நடித்து வருகின்றனர். படம் முடிவடைய இன்னும் ஒன்றிரண்டு காட்சிகளே பாக்கி நிற்கின்றன. ஏவி. எம்மிலிருந்து அடுத்து வெளிவறப் போகும் படம் இதுவே.

தர்மராஜன் பெயருக்கு ஏற்றபடி தர்மச் சிந்தனையுள்ளவர். இல்லாவிட்டால் ஒரு பெரும் தொகையைத் தன் மைத்துனர் நீலமேகத்திற்கு ஒரு கையெழுத்துக் கூட இல்லாமல்

நீலமேகம், நீ ஒரு தொழில் ஆரம்பித்துப்பிழைத்துக்கொள்" என்று எடுத்துக் கொடுப்பாரா?

அவர் ஒரு குதிரைப் பந்தயப் பித்தர்; ஆனால் அவருக்கு அதில் நிறைய ஆதாயமே கிடைக்கிறது. இது ஒரு காட்சி.

அதிருஷ்டம் ஒரே மாதிரி இருக்குமா? திரும்புகிறது. தர்மராஜன் நிலை மோசமாகிறது. தன் பணம் காசு அனைத்தும் இழந்த அவர், நீலமேகத்திடம் உதவிகேட்டு வருகிறார். தர்மராஜன் கொடுத்த பணத்தைக் கொண்டு தொழில் நடத்தி லட்சாதிபதியாகிவிட்ட நீலமேகம், நன்றி மறந்துவிடுகிறான். தன் தற்போதைய செல்வச் செழிப்புக்குக் காரணமான தர்மராஜனை தன் மைத்துனன் என்றும் பாராமல் அலட்சியப்படுத்துகிறான். இது மற்றொரு காட்சி.

சிவகெங்கைச் சீமை சிட்டுவும் (குமாரி கமலா) ஒளிப்பதிவாளர் தம்புவும் பேச்சில் ஈடுபட்டுள்ளனர்.

பணம் பெரிதா? பண்பு பெரிதா? இந்தப் பிரச்னையை அடிப்படையாகக் கொண்ட "கனவு பலித்த தம்மா" படத்திற்கென இந்த இரு காட்சிகளும் பரணி

ஒளிப்பதிவாளர் புல்புலே, தயாரிப்பு நிர்வாகி பஸ்வராஜ், டைரெக்டர் பீம்ஸிங், ராஜசுலோசனா, ஜி. கே. புரொடக்ஷன்ஸ் "சகோதரி" படப் பிடிப்பில்.





டைரெக்டர் ராமனதன், ஜாவர் சீதாராமன், சுசீலா, கண்ணும்பா, சகஸ்ரநாமம், தயாரிப்பாளர் அண்ணுமலை —"சனவு பலித்ததம்மா" படப்பிடிப்பில்.

ஸ்டூடியோவில் படமாக்கப்பட்டன. கலைமகள் பிக்சர்ஸின் இந்தத் தயாரிப்பின் கதை-வசனத்தை எழுதியுள்ள ஜாவர் சீதாராமனே இதில் அஸ்வபபிரியர் தர்மராஜனுக நடித்து வருகிறுர். நன்றி மறந்த நீலமேகமாக எஸ். வி. சகஸ்ரநாமம் நடிக்கிறுர். தர்மராஜன் மனைவி லட்சுமியாக கண்ணும்பாவும், நீலமேகத்தின் மனைவி பத்மாவாக வி. சுசீலாவும் நடிக்கின்றனர்

இப் படத்தில் மற்றும் டி. ஆர். மகாலிங்கம், வி. ஆர். ராஜகோபால் எஸ. வி. சுப்பையா, டி ஆர். நடராஜன், ஸ.மனுவதி, பண்டரிபாய், இவர்களுடன் புது முகம் ஜி. எல். ராஜமும் முக்கிய பாத்திரங்களில் நடித்து வருகின்றனர். எஸ். ராமநாதன் டைரெக்ஷனில் படத்தின் பெரும் பகுதி வளர்ந்துவிட்டது.

வ'ஹினி ஸ்டூடியோவில் "தாய் மகளுக்குக் கட்டிய தாலி" படப்பிடிபபின் இறுதிக் காட்சிகள் ஜரூராகப் படமாகிக் கொண்டிருந்தன. ஸி. என். அண்ணுத்துரையின் திரைக்கதைக்கு அரங்கண்ணல் வசனம் எழுதும் படம் இது. ஸெட்டில் சந்தித்தபோது அரங்கண்ணலிடம் "பெயரே விசித்திரமாக இருக்கிறதே, கதையின் முக்கிய கருத்து என்ன!" என்று கேட்டேன். அவர் சுருக்கமாக மணமாகாத மகளுக்கு சமூகத்திற்குப் பயந்து தாயே தாலி கட்டிவிடும் உருககமான கதை இது" என்று விளக்கினுர்.

ஏழைப் பெண்ணும் - பணக்கார வாலிபனும் சம்பந்தப்பட்ட காதல் காட்சி அன்று படமாக்கப்பட்டது. "நான் ஏழை" என்று அவள் கண்ணீர் உகுத்தாள். "காதலில் ஏழை பணக்காரன் என்ற பாகுபாடு கிடையாது; இயற்கைக்கு அந்த வித்தியாசம் இல்லே." இப்படிப் பல சொல்லி அவள் கண்ணீர் துடைக்கிருன் அந்தச் செல்வச் சீமானுன வாலிபன். ஏழைப் பெண்ணுக ஜமுனுவும், பணககார வாலிபனுக எம். ஜி. ராமச்சந்திரனும் அன்று நடித்தார்கள்.

இந்த ஜோடியுடன் கூட கே. ஏ. தங்கவேலு, ஓ. ஏ. கே. தேவர்,

இ. ஆர். சகாதேவன், காகா ராதா கிருஷ்ணன், டி. பாலசுப்பிரமணியம், ஆர். பாலசுப்பிரமணியம், ராஜ சுலோசனா, பி. கண்ணாம்பா, சுசீலா ஆகியோரும் படத்தின் முக்கிய பாத்திரங்களாக நடித்து வருகின்ற னர். கல்பனா கலாமந்திரின் தயாரிப்பான இந்தப் படத்தை தயாரிப்பாளர் ஆர். ஆர். சந்திரனே டைரெக்ட் செய்து வருகிறார். ஜூலை மாதத்தில் திரைக்கு வரப் போகும் இந்தப் படத்தின் உலக உரிமைகளை டி. என். கே. கோவிந்த ராஜுலு செட்டி ஸ்தாபனத்தார் பெற்றிருக்கிறார்கள்.

பெரிய மிராசுதார், பூவைலிங்கம் வீடு படுக்கை அறையில் அவர் மகள் மாலினி துப்பாக்கியால் சுடப்பட்டு, சாகும் தருவாயில் கிடக்கிறாள். அப்பொழுதுதான் மிராசுதார், தன் மகன் பூபதிக்கு பெண் பார்க்கப் போய்விட்டு வீட்டின் உள்ளே நுழை கிறார்.

மிராசுதார் வீட்டில் அகதி யாய் வளர்ந்து அவருடைய ஆதர வில் இருந்து வருகிறார் ஒரு வாலிபர். மிராசுதாரின் மகள் அவரைக் காதலித்து வருகிறாள். அவர் ஏற்கெனவே மணமானவர் என்றும் தற்செயலாய், அங்கு வந்த பெண் தான் அவர் மனைவி என்றும் தெரிந் தவுடன் மிராசுதார் மகள் உயிர் துறக்கும் முன் அவர்கள் இருவரை யும் சேர்த்து வைத்துவிட்டு உயிர் விடுகிறாள்.

தன் விரோதியின் மகன் அங்கி ருந்ததைப் பார்த்த வில்லன் நடராஜன் அவனைச் சுட்டது தவறி மிராசுதார்மகள் பேரில் பட்டு அவள் இறந்து விடுகிறாள். அவ்வளவுதான், போலீஸ் படை வருகிறது. அவரை விலங்குமாட்டி வழக்கப்படி அழைத்துப் போகிறது.

“பிறந்த நாள்” படத்திற்கென இந்த உச்ச நிலைக் காட்சி சமீபத்தில் பரணி ஸ்டுடியோவில் சுடப்பட்டது. இந்தக் காட்சியில் மிராசுதாராக வி. கே. ராமசாமியும் அவர் மகள் மாலினியாக தேவிகாவும், அகதி வாலிபனாக பிரேம் நஸீரும், அவன் மனைவியாக எம். என். ராஜமும், மிராசுதார் மகன் பூபதியாக டி. கே. ராமச்சந்திரனும் நடித்தார்கள். மற்றும் இந்தப் படத்தில் கள்ள பார்ட் நடராஜன், மனோரமா, சூர்ய கலா, கே. என். கமலம் ஆகியோர் நடித்து வருகின்றனர்.

வசனகர்த்தா அரங்கண்ணல் கூறுவதைக் கூர்மையாக எம். ஜி. ராமச்சந்திரனும், ஆர். ஆர். சந்திரனும் கவனிப்பதை அருகில் இருந்து பார்க்கிறார் ஜமுனா. “தாய் மகளுக்குக் கட்டிய தாலி” படப் பிடிப்பில்.



இப்படிப் பேசுவார்களா?

[நகைச்சுவையோடு இரண்டு உள்ளங்கள் உறவாடுவதை எடுத்துக் காட்டுவதுதான் இப்பகுதியின் நோக்கம். எவர் மனமும் புண்படும்படி எழுதப்பட்டது அல்ல என்பது உண்மை; ஹாஸ்ய மனப்பான்மையுடன் இதைப் படித்து ரசியுங்கள். ஆசிரியர்.]

(சென்னை மயிலாப்பூர்-ஸ்டேட்ஸ் ஹோட்டல வாசலிலே, எம். ஏ. வேணு அவர்களின் கார் வந்து நிற்கிறது. காரிலிருந்து இறங்கி உள்ளே போகிறார் தமிழரசுக் கழகத் தலைவர் 'சிலமபுச் செல்வா ம. பொ. சிவஞானக் கிராமணியார் உள்ளே கூட்டம் நிரம்பிய ஹாலை ஒரு நோட்டம் பார்க்கிறார். சற்று ஒதுங்கிய இடத்திலே அமர்ந்து 'கல்கண்டு' ஆசிரியர் தமிழ்வாணன் இட்டிலி சாபபாரிலே விளையாடிக் கொண்டிருக்கிறார். அவர் பக்கத்திலே இரண்டு நாற்காலிகள் காலியாக இருபபதைக்கண்டு ம. பொ. சி. அங்கு போய் அமர்கிறார். தன் அருகிலே அமர்ந்தவரைக் கண்டதும் தமிழ்வாணன் சட்டெனத் தமது சட்டைப்பையிலிருந்து கருப்புக் கண்ணாடியை எடுத்த அணிந்து கொள்கிறார். விரல்களால் மீசையை ஒதிக்கி விட்டுக் கொண்டே லேசாகச் சிரித்து பேச்சை ஆரம்பிக்கிறார் ம. பொ. சி.)



ம. பொ. சி: எதுக்கு கருப்புக் கண்ணாடி இப்போ? அது இல்லாமலேயே நீங்கள் தான் தமிழ்வாணன்னு எனக்கு நல்லாத் தெரியுதே!

தமிழ்வாணன்: எப்படிங்க? நாம் இதுக்கு முன்னாடி சந்திச்சதே யில்லீங்களே?

ம. பொ. சி: நேரே சந்திக்க வேண்ணு என்னாங்க? சுபாஷ் சந்திரபோஸ் உயிரோடெ திருப்பி வந்திட்டாரு, அவருடைய படத்தைப் போட்டு பத்திரிகைக் காரங்க எப்படி அமர்க்களப் படுத்து வாங்களோ, அதைவிட கலாட்டாவா இருக்குதுங்களே உங்க படமும், சினிமாப் படத்துக்கு நீங்க வசனம் எழுதப்போற விஷயமும்:

தமிழ்: உங்க பேச்சைக் கேட்க ரப்போ எனக்கு ரொம்பப் பெருமையா இருக்குதுங்க. சுபாஷ் போஸுக்கு இருக்கிற புகழ் எனக்கும் இருக்குதுண்ணு.........

ம. பொ. சி: நிலைச்சுடாதீங்க! நான், தந்திமாதிரி எல்லாம் ஒண்ணும் சொல்லலே! சாதாரண விஷயத்துக்குப் போய் இவ்வளவு விளம்பரப் படுத்தராங்களேன்னுதான்...

தமிழ்: இப்போத்தாங்க எனக்குப் புரியுது,!

ம. பொ. சி: என்னங்க?

தமிழ்: தமிழ்வாணன் மேலே ம. பொ. சிக்கு எவ்வளவு பொருமை இருக்குதுண்ணு புரியுது.

ம. பொ. சி: (சிலம்புச் சிரிப்புடன்) தமிழ்வாணரே! சின்னப் பசங்களுக்கு பத்திரிகை நடத்தி நடத்தி உங்கள் அறிவும் கொஞ்சம் சின்னப் பிள்ளைத்தனமாத்தான் போச்சு! உங்களைப் பார்த்து நான் ஏன் பொருமைப்படணும்? நமக்கும் ஒரு கருப்புக் கண்ணாடி இல்லையேன்னு?.

தமிழ்: அதெல்லாம் இல்லை பஞ்சத்துக்குப் பயந்து, தமிழ் நாட்டிலே தஞ்சம் புகுந்த ஒரு ஆந்திர வஞ்சகனை, கொள்ளைக்கார கெட்டிபொம்முவை, முதல் முழக்கம் செய்த தமிழ் வீரன், சூரன், அப்படி. இப்படீன்னு மீசையை முறுக்கிக்கிட்டு நீங்க அளந்தீங்க! அதைப் பொய்யாக்கிட்டேன். நான் அந்தக் கோபத்திலே...

ம. பொ. சி: சரி, தம்பி. அப்படியே இருக்கட்டும். ஆனா முதல் முழக்கம் செய்தவன் புலித்தேவன்கிறதை உங்களாலே சரித்திர பூர்வமாக நிரூபிச்சுக் காட்ட முடியுமா? ராபர்ட் கிளைவும், திப்பு சுல்தானும் அடிச்சுக்கிட்ட பழைய கதையை, பத்து இதழ் கல்கண்டிலே புலித்தேவன் வரலாறுன்னு எழுதிட்டாப் போதுமா? ஆதாரம் எங்கே! ருசு எங்கே?

தமிழ்: எங்கேயா? நான் எழுதி இ. ஆர். சகாதேவன் நடிக்கிற "புலித்தேவன்" நாடகத்தைப் பாருங்க.

ம. பொ. சி: பார்க்கணும்னுதான் ஆசைப்பட்டேன். ஆனால் எங்கே நடக்குது அந்த நாடகம்? எங்கே இருக்காரு அதை நடத்தற சகாதேவன்? ஒருவேளை திப்பு சுல்தான் இருந்த நந்திமலைக்குப் போய் விட்டாரோ? விலாசம் தெரியுமா உங்களுக்கு?

தமிழ்: எழுதிக் கொடுத்ததை ஒழுங்கா, வெற்றிகரமா நடத்தலேன்னு அதுக்கு நானா பொறுப்பாளி!

ம. பொ. சி: நீங்க பொறுப்பாளியோ இல்லையோ, எனக்குத் தெரியாது. ஆனா, ஒழுங்கா நாலு படத்திலே நடிச்சு, ஏதோ நாலு காசோட சந்தோஷமா இருக்கிற மற்றவங்க மாதிரி இருந்த ஒரு நல்ல நடிகரை உங்க சுயநலத்துக்



குப் பலியாக்கி இப்போ கடன்காரனு ஆசாமியைத் தெருவிலே அலையச் செயததுக்கு மட்டும நீங்கதான் பொறுப்பாளி, இல்லையா?

தமிழ: நீங்க அனுவசியமா என்னைப் பழிக்கிறீங்க, ஆனல், சகாதேவனுக்கு என்னுடைய புலித்தேவனல், எதுவரை விளமபரம், புகழ் எல்லாம்... இதை அவர் மறக்க முடியுமா?

ம. பொ. சி நீங்களே நினைச்சுப் பாருங்களேன், இப்போ அவரு எப்படி இருக்காரு? நீங்க எப்படி இருக்கீங்க? என்னமோ, பலடி, கில்டி அடிச்சு பட உலகில் வசன கர்த்தானு மார்க்கட்டில் புகுந்து விட்டீர்கள். இனிமே, புலித்தேவனைப் பற்றியோ, சகாதேவனைக் குறித்தோ என்ன கவலை உங்களுக்கு?

தமிழ்: நீங்க ஆசைப்பட்டதை நான் அடைஞ்சிட்டேன். இந்த பாருங்க ம. பொ. சி.! இது பொல்லாத உலகப! பணம் இலலேன்ன பத்து வி நாடிகூட இருக்கமுடியாது! திருடக்கூடாது, பொய் சொல்லக் கூடாது மத்தப்படி எந்த வழியிலே பணம் சம்பாதிச்சா என்ன?

ம. பொ. சி. அதுக்கா எவனே ஒருத்தனை சுத்த வீரன், முதல் முழக்கம் செய்தவன், அவன், இவன்னு சொலறதா? புலித்தேவனை நீங்க கிளப்பினீங்க. குமாரத்தேவன்னு இன்னெருத்தர் கிளம்பியிருக்காரு! இதே கணக்கிலே போனு பத்தாயிரக்கணக்கிலே முதல் முழக்கம் செய்த வீரன்கள் கிளம்பிடுவாங்க.

தமிழ்: அதிலே உங்களுக்கு என்ன நஷ்டம்?

ம. பொ. சி: என்னங்க உளறீங்க? பத்தாயிரம் வீரர்கள் அத்தக் காலத்தில் இருந்திருந்தால் 1947ம் வருஷம் வரை வெள்ளைக்காரன் இந்தியாவில் இருந்திருப்பானு? சுயநலக் கூட்டம் பெருத்துப் போனதினலேதான் தங்கத் தமிழ் நாடு தாழ்ந்து போச்சு, தலை குனிஞ்சு போச்சு.

தமிழ்: எங்கே போச்சு, உங்க தமிழரசுக் கழகம்? அது காப்பாத்தலாமே தமிழையும், தமிழர்களையும்? சும்மா அளக்காதீங்க ம. பொ. சி. தமிழ், தமிழ நாடுன்னு மீசையை முறுக்கிவிட்டுக்கிட்டு ஆ, ஊன்னு கத்தனீங்க. நாலு காசு, பணம் முடிப்பா வந்ததும் முருகான்னு குந்திட்டீங்க. இப்போ, தமிழும், தமிழ் நாடும், தமிழர்களும் எம். ஏ. வேணு கம்பெனியிலும, ஏ பி என். கூட்டத்திலுமாகத்தான் இருக்குது.

(ம. பொ சி. கோபத்துடன மீசை துடி துடிக்க முறைக்கும் வேளையில், ஹோட்டல் சர்வர் ஒரு கிளாஸ் நிறையக் குளிர்ந்த பாதம கீரைக் கொணடு வந்து அவர் முன்பு வைக்கிருன்.)

தமிழ்: (சிரிப்புடன்) அவருக்கு குளிர்ந்ததாக இருந்தால் உடம்புக்கு சரிபபட்டு வராது அவங்க ஓடஸ் கஞ்சிதான் சாப்பிடுவாங்க, ஓவல் ஒரு கிளாஸ் சூடாகக் கொண்டாப்பா. சும்மா சாப்பிடுங்க ம. பொ. சி. இது நம்ம ஓட்டல தான்.

ம. பொ சி: நமம ஓட்டலா? நமம சகாதேவனுச்சு! நமம குப்தாவும்...

தமிழ்: (கோபமாக, கறுபபுக் கண்ணுடியைக் கழட்டி கையில் வைத்துக்கொண்டு) ம பொ. சி!

ம. பொ. சி: குப்தா, ரொம்ப புத்திசாலி, வடநாட்டு ஆசாமியலலவா? கடைசிவரை நீங்க இருப்பீங்களா? இல்லே இட்லி சாம்பார் தான் மிச்சமாங்கிறதைப் பொறுத்துத்தான் பார்க்கவேண்டும் நான் வர்ரேன்.

(ம. பொ. சி. எழுந்து போகிருர், போகிறவரை முறைத்துக் கொண்டே தமிழ்வாணன் சாம்பாரில் ஊறிப்போன மூன்று இட்லியுடன், பக்கத்துப் பிளேட்டிலிருந்த இரண்டு ஆறிப்போன மெது வடைகளைத் துணடு, துண்டாகக் கிள்ளிப் போட்டுக்கொண்டே இருக்கிருர்.)

இந்திய திரைப்படத் தொழில்

இந்திய திரைப்படத் தொழில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு வேலை அளித்து வருவதாக மதிப்பிடப் பட்டிருக்கிறது. சினிமாத் தியேட்டர் களில் வேலை பார்த்து வரும் 56,000 பேரும், ஆய்வுக்கூடங்களில் வேலை பார்த்து வரும் 15,000 பேரும் இதில் அடங்கியுள்ளனர். மற்றப் பேர்கள் தயாரிப்பு, விநியோகம் ஆகிய பிரிவு களிலும், சம்பந்தப்பட்ட இதர ஸ்தா பனங்களிலும் வேலை பார்த்து வரு கின்றனர்.

ஸ்டுடியோக்களும், ஆய்வுக் கூடங்களும்

இந்நாட்டில் மொத்தம் 63 ஸ்டுடி யோக்கள் உள்ளன. அவற்றில் 28 ஸ்டுடியோக்கள் மேற்குப் பிராந்தியத் திலும், 11 ஸ்டுடியோக்கள் கிழக்குப் பிராந்தியத்திலும், 24 ஸ்டுடியோக்கள் தென்பிராந்தியத்திலும் உள்ளன. இறுதிக் கட்ட வேலைகளுக்கான 29 ஆய் வுக்கூடங்களில் 18 ஆய்வுக்கூடங்கள் மேற்குப் பிராந்தியத்திலும், 16 ஆய்வுக் கூடங்கள் தென் பிராந்தியத்திலும், 5 ஆய்வுக்கூடங்கள் கிழக்குப் பிராந்தி யத்திலும் உள்ளன,

படத் தயாரிப்பு

1931-ம் ஆண்டில் இந்தியாவில் மொத்தம் 28 முழுநீளப் படங்கள் தயா ரிக்கபபட்டன; 1958-ம் ஆண்டில் அவற் றின் எண்ணிக்கை 295-க்குப் பெருகி யது. 1941-லும், 1951-லும் அவற்றின் எண்ணிகசை முறையே 167-ம், 219-ம் ஆக விருந்தது.

"பிறந்த நாள்" படத்தில் வரும் உச்ச நிலைக்காட்சியில் பிரேம் நஸீர், எம். என். ராஜம் மற்றும் முக்கிய நடிகர்-நடிகையர்.

சென்ற ஐந்து ஆண்டு காலத்தில் சமூகப் படங்கள் எண்ணிக்கையானது பெரிதும் குறைந்து விட்டிருக்கிறது. 1952-ல் அவற்றின் எண்ணிக்கை 204 ஆகவிருந்தது, 1958-ல் 150-க்குக் குறைந்து விட்டது.

குற்ற விஷயங்கள் சம்மந்தப் பட்ட திரைப் படங்களின் எண்ணிக்கை 1954-ல் நான்காக இருந்தது. 1958-ல் 28 ஆகக் கூடி விட்டது.

மொழிவாரியாக, 1958-ம் ஆண்டில் பிராந்திய மொழிகளில் தயாரிக்கப் பட்ட திரைப் படங்களின் எண்ணிக்கையில் தமிழ் முதலிடம் பெற்றது; மொத்தம் 61 முழு நீள தமிழ்ப் படங்கள் தயாரிக்கப்பட்டன. இந்தியில் 116 திரைப் படங்கள் தயாரிக்கப்பட்டன. பிராந்திய மொழிகளில் தமிழுக்கு அடுத்தபடியாக வங்காளியில் 15 படங்களும், தெலுங்கில் 36 படங்களும் மராத்தியில் 16 படங்களும், கன்னடத்தில் 11 படங்களும், மலையாளத்தில் 4 படங்களும், சிந்தியில் 3 படங்களும் அஸ்ஸாமி மொழியில் 2 படங்களும் பஞ்சாபியில் 1 படமும் தயாரிக்கப்பட்டன.

1931-ல் இந்தியில் 23 படங்களும் வங்காளியில் மூன்று படங்களும் தமிழில் ஒரு படமும் தெலுங்கில் ஒரு படமும் தயாரிக்கப்பட்டன.

தணிக்கை போர்டு

திரைப்படத் தணிக்கை போர்டு 1958-ம் ஆண்டில் 6463 இந்தியப் படங்களுக்கும், 17,379 வெளிநாட்டு படங்களுக்கும் அத்தாட்சி வழங்கியது. அது பரிசீலனை ஆண்டில் மொத்தம் 3161 படங்களைப் பரிசீலனை செய்தது. அவற்றில் 65 வெளிநாட்டுப் படங்கள். உள்பட 90 திரைப்படங்களுக்கு அத்தாட்சி மறுக்கப் பட்டது. 2964 படங்களுக்கு சகல வயதுப் பிரிவினருக்கும் பார்க்கத் தக்கதான பத்திரமும், 133 படங்களுக்கும், வயது வந்தவர்கள் மாத்திரம் பார்க்கத் தக்கதாக "ஏ" அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்பட்டது.

ஸ்தாபிதம் 1920

உலகமெங்கும் புகழ் பெற்றது. பல எக்ஸிபிஷன்களில் மெடல்கள் பரிசு பெற்றது.

P.V. RAJAN'S SUPERIOR MADRAS SNUFF

தந்தி: நஸ்யம் மதருஸ்

நெ. 1 எக்ஸ்ட்ரு ஸ்பெஷல் பட்டணம் பொடி ஒரு தோலா டின்களிலும் கிடைக்கும்.

பி. வி. ராஜன் & கம்பெனி

உயர்ந்த பட்டணம் பொடி

& R. S. சுகந்த மூக்குத்தூள் பாக்டரி

அரக்கோணம் & மதருஸ்

(மற்ற பொடி தினுசுகளுக்கும், விவரங்களுக்கும் எழுதவும்.)

எழில் ரோஜா

சரோஜா தேவி

முள்ளினுள்ளே ஒருரோஜா முகங்காட்டி ;
மோகனப்பண் பாடுதல்போல் வெண்திரையில்,
உள்ளயதைக் கொள்ளையிடும் ஓவியமாய் ;
உரையாடிப் பண்பாடும் ஒருரோஜா.

மதுமலராய் ; மயக்கிவிடும் வடிவழகாய் ;
மான்விழியாய் ; போகனப்பண் தேன்மொழியாய்,
புதுவண்ண வான்வில்லாய்ப் பூங்கொடியாய் ;
பண்பாடும் குயிலொதத பெண்ணுருவாய்,

சதுரங்கக் காயென்னத் திரைவானில் ;
சதிராடி இசையோடு சிறப்பாக,
புதுமுகமாய்ப் புகுந்திட்ட பூங்கோதை,
புகழேணி உச்சநிலை பெற்றதுமேன்?.

கனியாத காதலதைக் கட்டவிழ்த்து ;
கரையற்ற களிப்பூட்டும் காரிகையாய்,
தனியாக சோகத்தைதத தானேற்று ;
தாங்காத குறிப்பதனைத் தெளிவாக்கி,

பணியாத வீரத்தைப் பார்வையிலே ;
பாராட்டும் வகையோடு வெளியிட்டு,
இனியாரோ நிகரெனக்கு என்றியம்பும் ;
எழில்ரோஜா சரோஜா தேவியாம்!.

மாசு. நாதன்

"இந்த காகா பிடிக்கிற வேலையெல்லாம் நம்பகிட்ட வச்சுக்காதே!" —எஸ். டி. எஸ். புரொடக்ஷன் படத்தில் மனோரமா, காகா ராதாகிருஷ்ணன்.

சரவணா பிலிம்ஸின் பெயரிடப் படாத அவர்கள் முதல் தயாரிப்பில் சிவாஜி கணேசனும் சரோஜா தேவியும் ஜோடியாக நடிப்பது ஒரு விசேஷம். அத்துடன் அவர் இதுவரை ஏற்று நடிக்காத ஒரு புது மாதிரி கதாபாத்திரமாக இப் படத்தில் வருகிறார். அவருடன் கூட இப்படத்தில் டி. எஸ். பாலய்யா எம். ஆர். ராதா, சுப்பையா, எம். என். நம்பியார், எஸ் ராமாராவ், எம். வி. ராஜம்மா, லலிதா, ஸி. கே. சரஸ்வதி, ஸி. டி. ராஜகாந்தம் இப்படிப் பலர் நடித்து வருகின்றனர். நெப்டியூன் ஸ்டுடியோவில் தயாராகும் இப்படத்தின் கதை-வசனத்தை சோலைமலை எழுதி யிருக்கிறார். இந்தப்படத்தின் சங்கீத டைரக்ஷனை விஸ்வநாதன் - ராமமூர்த்தி ஜோடியும், டைரக்ஷனை பீம்ஸிங்கும் கவனித்து வருகின்றனர்.

மருத நாட்டு வீரன்

சிவாஜி கணேசன், பி.எஸ். வீரப்பா, காகா ராதாகிருஷ்ணன், ஏ. கருணாநிதி, கே. நடராஜன், ஜமுனா, சந்தியா, எம. சரோஜா ஆகியோர் நடித்து வரும் "மருதநாட்டு வீரன்" விஜயா ஸ்டுடியோவில் வளர்ந்து வருகிறது. ஸ்ரீ கணேஷ் பிரஸாத் மூவீஸின் இத்தயாரிப்பை டி. ஆர். ரகுநாத் டைரெக்ட் செய்து வருகிறார்.

கலீர் கலீர்

இந்திரா பிலிம்ஸாரின் "கலீர் கலீர்" (இது தற்காலிகப் பெயர்தான்!) கோல்டன் ஸ்டுடியோவில் படப்பிடிப்புத் தொடங்கியது. முதல் நாள் நடுத்தெரு நடனகோஷ்டியின் நடனம் ஒன்று படமாக்கப்பட்டது அதன் தலைவி ஈ. வி. சரோஜா இக் காட்சியில் நடித்து நடனமாடினார். இப்படத்தில் டி. ஆர். மகாலிங்கம், ஈ. வி. சரோஜா, ராகினி, எம். ஆர். ராதா, கருணாநிதி, ராமாராவ் ஆகியோர் நடிக்கின்றனர். பி. நீலகண்டன் இப்படத்தை டைரெக்ட் செய்கிறார். கே. வி. மகாதேவன் இசை அமைக்கிறார். நடன டைரக்ஷனை கோபால கிருஷ்ணன் கவனித்து வருகிறார்.

நாடகமே உலகம்

பராசக்தி பிக்சர்ஸார் சிறிதளவு படமாக்கி நிறுத்தப் பட்டிருந்த "நாடகமே உலகம்" படத்தை இப்பொழுது மீண்டும் படமாக்கத்

தொடங்கியுள்ளனர். இப்படத்தில் டி. ஆர். ராமச்சந்திரன், எஸ். வரலட்சுமி காதல் ஜோடியாக நடிக்கின்றனர். மற்றும் புதுமுகம் நந்தினி பிரண்ட் ராமசாமி கே. ஆர். ராம்சிங் கணபதிபட் டி. பி. முத்து லட்சுமி, கஜகர்ணம் ஆகியோரும் நடித்து வருகின்றனர். படம் நியூடோன் ஸ்டுடியோவில் வளர்ந்து வருகிறது. இப்படத்திற்கு ஜி. ராமநாதன் இசை அமைத்துள்ளார்.

ஓடி விளையாடு பாப்பா

ஒரு இலட்சியத்தை மனதில் கொண்ட எழுத்தாளனாக எஸ் எஸ். ராஜேந்திரன் "ஓடி விளையாடு பாப்பா" வில் நடித்து வருகிறார். பிலிம் சென்டர் ஸ்டுடியோவில் பெரும் பகுதி படமாகிவிட்டது. இது ஜகஜ்ஜோதி பிலிம்ஸின் தயாரிப்பாகும். சமூகப் பணியில் ஈடுபாடு கொண்ட மங்கையாக பி. சரோஜா தேவி நடிக்கிறார். மற்றும் ஜி. சகுந்தலா, மோகன் ஆகியோர் நடித்து வருகின்றனர். கே. அப்பன்ராஜ் என்பவர் கதை-வசனம் எழுதியுள்ள இந்தப் படத்தை வி. ஸ்ரீனிவாசன் டைரக்ட் செய்து வருகிறார்.

உத்தமி பெற்ற ரத்தினம்

அமரா புரொடக்‌ஷன்ஸின் தயாரிப்பான "உத்தமி பெற்ற ரத்தினம்" எம். ஏ. திருமுகம் டைரெக்‌ஷனில் வேகமாக உருவாகி வருகிறது. இந்தப் படத்தில் ஒரு எஸ்டேட்டின் சொந்தக்காரராக எஸ் வி. சகஸ்ரநாமமும், அவர் மனைவியாக பண்டரிபாயும், எஸ்டேட்டில் கூலிகளில் ஒருவனாக எஸ். வி சுப்பையாவும், அவன் மனைவியாக கண்ணாம்பாவும் அவர்கள் மகனாக பாலாஜியும் படத்தின் முக்கிய பாத்திரங்களில் நடித்து வருகின்றனர்.

சுவீகாரம்

தான் சொந்தமாகத் தயாரித்து வரும் "சுவீகாரம்" படத்திற்கு திரைக்கதை வசனத்தைத் தாமே எழுதியிருக்கிறார் வில்லன் நடிகர் டி. எஸ் பாலய்யா. படத்திற்கான பாட்டுகளை பாபநாசம் சிவனும், கவி லட்சுமண தாஸும் எழுதியிருக்கிறார்கள். சங்கீத டைரெக்‌ஷனையும், டைரெக்‌ஷனையும் முறையே வி. தக்ஷிணாமூர்த்தியும், வி எஸ் நாராயணனும் கவனித்து வருகின்றனர். உத்தரா பிலிம்ஸ் தயாரிப்பான இப்படத்தில் சிவாஜி கணேசன், டி. எஸ். பாலய்யா தங்கவேலு, எஸ். வி சுப்பையா, மோகன், வி. ஆர். ராஜகோபால், ராகினி, சந்திரகாந்தா, கண்ணாம்பா, ஆகியோர் நடித்து வருகின்றனர்.

''என் அன்பில் உனக்கு சந்தேக மிருந்தால், இதோ என் இதயத்தைக் கேள். அது சொல்லும்.'' என்று ராஜ சுலோசனாவிடம் பிரேம் நஸீர் கேட்பது அரவிந்த் பிக்சர்ஸ் ''அருமை மகள் அபிராமி''யில்.

கலப்பை பிடித்த கனவான்

வாஹினி ஸ்டூடியோவில் உருப் பெற்றுவரும் "கலப்பை பிடித்த கனவான்" சம்பு பிலிம்ஸாரின் தயாரிப்பு. இப்படத்தின் திரைக்கதை வசனத்தை ரா. வே. எழுதி யிருக்கிருர். ஏ. சுப்பாராவ் டைரெக்ஷனில் தயாராகிவரும் இப்படத்தில் நாகேஸ்வர ராவ், பாலய்யா, சாரங்கபாணி, சாவித்திரி ஆகியோர் நடித்து வருகின்றனர்.

தோழன்

நடுவில் சிறிது காலம் தடைப் பட்டிருந்த ஏ. டி. எம். புரொடக்ஷன்ஸின் "தோழன்" படப் பிடிப்பைத் தயாரிப்பாளர் ஏ. திருவேங்கட முதலியார் மீண்டும் தொடங்கியுள்ளார். இப் படத்தின் சங்கீத டைரெக்ஷனை ஜி. ராமநாதனும், டைரெக்ஷனை கே. வேம்புவும் கவனித்து வருகின்றனர். இப் படத்தின் கதை-வசனத்தை சக்தி கிருஷ்ணசாமியும் பாட்டுகளை கண்ணதாசன் மருதகாசி இருவரும் எழுதிக் கொடுத்திருக்கிருர்கள். அஞ்சலிதேவி, மாதுரிதேவி, என். எஸ். கே. மதுரம், பேபி உமா, அங்கமுத்து, மனோகர், நரஸிம்ம பாரதி, என். எஸ். கிருஷ்ணன், கே. ஆர். ராம்சிங், டி. பாலசுப்பிரமணியம், சாயிராம், மாஸ்டர் முரளி ஆகியோர் நடித்து வருகின்றனர்.

இளைய கன்னி

பாரமௌண்ட் ஸ்டூடியோவில் துரிதமாக வளர்ந்து வரும் படங்களில் ஒன்று "இளைய கன்னி." இது மெட்ரோ பிலிம்ஸாரின் தயாரிப்பு உசிலை சோமநாதன் இப் படத்தின் கதை-வசனத்தை எழுதி யிருக்கிருர். ஜே. பி. ராஜ்-க. நாராயணன் இருவரும் கூட்டாக இந்தப் படத்தை டைரெக்ட் செய்து வருகின்றனர். பிரேம் நஸீர், ஓ. ஏ. கே. தேவர், பக்கிரிசாமி, முத்துராமன், தேவிகா, கண்ணும்பா சூர்யகலா, மனோரமா ஆகியோர் முக்கிய பாத்திரங்களில் நடித்து வருகின்றனர்.

மல்லியம் மங்களம்

தமிழ் நாடு டாக்கீஸார் "மல்லியம் மங்களம்"த்தைப் படமாக்கத் தொடங்கிவிட்டனர். சேவா ஸ்டேஜ் குழுவினர் நடித்து வரும் நாடகம் இது. இதன் கதை-வசனத்தை பி. எஸ். ராமய்யா எழுதி யிருக்கிருர். ஸிட்டாடல் ஸ்டூடியோவில் தயாராகி வரும் இந்தப் படத்தை சௌந்தரராஜன் டைரெக்ட் செய்து வருகிருர். பண்டரிபாய், தேவிகா, எஸ். என். லட்சுமி, மைனாவதி, சகஸ்ரநாமம், சுப்பையா, வி. ஆர். ராஜகோபால், டி. என். சிவதாணு, சாரங்கபாணி ஆகியோர் இப்படத்தில் நடித்து வருகின்றனர்.

சித்தூர் ராணி பத்மினி

நட்சத்திர நடிகர் நடிகைகள் பலர் நடிக்கும் மற்ருெரு படமாகும் உமா பிக்சர்ஸின் தயாரிப்பான "சித்தூர் ராணி பத்மினி." சரித்திரப் பின்னணியைக் கொண்ட இக் கதையின் திரைக்கதையை அமைத்து வசனங்களையும் எழுதி யிருக்கிருர் ஸ்ரீதர். சிவாஜி கணேசன்—வைஜயந்திமாலா காதல்ஜோடியாக நடிக்கும் இந்தப் படத்தில் டி. எஸ். பாலையா, நம்பியார், காகா ராதா கிருஷ்ணன், ராகினி, டி. பி. முத்து லட்சுமி ஆகியோர் முக்கிய கதா பாத்திரங்களாக நடித்து வருகின்றனர். டைரெக்ஷன், ஆர்ட் டைரெக்ஷன், சங்கீத டைரெக்ஷன் இவற்றை முறையே லி எச். நாராயண மூர்த்தி, சேகர், ஜி. ராமநாதன் ஆகியோர் கவனித்து வருகின்றனர். இப் படத்திற்கென சாயி – சுப்புலட்சுமி சகோதரியரின் நடனம் ஒன்று சமீபத்தில் படமாக்கப் பட்டது.

50 ஆண்டுகளாகப் புகழ் பெற்றது

ஆர். எஸ். பதி மருந்து

தலைவலி, ஜலதோஷம் முதலிய வியாதிகளுக்கு
கைகண்ட மருந்து

புட்டி 1-க்கு விலை 75 காசுகள்.

★

மேரிராம் பற்பொடி

பற்களை வெண்மையாக்குவதுடன் பாது
காக்கவும் செய்கிறது.

டின் 1-க்கு விலை 37 காசுகள்.

★

லேடிடால் ஹேர் ஆயில்

பல குளிர்ந்த மூலிகைகளினால் தயாரிக்கப்பட்ட சந்தனாதித் தைலம். இதை உபயோகித்து வந்தால் கண் எரிச்சலைப் போக்கி, மூளைக்குக் குளிர்ச்சியைத் தரும். எண்ணெய் ஸ்நானத்திற்கும் உகந்தது.

புட்டி 1-க்கு விலை ரூ. 1.25

★

ஆர். எஸ். பதி & கோ.

(ஸ்தாபிதம் 1909)

தபால் பெட்டி எண் : 99 — 214 & 215, மேலமாசி வீதி, மதுரை

கோவை, சேலம் இரு ஜில்லாக்களுக்கு மட்டும் விநியோகஸ்தர்கள் :—

மெஸர்ஸ் K. V. S. B. & சன்ஸ், ஈரோடு.

திருச்சி, தஞ்சை இரு ஜில்லாக்களுக்கு மட்டும் எழுதுக :—

மெஸர்ஸ். சுகுமாரி ஏஜன்ஸீஸ்,

213, மேலமாசிவீதி. Post Bag No. 172, மதுரை

சென்னை விற்பனை நிலையம் :—

111, தேவராஜ முதலித் தெரு, லாலா மார்க்கட், சென்னை-3.



"காத்திருந்தவன் பெண்டாட்டியை நேற்று வந்தவன் கொண்டு போன" கதையை பி. சரோஜா தேவிக்கு ராஜேந்திரன் கூறுகிறாரோ? —"பிரஸிடெண்ட் பஞ்சாட்சரத்"தில்


ஸேவாஸ்கிரீன்ஸ்
நாலு வேலி நிலம்
டைரக்ஷன்: வி.ஸ்ரீனிவாஸன்





கிராமாந்தர சூழ்நிலையிலே நடைபெறும் அந்தக் கதைக்கு தி. ஜானகிராமன் வசனங்கள் எழுதியிருக்கிறார். இதன் கலை டைரெக்டர் கலாசாகரம் ராஜகோபால் கிராமப்பகுதிகளையெல்லாம் தத்ரூபமாக ஸ்டுடியோக்களில் போட்டுக் கொடுத்திருக்கிறார்.

பாரதியின் "ஒளி படைத்த கண்ணினாய" பாடலுக்கு மிகச் சிறப்பாக பாவம் பிடித்து ஆடுகின்றனர் சாயி சுப்புலட்சுமி சகோதரியர்.

மெஜஸ்டிக் பிக்சர்ஸ்
நாட்டுக்கொரு நல்லவள்


சோவியத்தின் பிரபல நாவலாசிரியர் லியோ டால்ஸ்டாயின் கதை ஒன்றைத் தழுவி இப் படக்கதையை அமைத்து, வசனங்களை எழுதியுள்ளார் ஆத்ரேயா
KR





எஸ். எஸ். ராஜேந்திரன், எஸ். வி. சகஸ்ரநாமம், பீர்முகமது, பண்டரிபாய், விஜயகுமாரி, காமினி, இவர்களுடன் புது முகங்களும் நடிக்கும் இப்படம் தசரதராமய்யா டைரக்ஷனில் ஸிடாடல் ஸ்டூடியோவில் முற்றுப் பெற்று வருகிறது.

தேவரின் திட்டம்

"வாழவைத்த தெய்வ"த்தை உருவாக்கிவரும் சின்னப்பத் தேவர், "சந்தனத் தேவன்" கதையைப் படமாக்கத் திட்டமிட்டிருக்கிருர். இப்படத்தை ஈஸ்ட்மன் கலரில் தயாரிக்கப் போகிருர். எம். ஏ. திருமுகம்தான் படத்தைடைரெக்ட் செய்வார். அதறகு முன் "யானைப் பையன்" என்ற ஒரு துரிதத் தயாரிப்பையும் ஆரம்பித்திருக்கிருர். முற்றிலும் வனாந்திர சூழ்நிலையைக் கொண்ட இந்தப் படத்தின் கதையை கே. அருணசலம் (அருண்) எழுதி யிருக்கிருர்.

பூமாலை

கண்ணதாசன் மூன்றே மாதங்களில் "பூமாலை" என்ற படத்தைத தயாரித்து முடிக்கத் திட்டமிட்டிருக்கிருர். இந்தப் படத்தில் சங்கீதத்திற்கே பிரதான்யம் அளிக்கப் போகிருர். இதன் கதை-வசனம்-பாடல் மூன்றையும் கண்ணதாசனே எழுதுகிருர். சங்கர் (டைரெக்ஷன்) தம்பு (ஒளிப்பதிவாளர்) விசுவநாதன் - ராமமூர்த்தி (சங்கீத டைரெக்ஷன்) இந்த கோஷ்டியினர் "பூமாலை" க்கு வேலை செய்வார்கள். இப் படத்தின் மூலம் பல புது முகங்களை அறிமுகம் செய்யப்போகிருர் தயாரிப்பாளர் கண்ணதாசன்.

தளபதியின் தாய்

பி ஏ. குமார் புரொடக்ஷன்ஸின் "தளபதியின் தாய்" படப் பிடிப்பு பரணி ஸ்டுடியோவில் ஆரம்பமாகி விட்டது. கே. சங்கர் டைரெக்ஷனில் உருவாகும் இந்தப் படத்திற்கு திரைக் கதையை ஜாவர் சீதாராமன் அமைத்து கொடுத்திருக்கிருர். வசனங்களை சக்தி கிருஷ்ணசாமியும், பாட்டுகளை கண்ணதாசனும் எழுதுகின்றனர். எஸ். எஸ். ராஜேந்திரன். வீரப்பா, விஜயகுமாரி. ராகினி, எம்.வி. ராஜம்மா, எஸ்.ஏ நடராஜன் ஆகியோர் படத்தின் பிரதான நடிகர்-நடிகையராவர். சங்கீத டைரெக்ஷனை விசுவநாதன் — ராமமூர்த்தியும், ஒளிப்பதிவைத் தம்புவும் கவனித்து வருகின்றனர்.

அருந்ததி

மோட்சேஸ்வர் சித்ரா என்ற படத் தயாரிப்பு ஸ்தாபனத்தார் தங்களது "அருந்ததி" படத்தின் ஆரம்ப விழாவை நியூடோன் ஸ்டுடியோவில் சென்ற மாதம் 12ம் தேதி கொண்டாடினர்கள். கோடக் கம்பெனி மானேஜர் எஸ். ராமமூர்த்தி காமிராவை ஓட வைத்தார். படத்தின் கதையை தயாரிப்பாளர் ஈஸ்வர் ரெட்டியே எழுதியுள்ளார். வித்வான் வே. லட்சுமணன் வசனம் எழுதியுள்ள இந்தப் படத்தை கே. சோமு டைரெக்ட் செய்து வருகிருர். ஏ. நாகேஸ்வர ராவ், பாலசந்தர், கருணநிதி, அஞ்சலிதேவி, சௌகார் ஜானகி, ஜி. பட்டு அய்யர் ஆகியோர் படத்தின் முக்கிய நடிகர்-நடிகையர்.

இது செய்தி

பார் பார், பட்டிணம் பார்

அம்மாவாசைக் கவுண்டர் முயற்சியில் தோன்றியுள்ளது கவுண்டர் பிலிம்ஸ். இக் கம்பெனியார் "பார் பார் பட்டிணம் பார்" என்ற விசித்திரப் பெயரில் ஒரு படத்தைத் தயாரிக்க விருக்கிருர்கள். டி. ஆர். மகாலிங்கமும்- மாலினியும் இந்தப் படத்தில் காதல் ஜோடியாக நடிப்பார்கள்.

இந்திப் படமாகிறது

தமிழில் வெளிவந்து வெற்றி கண்ட "தை பிறந்தால் வழி பிறக்கும்" படத்தை ஏவி. எம். புரொடக்ஷன்ஸார் இந்தியில் தயாரித்து வருகிருர்கள். கிருஷ்ணன்-பஞ்சு டைரெக்ஷனில் உருவாகிவரும் இப் படத்தில் ஜக்தீப்,

நந்தா முக்கிய பாத்திரங்களில் நடித்து வருகின்றனர்.

பெற்றால்தான் பிள்ளை

மாடர்ன் தியேட்டர்ஸார் "பெற்றால் தான் பிள்ளை" என்ற பெயரில் ஒரு படத்தை ஆரம்பித்திருக்கிறார்கள். ஏ. சுப்பா ராவ் டைரெக்ட் செய்யும் இப் படத்தில் பாலாஜி, பண்டரிபாய், மைனாவதி, தங்கவேலு, வி. ஆர். ராஜ கோபால், ஸி. பி. கிட்டான், வி. பி. எஸ். மணி ஆகியோர் நடிக்கப் போகின்றனர்.

மாசற்ற மணி விளக்கு

கார்த்திகேயா புரொடக்ஷன்ஸார் சிவாஜி கணேசன் - பத்மினி பிரதம பாகத்தில் நடிக்கும் "மாசற்ற மணி விளக்கு" என்ற படத்தை நியூடோன் ஸ்டூடியோவில் தயாரிக்கத் தொடங்கியுள்ளனர். இந்தப் படத்தை பிரகாஷ் டைரெக்ட் செய்து வருகிறார்.

மூடினார்கள் - திறந்தார்கள்

பாரமௌண்ட் ஸ்டூடியோவின் அதிபருக்கும் தொழிலாளிகளுக்கும் இடையே ஏற்பட்ட தகராறு காரணமாக, உரிமையாளர் ஸ்டூடியோவை மூடிவிட்டார். அந்த ஸ்டூடியோவை இப்போது ஐந்து ஆண்டுகளுக்கு ராஜமாணிக்கம் செட்டியார் குத்தகைக்கு எடுத்துக்கொண்டுள்ளார். மீண்டும் ஸ்டூடியோ திறக்கப்பட்டு, வேலைகள் ஆரம்பமாகி நடந்து வருகின்றன.

வி. சாந்தாராமின் ''நரங்''கில் சந்தியா இப்படிக் காட்சி அளிக்கிறார்.

கிருஷ்ணன்—மதுரம்

குற்றாலம் பிக்சர்ஸார் "கிருஷ்ணன் மதுரம்" என்ற தலைப்புடன் ஒரு படத்தைத் தயாரிக்கத் திட்டமிட்டு அதற்கான ஆக்க வேலைகளில் ஈடுபட்டுள்ளனர். இப் படத்தில் குலதெய்வம் ராஜகோபால் கதாநாயகனாகவும், அவரது தாயாக என். எஸ். கே. மதுரமும் நடிக்கின்றனர். என். எஸ். கே. நாடக சபாவின் பிரதான நடிகர் ஆர். ஜி. தாமோதரன் இப் படத்தில் ஒரு முக்கிய பாத்திரத்தில் நடிப்பார். சுப்பு ஆறுமுகம் இப் படத்தின் கதை-வசனங்களை எழுதுகிறார். கே. வேம்பு டைரெக்ட் செய்வார்.

நடமாடும் தெய்வம்

புதிதாக ஆரம்பமாகியுள்ள ஜெய லட்சுமி பிக்சர்ஸார் தங்கள் முதல் தயாரிப்பாக "நடமாடும் தெய்வம்" என்ற படத்தைத் தயாரிக்கப் போவதாக அறிவித்துள்ளனர். சிவாஜி கணேசன், தங்கவேலு, அசோகன், நம்பிராஜன், சாவித்திரி, சூர்யகலா, தாம்பரம் லலிதா ஆகியோர் படத்தில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளனர். ரா. வே.

கதை - வசனத்தையும், பாட்டுகளை மருதகாசி, பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் இருவரும் எழுதுகின்றனர். வாஹினியிலும், விஜயாவிலும் தயாராக விருக்கும் இந்தப் படத்தின் டைரெக்ஷன், சங்கீத டைரெக்ஷன் இவைகளை முறையே ஏ. சுப்பாராவும், கே. வி. மகாதேவனும் ஏற்பார்கள்.

லட்சியப் பெண்

ஸ்ரீ சாயி பில்ம்ஸார் தாங்கள் தயாரித்து வரும் படத்திற்கு "லட்சியப் பெண்" எனப் பெயர் கொடுத்திருக்கிறார்கள். பல வெற்றிப் படங்களுக்கு உதவி டைரெக்டராகப் பணிபுரிந்து அனுபவம் பெற்றுள்ள பி. கே. மாணிக்கம் இப் படத்தை டைரெக்ட் செய்து வருகிறார். மா. ரா. வசனம் எழுதியுள்ள இப் படத்தில் பாலாஜி, சகஸ்ரநாமம், சுப்பையா, பண்டரிபாய், மாலினி, கே. ஆர். செல்லம் ஆகியோர் நடித்து வருகின்றனர்.

ஸ்ரீதரின் அடுத்தவை

கதை - வசனகர்த்தா - டைரெக்டர் ஸ்ரீதர் "கல்யாண பரிசை"த் தொடர்ந்து மேலும் இரு படங்களை டைரெக்ட் செய்யவிருக்கிறார். வீனஸ் பிக்சர்ஸின் அடுத்த தயாரிப்பான "தேன் நிலவு" கதை-வசனத்தை எழுதுவதுடன், டைரெக்ஷன் பொறுப்பை அவரே கவனிப்பார்.

சம்பூர்ண பில்ம்ஸாருக்காக ஒரு படத்தை டைரெக்ட் செய்யவும் அவர் ஏற்றுக் கொண்டிருக்கிறார். இதன் திரைக்கதை வசனமும் அவருடையது தான். மேற்கண்ட இரு படங்களிலும் சரோஜாதேவியும், ஜெமினி கணேசனும் தான் காதல் ஜோடியாக நடிக்க ஒப்பந்தமாகியுள்ளனர்.

வைஜயந்தி பயணமானர்

கடந்த மாதம் 18ம் தேதி, பிரபல நடிகை வைஜயந்திமாலா பதினெட்டு பேர் கொண்ட தம் குழுவுடன் விமானம் மூலம் சென்னையை விட்டுப் புறப்பட்டார். இம் மாதம் 26ம் தேதி, பாரீஸ் நகரில் நடந்த கலைவிழாவில் கலந்து கொள்ளவென இந்திய சர்க்கார் அனுப்பியது. அப்படியே இவர் ஆறு வாரங்கள் ஐரோப்பாவில் சுற்றுப் பிரயாணம் செய்கிறார். அங்கு முக்கியமான நகரங்களிலெல்லாம் அவரது நடனக் கச்சேரிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. லண்டனில் ராணி எலிஸபெத் முன்னிலையில் அவர் ஆடப் போவது குறிப்பிடத் தக்கது.

காதல் கல்யாணம்

ரங்கன் பில்ம்ஸார் இதுவரை பெயரிடாது தயாரித்து வந்த படத்திற்கு "காதல் கல்யாணம்" எனப் பெயர் கொடுத்திருக்கிறார்கள். ராமண்ணா டைரெக்ஷனில் உருவாகிவரும் இப் படத்தின் உரிமைகளை மதுரை, செட்டியார் பில்ம்ஸார் பெற்றுள்ளனர்.

தமிழில் "லாஜ்வந்தி"

இந்தியில் வெளிவந்த வெற்றிப்படமான "லாஜ்வந்தி"யைத் தமிழில் தயாரிக்கும் உரிமைகளைப் பெற்று, தயாரிப்பு வேலையிலும் முனைந்து விட்டனர் அசோஸியேடட் புரொடியூஸர்ஸார். இப் படத்தை டைரக்ட் செய்ய யோகானந்தாவையும், பாலய்யா, நாகேசுவரராவ், அஞ்சலி மூவரையும் நடிக்கவும் ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

கோவிந்த கோபால்

மயில், மார்வாரி, வேடன் நடனங்களை ஆடுவதில் தனித் திறமை பெற்ற இவர், வைஜயந்தி மாலா குழுவில் பேருடு சென்றுள்ளார். அங்கு "சகுந்தலை"யில் இந்த நடனங்களுடன் துஷ்யந்தனகவும் அவர் பங்கு கொள்கிறார்.



பி. ஆர். பந்துலு தயாரித்த "ஸ்கூல் மாஸ்டர்" கன்னடப் படத்தின் சிறந்த நடிகை சௌகார் ஜானகி ஜனாதிபதியிடம் பாராட்டுப் பத்திரம் பெறுகிறார்.

ராஜேந்திர சோழன்

நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரன் "ராஜேந்திர சோழன்" என்ற படத்தைத் தயாரிக்க திட்டமிட்டிருக்கிறார். இந்த சரித்திரக் கதையின் திரைக் கதை வசனத்தை கண்ணதாசன் எழுதுவார். படமாக்கும் முன் இதை முதலில் நாடகமாக நடிப்பதென்பதும் அவர் திட்டம்.

நடனம் ஆடினர்

ஆரூர் கலாமன்றத்தின் சார்பில் சென்றமாதம் 3-ம் தேதி குமாரி ராஜ ராஜேஸ்வரி, குமாரி டி. வசந்தா இவ்விருவரின் நடனக் கச்சேரியும் நடைபெற்றது அன்று இரவு, வைஜயந்தி மாலா கோஷ்டியுடன் மேனாடு செல்லும் ராஜராஜேஸ்வரிக்கு ஏ. என். ஆர். ராமசாமி ஒரு விருந்து அளித்தார்.

சென்னை செயின்ட் மேரீஸ் மண்டபத்தில் குமாரி சந்திரபிரபாவின் பரத நாட்டிய அரங்கேற்றம் சிறப்பாக நடைபெற்றது. நல்ல தாள ஞானத்துடன், சிருங்காரம் நிரம்பி, மேடைத் தெளிவுடன் ஆடினார். "யார் ஆடினார்" பதத்தில் முக பாவ அபிநயங்களை சபையினர் வெகுவாக ரஸித்துப் பாராட்டினர். அன்றைய அரங்கேற்ற விழாவிற்கு புரொபஸர் ஸ்ரீ ரத்னசாமி தலைமை வகித்தார். கத்தோலிக மதப் பெண் பரத நாட்டியம் ஆடுவதைக் கண்டு பெருமைப் படுவதாகவும், கத்தோலிக பட்சாலைகளில் நாட்டியம் பயிற்சி செய்விப்பது நல்லது என்று கூறி குமாரி சந்திரபிரபாவைப் பாராட்டி ஆசீர்வதித்தார். இவருடைய குரு மயிலை ஸ்ரீ ராமச்சந்திரன் ஆவார். குமாரி கஜலட்சுமியின் இனிமையான பின்பாட்டு சபையினரால் வெகுவாகப் பாராட்டப்பட்டது.

இரண்டாந் தாரம்

மகேந்திரா புரொடக்ஷன்ஸார் "இரண்டாந்தாரம்" என்ற படத்தைத் தயாரிக்கும் பூர்வாங்க வேலைகளில் முனைந்திருக்கின்றனர். என் ஜி. அம்மையப்பன் கதை வசனம எழுதும் இந்தப்

போனிக்ஸ் - ஜனதா விசிறிகள்



EWI LTD.

THE ENGINEERING WORKS OF INDIA PRIVATE LTD.

20, ULTADANGA ROAD, CALCUTTA-4

சென்னை, ஆந்திர ராஜ்யங்களுக்குப் பிரதான ஏஜெண்டுகள் :—

கில்லண்டர்ஸ் அர்பத்நாட் & கோ. லிட்.,

3, நார்த் பீச் ரோடு, சென்னை-1

கேரள, மைசூர் ராஜ்யங்களுக்குப் பிரதான ஏஜெண்டுகள் :—

சௌத் இந்தியா கார்ப்பரேஷன் (பிரைவேட்) லிட்.,

எர்ணுகுளம் — திருவனந்தபுரம் — பெங்களூர்.

CHARI.

படத்தில் சிவாஜி கணேசன், பண்டரி பாய், எம். எஸ். சரோஜா ஆகியோர் நடிப்பார்கள்.

புரட்சியான முயற்சி

அரசு பிக்சர்ஸார் அடுத்து சி. என். அண்ணாத்துரையின் கதை ஒன்றைப் படமாக்கப் போகிறார்கள். படத்தின் வசனத்தையும் அவரே எழுதுகிறார். இதுவரை திரைக்கு வந்துள்ள அண்ணாத்துரையின் கதைகளை யெல்லாம்விட இது தனியானதொரு பாணியில் அமைந்திருப்பதுடன், புதுத் திருப்பம் கொண்டதாகவும் இருக்கும். இப் படத்தின் தொடக்க விழா இம் மாதம் 5ந் தேதி சிறப்பாக நடந்தது. இப் படத்தில் எம ஜி ராமச்சந்திரன், எம். என். ராஜம், பி. எஸ் வீரப்பா, கே. ஆர். ராமசாமி, வி ஆர். ராஜகோபால் ஆகியோர் பிரதமபாகங்களில் நடிக்க விருக்கின்றனர். எம். ஜி. ராமச்சந்திரன் இப்படத்தின் வளர்ச்சியில் தமது முழு ஒத்துழைப்பையும் அளிக்க ஒப்புக் கொண்டிருக்கிறார். இந்தப் படத்தை ப. நீலகண்டன் டைரெக்ட் செய்வார்.

தம்பி வருகிறான்

மாடர்ன் தியேட்டர்ஸாரின் எண்பத்தி நான்காவது தயாரிப்பாகும் அவர்களது "தலை கொடுத்தான் தம்பி". இப்படம் இம் மாதம் 12ம் தேதி அன்று திரையிடப்படுகிறது. எஸ். எஸ். ராஜேந்திரன், கே. ஆர். ராமசாமி, வி. ஆர். ராஜகோபால், மாலினி, முத்துலட்சுமி ஆகியோர் நடித்துள்ள இந்தப் படத்தை டி. ஆர். சுந்தரம் டைரெக்ட் செய்துள்ளார்.

தமிழிலும் "ஜ்வாலா"

டைரெக்டர் எம். வி. ராமன் பிரம்மாண்டமான முறையில் தயாரித்து வரும் "ஜ்வாலா" இந்திப் படத்தை தமிழிலும் தயாரிப்பதென முடிவு செய்திருக்கிறார். இப் படத்தில் நடிக்க வென பிரபல நடிகர் - நடிகைகளை ஒப்பந்தம் செய்ய அவர் முயற்சி செய்துவருகிறார்.

முகல்-ஈ-ஆஸாம்

பம்பாய் படாதிபதி அஸீப் பத்து ஆண்டுகளாகத் தயாரித்து வந்த "முகல் - ஈ - ஆஸாம்" அடுத்து வரும் ஆகஸ்ட் மாதம் 15ம் தேதி திரையிடப்படும். பல லட்சக் கணக்கான ரூபாய்கள் செலவிட்டு, ஈஸ்ட்மென் கலரில் இப்படம் தயாரிக்கப் பட்டுள்ளது. இப்படத்தைத் தமிழாக்கும் வேலை சீக்கிரமே சென்னையில் தொடங்க விருக்கிறது. படத்தின் உதவி டைரெக்டர் எஸ். எஸ். வாசன் சென்னையில் வந்து தங்கி தமிழாக்கும் பூர்வாங்க வேலைகளில் முனைந்திருக்கிறார். பதினெட்டாயிரம் அடிகள் கொண்ட இப் படத்தில் திலீப்குமார், மதுபாலா, துர்க்கா கோட்டே, ஜானிவாக்கர் ஆகியோர் நடித்துள்ளனர். இப்படம் இந்தியிலும், ஆங்கிலத்திலும் தமிழிலும் வெளியிடப் பட விருக்கிறது.



சிறந்த படம் என அத்தாட்சிப் பத்திரம் பெற்ற "அன்னையின் ஆணை" தயாரிப்பாளர் இஸ்மயில், டில்லி சென்று ஜனாதிபதியிடம் அதை நேரில் பெற்றார்.





பிரேம் நசீருடன் ஒரு நாள்...

...சகோதரர் பிரேம் நவாஸுடன்...



..தினசரியில் ஆழ்ந்திருக்கிறா...

“தை பிறந்தால் வழி பிறக்கும்” படத்தின் மூலம், திரைப்பட உலகில் அடி எடுத்து வைத்து, முதற் படத்திலேயே கதாநாயகன் பதவியைப் பிடித்து, நட்சத்திர உலகில் தற்பொழுது மளமளவென்று முன்னேறி வந்து கொண்டிருக்கும், பிரேம் நசீரைத்தான் இந்தப் பகுதியில் இம்மாதம் ‘குண்டூசி’ நேயர்களுக்கு அறிமுகப்படுத்தப் போகிறேன். அன்று காலை 6–12 க்கு சென்னை, தென்கோடியிலுள்ள அடையார் கஸ்தூரிபாய் நகரிலுள்ள அவருடைய வீட்டை நோக்கிப் புறப்பட்டேன்.



அவருக்கு ‘தட்டெழுத்தும்’ தெரியுமே...

அப்பொழுது தான் எழுந்திருந்து கட்டிலில் உட்கார்ந்தபடியே தன் சகோதரர் பிரேம் நவாஸுடன் “ வற்றிலைப் பெட்டி” மாடல் ரேடியோவை வைத்துக் கேட்

..டெலிஃபோனில் பேசியே



டுக் கொண்டிருந்தார். "வணக்கம், வாருங்கள் வாருங்கள்" என்று இருவருமாக வரவேற்றார்கள். அப்பொழுது வந்த அன்றைய ஹிந்து பத்திரிகையை மேலாகப் புரட்டிக் கொண்டே, "காலை வேளையில் தான் ஒரு மணி சவகாசம் எனக்குக் கொஞ்சம் அவகாசம் கிடைக்கும். இரண்

...மனைவி, மக்களுடன் சந்தோஷமாக



.......காரின் சாரதி காசீம கதவைத் திறந்து கொண்டு தயாராக நிற்க...

...மேக்கப்மேன் சங்கரிடம்...

டொரு கடிதங்கள் டைப் செய்து போட்டு விட்டுக் கிளம்பி விடலாம்" என்றார். அது சமயம் போன் மணி ஓசை கேட்டது. "இன்று சற்று தாமதமாக 8 மணிக்குள் ஸ்டுடியோவில் இருந்தால் போதும்" என்றார்.

சிறிது நேரம்தபால் முதலிய பைல்களைப் பார்த்து பதில் எழுத வேண்டியவைகளுக்கு பதில் எழுதி "கூடைக்குள் சேர்க்க வேண்டியவைகளையும் அப்புறப் படுததிவிட்டு, காலை



..."சகோதரி"யில் தம்பதிகளுள் பிணக்கு...

...பீம்ஸிங், சரவணன். தேவிகா, சந்திரபாபு மத்தியில்...



ஆகாரத்திற்கு உட்கார்ந்தார். அவ்வளவுதான், அவருடைய அருமைச் செல்வங்கள் நால்வரும் அவருடன் சேர்ந்து கொண்டார்கள்.

அவர்களுடைய பெயர்களைக் கேளுங்கள். பெரியவள் பெயர் லைலா, அடுத்தவள் பெயர் ரஸியா, பையன் ஷாநவாஸ்; கடக்குட்டிப் பெண் ரீட்டா, இவள் படுசுட்டிக் குழந்தை. அவருடைய அன்பு மனைவி ஆகாரவகைகளைப் பறிமாற சாப்பிடும் பொழுது குழந்தைகள் விளையாட்டு ஒரே அமக்களம்தான். இந்த இடத்தில் உள்ள இன்பம்

...சாப்பிடக் கூட விடாமல்...



...வடபழனி அச்சக செயலாளர் ஏ. வீரப்பன, குமரன, சரவணன ஆகியோருடன பிரேம் நஸீர்...

வேறு எங்கும் காண முடிவதில்லை ஸார். இவர்களுடன் சேர்ந்து கொள்ளும் போது எல்லாக் கவலையும் மறந்துவிடுவேன்" என்றார். "தேடிவந்த செல்வங்கள்"

...வடபழனி அச்சக போர்மன் ரங்கநாதன், சிட்டிபாபு, ராமகிருஷ்ணன், மத்தியில்...

எம். சரவணன், எம். குமரன், ஆகியோருடன படம் பார்க்கிறார்...



ஆயிற்றே" என்றேன் சிரித்துக் கொண்டே. தெருவில் தயாராக நிறுத்தப்பட்டிருந்த காரின் கதவை திறந்து அடக்கத்துடன் நின்று கொண்டிருந்தார் டிரைவர் காசீம்.

உங்கள் "பிளைமூத்?" என்று கேட்டேன். 'டி. வி. எஸ்ஸில் கொஞ்சம் வேலை பார்க்க விட்டிருக்கிறேன். இது ஜி. கே. புரொடக்ஷன்ஸாரின் வண்டி' என்றார். வண்டி வேகமாக கோடம்பாக்கம் ஏ. வி. எம். ஸ்டுடியோவிற்குள் நுழைந்தது. "இன்று மாலை ஆறுமணிவரை இங்குதான். உங்களுக்கு ஒரே போராக இருக்கும்" என்றார்.

"ஒண்ணறை வருஷ காலமாய் இது எனக்கு ரொம்ப ரொம்பப் பழக்கமாகிவிட்டது" என்றேன்.

நட்சத்திரங்களின் அன்றாட வாழ்க்கை ஆரம்பமாகும் மேக்கப் ரூமிற்குள் நுழைந்தார். மேக்கப்மேன் சங்கர் கச்சிதமாய் அவர் வேலையை முடித்து அனுப்பினார். அரைக்கை சட்டை, முழுக்கால் நிஜார் இவ்வளவுதான் அன்றைய படப்பிடிப்பில் அவருடைய ஆடைகள். ரொம்பவும் இயற்கையாய் இருந்தது.

ஸெட்டிற்குள். ஜி. கே. புரொடக்ஷன்ஸார் தயாரித்துவரும், சகோதரி தமிழ்ப் படம். அதில், தேவிகாவின் பாகம் உருவாகிக் கொண்டிருந்தது. டைரெக்டர் பீம்ஸிங் தேவிகாவிற்குச் சம்பந்தப்பட்ட பாகத்தை சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார்.

பிரேம் நஸீர் உள்ளே நுழைந்தவுடன் "இவர்தான் உங்கள் மனைவி பங்கஜம்." என்று தேவிகாவை பிரேம் நஸீருக்கு அறிமுகப்படுத்தி

வைத்தார். படத்தில் நன்கு படித்த நாகரீக மனைவியாய் வருகிறார் தேவிகா. இருவருக்கும் குடும்பச் சண்டை ஏற்படுகிறது. பெண்களுக்கே தனி சொத்தான அசூயை அவர் திரைமனைவி பங்கஜத்திற்கு ஏற்படுகிறது. "கட்டின மனைவியுடன் ஒருவார்த்தை கலகலப்பாகப் பேசாமல் ஊரான் மனைவியை இழுத்துக்கொண்டு தெருத் தெருவாக சுத்தறதுதான்..." இம்மாதிரி தம்பதிகளுக்குள் சந்தேகத்தின் பேரில் ஏற்பட்ட சண்டை வலுத்து வருகிறது.

இது சமயம் ஸெட்டிற்குள் சந்திரபாபு நுழைகிறார். டைரக்டர் பீம்ஸிங்கை சேர்த்துக் கட்டிக் கொள்கிறார். பாபுவுடன் சற்று நேரம் தமாஷாகப் பேசிக் கொண்டிருந்தார்.

முற்பகல் நேர படப்பிடிப்பும் முடிந்தது. ஸ்டுடியோவிலேயே ஒரு அறையில் சாப்பிட உட்கார்ந்தார்.

அது சமயம், அரவிந்தா புரொடக்ஷன்ஸார் தயாரித்துவரும், 'அருமை மகள் அபிராமி' படத்திற்கு மறுதினம் கால்ஷீட் கேட்பதற்கு புரொடக்ஷன் மானேஜர் எஸ். எம். ரெட்டி வந்து பிரேமை சாப்பிடக் கூட விடாமல் பிடித்துக் கொண்டார். 'கொஞ்சம் விடுங்கள்' சாப்பாடு முடியட்டும், என்றேன். "உங்களுக்கு தெரியாது சார். இந்த சமயத்தில் தான் இவரிடம் காரியம் வெற்றியாக முடியும்" என்றார் அவர்.

எப்படியோ சத்தியாக்ரகம் செய்து மறுநாள் காலை 7 மணிக்கு வருவதாக பிரேமிடம் வாக்குறுதி வாங்கிக் கொண்டு புறப்பட்டார். மிஸ்டர் ரெட்டியார்.

'பிற்பகல படப்பிடிப்பில் மூன்று மணிக்குத்தான் என்னுடைய பாகம் வருகிறது. பாலாஜி, தாம்பரம் லலிதா, நாகையா இவர்களுடையது தான் முதலில் நடக்கும். அதற்குள் சமீபத்தில் படமாக்கப்பட்டவைகளைப் போட்டுப்பார்க்கலாம் என்று மிஸ்டர், சரவணன் சொல்லியனுப்பியிருக்கிறார், போகலாம்' என்றார்.

இருவருமாய் ஏ. வி. எம். ஸ்டூடியோவிலேயே உள்ள குளுகுளு தியேட்டர் பக்கம் போகும்பொழுது அச்சாபீஸிலிருந்து ஒரு பையன் என்னைத் தேடிக்கொண்டு வந்து, "ஸெக்ரடரி சார் உங்களைக் கூப்பிடுகிறார்கள்" என்றார். பிரேமுக்கு விளங்கவில்லை.

ஏ. வி. எம் ஸ்டுடியோவிற்குள்ளாகவே 'முன்பக்கத்தில் பெரிய சினிமாக்கொட்டகை மாதிரி உள்ள இடத்தில்தான் ஏ. வி. எம். ஸ்தாபனத்தைச் சேர்ந்த "வடபழனி

...ஏவி. எம். ஸ்டுடியோ அதிபர் ஏவி. மெய்யப்பன், பொது நிர்வாகி எம். முருகன் இருவருடனும் மனம் விட்டுப் பேசி......





...பி. வி. என். புரொடக்ஷன்ஸ் அதிபர் வள்ளி நாயகத்தின் கன்னத்தை பாலாஜி தொட்டுப் பார்ப்பதைக் கண்டு...

அச்சகம்" உள்ளது. அதில் தான் "குண்டூசி" பத்திரிகை உருவாகிறது" என்றேன்.

"முதலில் அங்கு போய்வரலாம். நான் அச்சாபீஸைப் பார்த்ததே இல்லை" என்றார். அங்கிருந்து அச்சகம் பக்கம் புறப்பட்டோம். அங்கு ஏ. வி. எம். அவர்களின் மருமகப் பிள்ளையான திரு. வீரப்பன் அவர்கள் பிரேமை அழைத்துப்போய் அச்சியந்திரங்களை-



..."சகோதரி"யில் அனைவரும் கூடும் காட்சி...



யும் அச்சாகும் முறைகளையும் விளக்கிக் காண்பித்தார். 'குண்டூசி' இந்த இதழிற்காக அச்சாகிக் கொண்டிருந்த சில பாரங்களையும் வர்ணப்படங்களையும்

....பாலாஜிக்கு அன்பு கரை மீறி விட்டது...

ஏவி. எம். அளித்த விருந்தில் வி. கே. ராமசாமி, சிவாஜி, பீம்சிங் ஆகியோர்

பின்னணி மணிகள் கோவிந்தராஜன், சௌந்தரராஜன், ஜாவர், குலதெய்வம் ராஜகோபால் மத்தியில்...

பார்த்து பிரமித்துக் கொண்டிருந்தார்.

எழுத்துக்களைக் கோர்க்கும் விதம் எப்படி என்பதை போர்மேன் ரங்கநாதம், சிட்டிபாபு ஆகியோர் விளக்கமாய் அடுக்கிக் காண்பித்தார்கள். "அச்சகத்தொழில் ஒரு பெரிய கலை



...தாம்பரம் லலிதா, தேவிகாவுடன்...



ஒளிப்பதிவாளர் முத்துசாமி, அநந்தகி முகர்ஜி, ராஜேஸ்வரி மெய்யப்பன், ராஜசுலோசனா அவர்கள் மத்தியில்

சார். ஒரு பத்திரிகை தயாராகி மக்கள் பார்த்து ரசிப்பது என்பது ஒரு படம் எடுத்து முடிக்கிற அவ்வளவு கஷ்டங்கள் இருககிறது" என்றார்.

அங்கிருந்து தியேட்டருக்குள் வந்து சேர்ந்தோம். அங்கு ஏ. வி.

... விருந்தினர்களில் ஒருவராக ...

எம். அவர்களின் குமாரர்கள் குமரன் சரவணன் இருவரும் எங்களை வரவேற்றனர். எல்லோருமாய் சுமார் அரைமணி நேரம் "சகோதரி"யில் பிரேம் சம்பந்தப்பட்ட சில காட்சிகளைப் பார்த்து விட்டு, அப்படியே ஏ வி எம். அவர்கள் ரூமிற்குள் நுழைந்தோம். அங்கே ஸ்ரீ செட்டியார் அவர்களும் அவருடைய மூத்த குமாரர் ஸ்ரீ முருகன் அவர்களும் பேசிக் கொண்டிருந்தார்கள். செட்டியார் அவர்களுடன் சிறிது நேரம் சம்பாஷித்துக் கொண்டிருந்துவிட்டு, நேராக ஸெட்டிற்குள் நுழைந்தோம். அங்கு பி. வி. என். புரொடக்ஷன்ஸ் அதிபர் வள்ளிநாயகம், சரவணன், பாலாஜி இவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள், பிரேமும், அவர்களுடன் கலந்து கொண்டார். பீம்சிங் அவர்களைத் தேடிக்கொண்டு ஸெட்டிற்குள் வந்த சஹஸ்ரநாமம் அவர்களுடன் கொஞ்சநேரம் பேசி முடித்துவிட்டு மறுபடியும் படப்



... கமலா லட்சுமணன் சகோதரியருடன் ...

பிடிப்பில் நடிக்கப் புறப்பட்டார்.

சரியாக ஆறுமணிக்கு படப்பிடிப்பு முடிந்தது. ஜி. கே. புரொடக்ஷன்ஸ் அதிபர் பஸ்வராஜ் அவர்களுடன் வெளியில் வந்தோம். ஸெட்டின் வெளிப்புறத்தில் நாற்காலிகளும், மேஜைகளும், நூற்றுக் கணக்கில் வந்து போடப்பட்டுக் கொண்டிருந்தன. "இது எந்தப் படத்திற்கான ஏற்பாடு?" என்றேன் பிரேமிடம்.

"மறந்து விட்டீர்களா? இன்று இரவு டின்னரை" என்றார்.

"எதை நான் அதிகமாய் ஞாபகம் வைத்துக் கொள்வேனே அந்த ஒரு விஷயத்தை இன்று அடியோடு மறந்துவிட்டேன். சரி சரி, கிளம்புங்கள். வீட்டிற்குப் போய் திரும்பி வர நாழியாகிவிடும். சாப்பாட்டு விஷயம், பந்திக்கு முந்திக் கொள்ளவேண்டும்."

வீட்டிற்குப்போய் குளித்து உடை மாற்றிக்கொண்டு திரும்பி ஸ்டுடியோவிற்கு வந்தோம். ஏ. வி. எம். அவர்களால் அவருடைய ஸ்தாபனங்களை சேர்ந்த அவ்வளவு பேர்களுக்கும் நண்பர்களுக்குமாக ஏற்பாடு செய்யப்பட்ட விருந்துதான் அது. சுமார் ஆயிரம் பேர்களுக்கு மேல்

இருக்கும். பிரமாதமான சாப்பாடு. அன்றய சாப்பாட்டில் உள்ள அயிட்டங்களில் எல்லோரையும் அதிகம் கவர்ந்து ருசித்து சாப்பிடக் கூடியதாயிருந்தது பீதர் மாம்பழம்தான். சிவாஜியும், பிரேமும் அதைக் கடித்துச் சுவைத்துச்சாப்பிட்ட பாணியே அலாதியாக இருந்தது. நானும் சாப்பாடு என்ருல்... என்னைக் கேட்க வேண்டுமா? விருந்து முடிந்து எல்லோரும் அவரவர்கள் கூடிக் கூடி அளவளாவிக் கொண்டிருந்தனர். எங்கள் போட்டோ கிராபர் சிவராமுக்கு கேட்க வேண்டுமா? அவ்வளவுதான் ஒரு நாற் காலியைக்கையில் தூக்கிக்கொண்டு காமிரா சகிதம் கிளம்பி விட்டார். சிவாஜி வி. கே. ஆர். பின்னணி மன்னர்கள், சீர்காழி கோவிந்த ராஜன் டி. எம். சௌந்தரராஜன் ஜாவர், குலதெய்வம் ராஜகோபால், பாலாஜி, தேவிகா, தாம்பரம் லலிதா ராஜசுலோசன, பிரபல நடிகை அருந்ததி முகர்ஜி, எம். என். ராஜம் பின்னணிக் குயில்கள் சூலமங்கலம் சகோதரிகள், நாட்டிய ராணிகள் கமலா, ராதா, சாரங்கபாணி இம் மாதிரி அன்று ஒரே நட்சத்திர வெளிச்சம்தான். இவர்களுடனெல்லாம், தனித் தனியாகவும், கும்பல் கும்பலாகவும் ஹாஸ்யமாய்ப் பேசிக் கொண்டிருந்து விட்டுக் கிளம்ப வண்டியில் ஏறிப் புறப்பட்டோம்.

புறப்பட்ட பத்து கஜம் தாண்டுவதற்குள் வண்டி நிறுத்தப் பட்டு, ஆளுக்கொரு தேங்காய் வெற்றிலை அடங்கிய பையை, ஸ்ரீ செட்டியார் அவர்களே ஒவ்வொருவராகக் கொடுத்து, அவருக்கே சொந்தமான தனிப் புன்னகையுடன் கை கூப்பி வழி அனுப்பி வைத்தார்கள்.

வழியில் காரில் வந்து கொண்டிருக்கும்போது "இன்று என்னுடன் ஒருநாள் எப்படி" என்ருர். "மாம் பழம் பகுருசி, பால்பாயாசம் வெகுப் பிரமாதம்" என்று அடுக்கிக் கொண்டே இருந்தேன். "சார் உங்கள் வீடு இறங்குங்கள்" என்ருர் டிரைவர்.

"மணி பதினென்று ஆகப்போகிறது. காலையில் 5 மணிக்கு ஆரம்பமானது. ரொம்பவும் சிரமமாயிருக்கும். இரண்டு மாதத்தில் உங்கள் பக்கத்திலேயே வந்து விடப்போகிறேன்" என்ருர்.

விஷயம் புரிந்து விட்டது. "கிரஹப் பிரவேசம் எந்த மாதம்? நிச்சயமாக ஒரு ஒண்ணுங்கிளாஸ் டின்னர் இருக்கிறது" என்றேன். பிரேம் சிரித்துக் கொண்டே வீட்டிற்குக் கிளம்பினர்.

..."ஆகாஷ் பாதாள்" சம்பந்தப்பட்டவர்களுடன்...

...சூலமங்கலம் சகோதரியர் எம். என். ராஜம் இவர்களுடன் அளவளாவி...

வாழ்த்துகிறோம்

பிரபல ஹோமியோபதி டாக்டர் வி. ஆர். மூர்த்தி, தமது புத்திரி சௌ. சாருபாலாவின் திருமணத்தை வெகு சிறப்பாக நடத்தினர். மணமகன் சிரஞ்சீவி சுப்பராயன், பிரபல டாக்டர் வி. சங்கரனின் புத்திரர். காலையில் திருமணத்திற்கும் மாலையில் வரவேற்புக்கும் பல்வேறு துறையிலுள்ள பிரமுகர்களும் வந்திருந்தார்கள்.

ஒளி ஏற்பாடுகளைச் செய்வதில் முன்னணியில் நிற்கும் சந்திரா எலக்ட்ரிக் ஒர்க்ஸ் முதலாளி டி. என். குப்புசாமி தமது புத்திரன் திரு. ருக்மாங்கதனின் திருமணத்தை சிறப்பாக நடத்தினர். மணமகள், திருமதி சண்பகவல்லி.



சௌ. சுந்தராம்பாள்
சிரஞ்சீவி ராமநாதன் எம். ஏ.

ஏ. எல். எஸ். புரொடக்ஷன்ஸைச் சேர்ந்த சிரஞ்சீவி பி. எஸ். ஜயராமன் காலஞ்சென்ற பிரபல ஆர்யகான கே. எஸ். அனந்தநாராயணய்யர் புத்திரி சௌ. பத்மாவைத் தம் வாழ்க்கைத் துணைவியாக அடைந்தார்.

மு கருணாநிதி அச்சக உரிமையாளர் கருணை. எம். ஜமால் தம் செல்வி திருமதி ரமீஸா பேகத்தை, செல்வன் மகம்மது ஜஹ்பருக்குத் திருமணம் செய்து கொடுத்தார்.

பிரபல ஆர். எஸ். பதி கம்பெனியின் பாகஸ்தர் சிரஞ்சீவி ஆர் எஸ். சந்தானகிருஷ்ணன். தென் பிராந்திய ரயில்வேயில் பணிபுரியும் ஆர். கணேச முதலியார் புத்திரி சௌ. நர்மதா தேவியைத் தம் வாழ்க்கைத் துணைவியாக அடைந்தார்.

பிரபல அம்பீஸ் கபே உரிமையாளர் கே. ஏ. சுப்பிரமணியம், தமது சகோதரி சௌ. சுந்தராம்பாளை, பாண்டிச்சேரி உதவி லேபர் ஆபீஸர் சிரஞ்சீவி பி. ஆர் ராமநாதன் எம். ஏ. க்குத் திருமணம் செய்து கொடுத்தார்.

பெஹ்ரினில், கால்டெக்ஸ் கம்பெனியில் பணிபுரியும் சிரஞ்சீவி ஸ்தாணுநாதன், சௌ. கமலாவைத் தம் வாழ்க்கைத் துணைவியாக அடைந்தார்.

பிரபல மெகானிக் எல். மணியின், சகோதரர் சிரஞ்சீவி எல். ஜகதீசன், சௌ. கஜலட்சுமியை, பங்களூரில் தனது வாழ்க்கைத் துணைவியாக அடைந்தார்.

சென்ட்ரல் பப்ளிஸிடீஸில் பணிபுரியும் சிரஞ்சீவி கே. எஸ். கே. மூர்த்தி கே. ராஜாமணி அய்யர் புத்திரி சௌ. ராதாவைத் திருமணம் செய்து கொண்டார்.

எல். நடேசன், தமது புத்திரி சௌ. லட்சுமியை, நேமத்தான் பட்டி இ. கே. எஸ்எம். வீரப்ப செட்டியார் புத்திரர் சிரஞ்சீவி சோமசுந்திரத்திற்குத் திருமணம் செய்து கொடுத்தார்.

நடிகர் எஸ். வி. சகஸ்ரநாமம், தம் தமையனார் எஸ். வி. கணபதி அய்யரின் ஷஷ்டியப்த பூர்த்தி விழாவையும், தமது குமாரன் சிரஞ்சீவி சிவகுமாரின் உபநயன முகூர்த்தத்தையும் சிறப்பாக நடத்தினர்.

திருச்சி நகர மன்ற உறுப்பினரும் உஷா வைரங்கள் உரிமையாளருமான பாண்டுரங்கன் தமது இளவல் பா இராசரத்தினத்தின் திருமணத்தை சிறப்பாக நடத்தினர். மணமகள் திருமதி இராஜேஸ்வரி.

நமது அச்சகத்தைச் சேர்ந்த சிரஞ்சீவி என் கோதண்டராமன், திருமதி சரோஜினியைத் திருமணம் செய்துகொண்டார்.

நியூ எஞ்சல்
புரொடக்ஷன்ஸ் அளிக்கும்
பண்ணையார் மகன்
தயாரிப்பு
எஸ்.ராகவன்
டைரக்ஷன்
ஜம்பணு



நியூ ஏஞ்சல் புரொடக்ஷன்ஸ் அளிக்கும் இப் படத்தில் டி. ஆர் மகாலிங்கம், டி. கே. ராமச்சந்திரன், வி. ஆர். ராஜகோபால், வி. எஸ். ராகவன் (புது முகம்) மணிநாதன், ராகினி, சுந்தரிபாய், கே. சந்திரா, பேபி மாலதி, பத்மினி பிரியதர்சினி ஆகியோர் நடித்து வருகின்றனர்.

மஞ்சள் மகிமை

"பொ. நடராசன்"

"வடிவு கண்டு கொண்ட பெண்ணை மற்றொருவன் நத்தினால் விடுவனோ அவனை முன்னம் வெட்ட வேணும் என்பனே
நடுவன் வந்து அழைத்தபோது நாறுமிந்த நல்லுடல்,
சுடலைமட்டும் கொண்டுபோய் தோட்டிகைக் கொடுப்பரே!".

—"சிவவாக்கியர்."

[சுடலை மட்டும் கொண்டுபோய் தோட்டியின் கையில் கொடுக்கும் இந்த உடல்களைப் பற்றியும் அவைகளில் உயிரெனும் சித்பதார்த்தம் உலவும்போது ஏற்படும் உன்மத்த வெறியால் ஏற்படும் விளைகளையும் பற்றியே எழுதும் பல பத்திரிகைகள் தமிழகத்தில் இப்பொழுது உலவி வருகின்றன. "காமாலைக் கண்ணனுக்குக் கண்டதெல்லாம் மஞ்சள்" என்றபடி பிறரிடம் உள்ள குறைகளையே காண்பதனால் இத்தகைய தாள்களுக்கு மஞ்சள் பத்திரிகைகள் என்ற பெயர் ஒருவகையில் பொருந்தும். எனினும், இவற்றில் எழுதுபவர்களின் உள்ளங்களை விட இதை விரும்பிப் படிக்கும் வாசகர்களின் உள்ளக் கறுப்பே இவற்றை வளர்க்கும் உரம் என்பது இந்தக் கட்டுரை ஆசிரியரின் அபிப்பிராயம். படித்துப் பாருங்கள் "ஆசிரியர்.]

சில நாட்களுக்கு முன்பு தமிழகத்தின் ஒரு பிரபல தொழிலதிபர் மேலை நாடு சென்று தொழில் நுணுக்கம் பயின்று, தான் உற்பத்தி செய்த சரக்குகளை மேலை நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்து நற்பெயரும் புகழும் சம்பாதித்தவர் மிகவும் பரபரப்பான நிலையில் காணப்பட்டார். "என்ன காரணம்?" என்று விசாரித்த பொழுது தன்னைப்பற்றியும் தன் அந்தரங்க வாழ்க்கையைப் பற்றியும் மிகவும் கேவலமாக ஒரு மஞ்சள் பத்திரிகையிலே எழுதியுள்ளதாகவும், அதனால் தான் வெளியில் தலைகாட்ட முடியவில்லை என்றும் இதற்கு எப்படியும் ஒரு முடிவு கட்டியே தீரவேண்டும்" என்றார்.

"எதற்கு?" என்றேன்.

"எதற்கா? இம்மாதிரி எழுதுவதற்குத்தான்" என்றார். "இங்குதான் நீங்கள் தவறு செய்கிறீர்கள். இப்பொழுது எழுதுபவரை நிறுத்தச் செய்வது மிக எளிது. ஓரளவுக்கு ஆள் பலமும், பணபலமும் இருந்தால் போதும். ஆனால், இத்தகைய விரஸச் செய்திகளை விரும்பிப் படிக்கும் லட்சோபலட்சம் வாசகர்களும், அந்தரங்கத்தில் எள்ளி நகையாடும் நமது நெருங்கிய நண்பர்களும் இருக்கும் வரையில், யாராவது எழுதிக் கொண்டேதான் இருப்பார்கள்.

அச்சடித்த பத்திரிகை இல்லாவிட்டால் கையெழுத்துப் பத்திரிகை; அதுவும் இல்லாவிட்டால் வாய் வதந்திப் பத்திரிகை என்று வந்து கொண்டேதான் இருக்கும். இதற்கு அறுதி காணுதல் எப்படி?

லட்சுமிகாந்தன் இறந்தவுடன் உயிருக்குப் பயந்து இதை நிறுத்துவார்கள் என்று நம்பினோர்கள். விளைவு இன்று பன்மடங்காக அம்மாதிரிப் பத்திரிகைகள் உலவுகின்றன. இன்று சர்க்கார் தலையிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது.

பிறருடைய அந்தரங்க வாழ்க்கை ரகசியங்களை வெளியிடும் பத்திரங்



களை மஞ்சள் பத்திரங்கள் என்று கூறுகிறோம். பண்படாத உள்ளங்கள் இத்தகைய விரசச் செய்திகளைப் படிக்க, கேட்க விழைகின்றன. கீழ்த்தரமான உணர்ச்சிகளைத் தூண்டிவிடும் தன்மை இச்செய்திகளுக்கு உண்டு. பிறரைத் தாழ்த்தியோ, கீழ்த்தரமாகவோ தாக்கும்பொழுது பொறாமை உள்ளங்கள் சந்தோஷிக்கலாம். ஆனால், அதே நிலையில் தன்னை வைத்துப் பார்த்தால்...?

இராமாயணத்தின் ஆதர்ஸ புருஷனை ஸ்ரீராமனே, பிறன் மனை புகுந்த சீதையை, தன்னுடன் வைத்து வாழ்ந்ததற்கு ஒரு வண்ணான் கேவலமாகப் பேசியதாக இராமாயணம் கூறுகிறது. மேலை நாடுகளில் கற்பு எனும் ஒழுக்கத்திற்கு பிரதான்யம் கொடுக்கப்படுவதில்லை. இதைப் பத்திரிகைகளும் பிரமாதப் படுத்துவதில்லை. உலக சமாதான ஊழியர் பென்னர்

பிணக்கே தம்பதிகள், முன்னாள் பிரதமர் அந்தோனி ஈடன் தம்பதிகள் இவர்களிடையே ஏற்பட்ட பிணக்குகள் கேவலம் விவாக ரத்துச் செய்திகளாக பத்திரிகைகளில் இரண்டு அங்குலத்திற்குள் தங்களை முடக்கிக் கொண்டன. தமது நாடாக இருந்தால் இது ஒரு ஆண்டுக்காவது வசன கதையாகப் பரிணமிக்கும். அரச குடும்பங்கள் சம்பந்தமான செய்திகளாக

பாலாஜியின் புகழ் பெருத்தாலும் சரீரம் பெருக்காத ரகசியம் இதுதான்!

இருந்தால் சிறிது பிரதான்யம் கொடுக்கப்படும். மார்கரெட் இளவரசி கேப்டன் டவுன் செண்ட் காதல் இந்த ரகத்தைச் சேர்ந்தது. இவை இன்று நேற்றல்ல; பிரபல நாவலாசிரியர்களான ரெயினல்ட்ஸ், டூமாஸ், சார்லஸ் டிக்கன்ஸ் முதலியவர்கள் பிரான்ஸ், இங்கிலாந்து தேசத்து அரச குடும்பங்களின் அந்தரங்கக் காதல்களை வைத்து பல உன்னத நவீனங்கள் எழுதியிருக்கிறார்கள். இவை திரைப் படங்களாகவும் வந்திருக்கின்றன.

அது மன்னர்கள் காலம். இது திரை மன்னர்கள் காலம். நட்சத்திரங்கள் மினுமினுப்பது போய் உதய சூரியன்களாக உலவுகின்ற காலம். விற்பனை விளம்பரங்களில் கூட முன்னர் 'இன்ன மகாராஜாவால் நன்கு மதிக்கப்பட்டது' என்று கூறுகின்ற காலம் போய், 'பிரபல நட்சத்திரம் விரும்பி வாங்கி உபயோகப்படுத்தும் பொருள்,' என்று ஓலமிடும் காலம். சினிமா இமயத்தின் சிகரத்தில் இருக்கும் ஒரு சில நடிகர்-நடிகைகளின் மிதமிஞ்சிய வருமானம், பகட்டான வாழ்வு, படாடோபச் செலவுகள், இன்று மக்கள் மனதைப் பெரிதும்

கவர்ந்திருக்கின்றன. திரையில் தோன்றும உருவத்தை நேரில் காண, பேச நாள் கணக்காகக் காத்திருக்கும் விசிறிகள் பல்லாயிரக் கணக்கான பேர்கள், ஏன்? பேச்சில் கூட மேற்கோள்கள் கூறுபபோது இன்ன படத்தில் இன்ஞர் கூறியது போல என்று கூறி தன் அறிவை விளம்பரப்படுத்துபவர் அநேகம் பேர்.

இந்த அளவுக்கு மண்டிக்கிடக்கும் புகழ் மன்னர்களைப் பற்றி விரஸமாக எழுதினுல் நல்ல வாய்ப்புக் கிடைக்கும என்ற கருத்தில் முதல் மஞசள் ஏடு மிதக்க விடப்பட்டது.

அந்த ஏட்டிற்கு இருந்தவிற்பனையும், விலேயேற்றமும எந்த ஏட்டிற்கும் இருந்ததில்லே. ஊரெல்லாம் இந்தபேச்சு; புகழ் ஏணியில் இருந்தவர்கள் தாங்கள் கீழே தள்ளப் பட்டதாக எண்ணிப் பொருமிக் கொண்டார்கள். பல வழக்குகள் தொடரப்பட்டன. ஒரு கொலே யுடன் இதன் முதல் கட்டம் முடிவுற்றது.

தமிழகத்தில் இந்தப்பத்திரிகைக்கு மிகுந்த வரவேற்பு; இதன் ஆசிரியருக்கு இருந்த பெயர், இத்தகைய செய்திகளே ஆவலுடன் படிக்கும் தமிழரின் ரஸிகத்தன்மை இவற்றை அறிந்த பல இளேஞர்கள் பல பத்திரிகைகளே நடத்த முற்பட்டனர். பெருமபாலும் திரை அரசுகள், திரை அரசிகள், திரை இளவரசுகள், இளவரசிகள் இவர்களேப் பிணேத்தும் அல்லது இவர்களுடன் வேறு துறைப் பிரமுகர்களேயும் பிணேத்து எழுதப்பட்டது. சில நாட்களுக்கு இவை பிரமிக்கத் தகுந்த செய்திகளாகத் தென் பட்டன. ஆனல், நாட்கள் செல்லச் செல்ல அலுப்புத் தட்ட ஆரம்பித்தது. "போஸ்டரே" இல்லாமல் விற்றுவந்த பத்திரங்கள், செய்திகள் அனேத்தையும் போஸ்டரில் போட்டும் விற்பனே மந்தமாகிவிட்டது.

எங்களிடம் பித்தளே, தாமிர வில்லேகளும், இதர உலோகத் தகடுகளும், பித்தளேக் கம்பிகளும் மலிவான விலேக்குக் கிடைக்கும்.

பெ. சா. நா. சா.

அம்பலவாண செட்டியார் அண்டு கோ.

(பிரைவேட்) லிமிடெட்.

(உரிமையாளர். ஸ்ரீராம் ரோலிங் மில்)

14, தங்கசாலேத் தெரு, சென்னே - 3.

தந்தி:— பிராக்கோமெட்டல்.

டெலிபோன்:— ஆபீஸ் 55106 தொழிற்சாலே 61104.

இத்துடன் இணேக்கப்பட்ட ஸ்தாபனம்:

பெ. சா. நா. சா. அம்பலவாண செட்டியார்.

மட்டாஞ்சேரி, கொச்சி.

ஆரம்ப காலத்தில் சினிமா உலகில் உள்ளவர்கள் பெருமபாலும் வாழ்க்கையின் கீழ்ப் படியிலிருந்து வந்தவர்கள். கணக்கிற்கு வராமல் கட்டுக் கட்டாகக் கட்டிக் கிடக்கும் பணக் கத்தைகளைக் கண்டவுடன் ஏற்கெனவே தறிகெட்ட வாழ்க்கை நடத்தி வர்கள் தங்களுக்கு ஏதோ கௌரவமும், அந்த கௌரவத்துடன் இணைந்த ஒரு ஒழுக்கமும் இருப்பதாக எண்ணி தங்களையே ஏமாற்றி வந்தார்கள். இவற்றைத் தாக்கி எழுதும பொழுது, மனம புழுங்கினர்கள். ஒரு சிலர் வழக்கடினர்கள். சிலர் ஏதோ கொடுத்துக் கூடச் சரிக்கட்டிப் பார்த்தார்கள். துரௌபதியின் வஸ்திரம் போல் இத்தகைய செய்திகள் அலை அலையாக வளர்ந்தவுடன் சலித்துப் போய் சிந்தையை வேறு திசைக்குத் திருப்பினர். வாசகர்களும, வெள்ளித் திரையில் தோன்றும தருமர்களும, அரிச்சந்திரர்களும், நளாயினிகளும், அருந்ததிகளும நம்மைப் போன்றவர்கள் தான் என்று ஓரளவு பிரமை நீங்கினர்.

இப்பொழுது தான் பள்மாஸின் தன் நிஜ ஸ்வரூபத்தைக் காட்ட ஆரமபித்தது. திரைமேடை மீது காட்டப்பட்ட "சர்ச் லைட்" என்ற ஒளி வெள்ளம் ரஸிகர்கள் மேல் திருப்பப்பட்டது. இந்தப் பேரொளியில் கண்ணைத் திறக்கக் கூட முடியாமல் தத்தளிக்கின்றனர். கௌரமான பல குடும்பங்களின் பெயர்கள் இன்று இழுக்கப் படுகின்றன. அரசியல் மேதைகள், தொழிலதிபர்கள், கௌரவம் ஒன்றையே மூலதனமாக வைத்துள்ள பல அன்பர்கள் இன்று கையறு நிலையிலிருக்கின்றனர். எனக்குத் தெரிந்த ஓரிரு குடும்பங்களிலுள்ள பெண்கள் தற்கொலை செய்ய முயன்றுர்கள். ஒரு பெண்ணின் திருமணம தடைப்பட்டது. வீட்டிலுள்ள ஆடவர் வெளியில் தலை காட்ட முடியவில்லை. இந் நிலையில் 'மஞ்சள் கவிஞர்'கள் தர்மோபதேசம் செய்கிறார்கள். பிறரைப் பற்றியும், பிறர் அளித்த கர்ப்பதானத்தைப் பற்றியும படித்து மகிழ்ந்த பரம ரசிகர்கள் தங்கள் மனைவி பக்கலைப் பற்றி இத்தகைய செய்திகள் வராமல் இருக்க வேண்டும் என்று தவிக்கிறார்கள். செய்திகள் நிஜமாயிருக்க வேண்டியதில்லை. சிறு கதைக்கு விஷயம் போல், ஒரு எதிர்பாராத சந்திப்பு, ஒரு கடைக்கண் வீச்சு ஏதோ கிடைத்ததை வைத்து கற்பனைக் குதிரையின் வேகம் முடுக்கி விடப்படுகிறது.

இது தமிழகத்துடன் நிற்கவில்லை. தொழில் நிமித்தம் வட நாடும, கடல் கடந்தும சென்ற தமிழினத்தைப் பற்றியும் அதைூன செய்திகள் வருகின்றன. பிற நாட்டான ஒருவன் இப்பத்திரிகைகளைக் கண்ணுற்ருல் தமிழகத்தில் வீட்டுக்கு வீடு விபசாரம் நடக்கிறது என்று எண்ணினுல் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இன்று சர்க்கார் இத்தகைய பத்திரிகைகளைத் தடை செய்ய நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள். ஓரளவுக்கு இவற்றிற்கு வரப்பு கட்டலாம். எனினும, அன்றுடச் செய்திகளைத் தரும தமிழ் தினசரிகளில் கூட 'பருவப் பெண்களை'ப் பற்றியும், "குபீரென்று கட்டிப் பிடித்து 'இச்' என்று முத்தமிட்டான்" செய்திகளையும் நான்கு பத்தி தலைப்புடன் வெளியிடும் அளவுக்கு பத்திரிகைத் தொழில் முன்னேறியிருக்கும் பொழுது, அத்தகைய பத்திரிகைகளின் வாசகர்கள் லட்சக் கணக்கில் இருக்கும் பொழுதும், படித்தவர்கள் கூட ஆங்கில தினசரிக்குள் அத்தகைய பத்திரிகைகளை மறைத்து வைத்துப் படிக்கும் அளவுக்கு, நம் தமிழ்ப் பண்பாடு உயர்ந்து வரும் நிலையில் சட்டத்தால் என்ன பயன் விளையும்? பொறுத்திருந்து பார்ப்போம்.

மே 22உ முதல்...



பரமேஸ்வர் ஆர்ட் பிக்சர்ஸ் அளிக்கும்

பத்தரை மாத்து தங்கம்

டைரக்ஷன்
K.S. மணி *

மணிவேல் பிக்சர்ஸ்
தயாரிப்பு...

* ஸ்டுடியோ
பாரமவுண்ட்

Elegant

என் வாய்மூலம் புறப்படும் பாட்டைக் கேளுங்கள் — வி. எஸ். பி. பிக்சர்ஸ் "இரு மனம் கலந்தால் திருமண"த்தில் பிரேம் நஸீர்.

க. சந்தானம் (விருதை)

இப்பொழுது வெளிவந்துகொண்டிருக்கும் தமிழ்ப் படங்கள் மக்களின் அறிவை வளர்க்கின்றனவா, அல்லது காம உணர்ச்சியை வளர்க்க உதவுகின்றனவா?

அறிவுடையோருக்கு அறிவு வளரும். காமப் பித்தர்களுக்கு எதைக் கண்டாலும் காம உணர்ச்சிதான் உண்டாகும். அது அவரவர்கள் மனப்பான்மையைப் பொருத்த விஷயம்.

ஆ. கனகன் (அரும்பாக்கம்)

சினிமாத் தொழிலில் ஆண்களை விடப் பெண்களின் எண்ணிக்கை அதிகமா, அல்லது பெண்களை விட ஆண்களின் எண்ணிக்கை அதிகமா?

பெண்களைவிட ஆண்களின் எண்ணிக்கைதான் அதிகம். ஆனால் படங்களில் ஆண்களை விடப் பெண்களே அதிகம் காட்டப்படுகிறார்கள். காரணம், உங்களுக்குத் தெரியாமல் இருக்க முடியாது.

வீ. ராகவன் (மதுராந்தகம்)

படத்திற்குக் கதை எழுதுவது, அதைப் படமாகத் தயாரிப்பது இதில் எது கடினமானது?

இரண்டையுமேவிடக் கடினமானது ஒன்று உண்டு. அதுதான் கண்ணருவிக் கதைகளையெல்லாம் குப்பைப் படங்களாகத் தயாரித்துள்ளதைப் பார்த்து எழுத வேண்டியிருக்கும் என் போன்ற சினிமாப் பத்திரிகாசிரியர்களின் நிலை.

அ. பிச்சை (மாயூரம்)

சாவித்திரி ஜெமினி கணேசனை விவாகரத்து செய்துவிட்டு வேறு ஒரு பிரபல நடிகரை மணந்து கொள்ளப் போகிறாராமே, அது உண்மையா?

நிஜக் கலப்பற்ற முழுப் பொய். அவர்கள் நடிக்கும் எந்தப் படத்திலும்கூட அப்படி ஒரு காட்சி கிடையாது!

டி. சந்துரு (திருமயிலாடி)

ஒரு படம் வெற்றி பெற்றால் நடிகர்கள், டைரெக்டர், ஒளிப்பதிவாளர், இவர்களில் யாரைப் போற்றுவது?

படத் தயாரிப்பு ஒரு கூட்டுப் பண்ணை முயற்சி போன்றது. அனைவரது ஒத்துழைப்பும் ஒற்றுமையும் இல்லாது படம் வெற்றி பெற முடியாது.

வி. அங்கமுத்து (கரூர்)

ஒரு மேனாட்டுப் பத்திரிகை சிவாஜி கணேசனைப் புகழ்ந்து எழுதியிருப்பதாக என் நண்பன் கூறுகிறான், அது உண்மையா?

உண்மைதான். "லண்டன் டைம்ஸ்" என்ற பத்திரிகை "இந்தியாவிலேயே சிவாஜி கணேசனைப் போன்ற சிறந்த நடிகர் கிடையாது" என்று குறிப்பிட்டிருக்கிறது.

ஆர். கல்யாணி (சென்னை)

நான் டாக்டருக்குப் படித்துக் கொண்டிருக்கிறேன். பட்டம் பெற்றதும் நான் வைத்தியம் பார்க்கும் முதல் நோயாளி நீங்கள் தான் என்று நிச்சயித்திருக்கிறேன்.

அம்மையே, நான் நீண்ட காலம் வாழ ஆசைப்படுகிறேன். வேறு தொள்ளாயிரத்துத் தொண்ணூற்று ஒன்பது பேரைப் பார்த்துவிட்டு என்னிடம் வரவும். ஏனெனில் ஆயிரம் பேரைக் கொன்றவர் தான்......

எம். ஆர். எதிராஜுலு (சூளை)

மாணவர்கள் அரசியலில் கலந்து கொள்ளலாமா, கூடாதா? உங்கள் விரிவான விளக்கம் தேவை.

கலந்து கொள்ளலாம் என்பதே என் திடமான அபிப்பிராயம். ஆனால் நன்கு தெளிந்து சரியான கட்சியில் கலந்து கொள்ள வேண்டும். நம பாரதத்தின் எதிர்காலம் அவர்கள் கையிலிருக்கும் போது அவர்கள் அரசியல் அறிவு பெறுவது அவசியமே!

பி. ரங்கராஜன் (புதுவை)

'ராக் அன் ரோல்' என்ற மட்டமான நடனம் எப்படி நம் படங்களில் புகுந்தது. நமது கலாசாரத்தை அது நாசமாக்குகிறது இல்லையா?

நடனத்தை இழிவு படுத்தவேண்டாம். உங்கள் கோபமெல்லாம் அதை முதலில் படத்தில் புகுத்தியவர்பால் திரும்பட்டும்!

எம். பி. சகுந்தலா (சென்னை)

மனித வாழ்க்கையின் உண்மை லட்சியம் எதுவாக இருத்தல் வேண்டும்?

மனிதனாக நடந்து கொள்வது. ஜாதி மதம் அந்தஸ்து இவற்றில் உயர்வு தாழ்வு பார்க்காமல் இவைகள் மனிதனுக்கு மனிதன் வேறுபட்டது இல்லை என்ற உண்மையை உணர்ந்தால் அதுவே மனிதத் தன்மைஆகும்.

ருசிமிக்க பல தினுசு ஊறுகாய்கள், சாம்பார் பௌடர், ரசம் பௌடர் முதலியன.

Manufacturers

SRI VENKATA LODGE CONDIMENTS,

KUMBAKONAM. . . . S. INDIA

6P

சுகுந்தா (பாண்டி)

படத்தில் வராத தனது இனக் கவர்ச்சி மிக்க சித்திரம் கொண்ட விளம்பர 'பானரை'ப் பார்க்கும் போது ஒரு நடிகைக்கு எப்படி இருக்கும்?

அப்படி ஒரு போஸ் கொடுக்க தனக்கு கறுப்பிலும்-வெளுப்பிலுமாக படாதிபதி பணத்தை வாரி வழங்கியதையும், தணிக்கையாளர் நிர்த்தாட்சண்யமாக அதை வெட்டிவிட்டதையும் நடிகை நினைத்துப் பார்ப்பார்.

சாரதாமணி (பாலக்காடு)

தமிழ்ப் படங்களைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? பல படங்கள் படித்தவர்களும், பண்புள்ளவர்களும் பார்க்கத் தகுதியற்றவைகளாக இல்லையா?

நல்லது கெட்டது எதிலும் இல்லாமல் இல்லை. யாரும் பார்க்கத் தகுந்த கண்யமான நல்ல படங்களும் தமிழில் வெளிவரத்தான் செய்கின்றன.

கே. கண்ணன் (செஞ்சி)

படங்கள் முன்னேறுவது படம் பார்க்கும் ரஸிகர்களின் கையில் தானே இருக்கிறது.

ஆம்; ஆனால் படாதிபதிகள் ரஸிகர்களின் ரஸனை வளர உதவ வேண்டும். படாதிபதி ஒரு உபாத்தியாயரைப் போன்றவர். அவர் சொல்லிக் கொடுப்பதைத்தான் மாணாக்கர்களான ரசிகர்கள் கற்க முடியும்.

ஆர். சீதாராமன் (லால்குடி)

காலஞ் சென்ற என். எஸ். கிருஷ்ணனைவிட சிறந்த ஹாஸ்ய நடிகர் இல்லையா? அவரை மட்டும் ஏன் எல்லோரும் கொண்டாடுகிறார்கள்?

அவர் நகைச்சுவை நடிகர் என்பதனால் மட்டும் அவருக்குப் புகழ் இல்லை. மற்றவர்கள் சிரிக்க மட்டும் வைக்கிறார்கள், ஆனால், அவரோ சிரிக்க வைத்தார்; கூடவே சிந்திக்கவும் வைத்தார்; முன்னேற்றத்தைத் தடை செய்யும், நாட்டிலுள்ள தீயவற்றை எல்லாம் தம் கிண்டல் மூலம் மக்கள் உணரவைத்தார் அவர். ஆகவேதான் அவர் செத்தும் அவர் புகழ் சாகாமல் இருக்கிறது.

எம். கனகராஜ் (மயிலை)

பிரபல மேனாட்டு நடிகர் சார்லி சாப்ளின் ஏன் ஹாலிவுட்டை விட்டு வெளியேறினார்?

வெளியேற்றப்பட்டார் என்று கூடச் சொல்லலாம். அவர் தம் படங்கள் மூலம் வெளியிட்ட புரட்சிக் கருத்துக்கள் அமெரிக்க குடியரசுக்குப் பிடிக்கவில்லை. அவரை அமெரிக்க விரோதி என்று கருதியது அந்த அரசாங்கம்.

சுப. அழகப்பன் (புதுவயல்)

நான் எழுத்தாளனாக விரும்புகிறேன்; ஆனால் என் பெற்றோரோ நான் வக்கீல் அல்லது டாக்டராக வேண்டுமென விரும்புகின்றனர்.

சட்டமும், வைத்தியமும் பணத்தை அள்ளிக் குவிக்க உதவும்; எழுத்து புகழைச் சேர்க்கும். தங்களுக்கு எது தேவை. ஆனால் எழுத்துத் தொழில் பவித்திரமானது.

கண்ணதாசன் பிலிம்ஸ் "சிவகெங்கைச் சீமை"யில் முத்தழகின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் சிட்டுவாக

கமலா லட்சுமணன்.

எஸ். குமார் (கவரப்பட்டு)

நாடகமாக வெற்றி பெற்ற கதைகள் சினிமாவாகத் தயாரிக்கப்படும் போது தோல்வி காணுவது ஏன்?

அதற்கு இரண்டு காரணங்களைக் குறிப்பிடலாம்; மேடைக்கு ஏற்ற கதைகளெல்லாம் திரைக்குப் பொருந்தா என்பது ஒன்று. மற்றொன்று பொருத்தமான கதையாயிருந்தும் டைரெக்டர், நடிகர்-நடிகைகள் மீதுள்ள குறை.

பி. சொர்ணம் (நாகை)

இந்த உலகில் அதிகமாகக் கண்ணீர் விடுவது யார்?

பட உலகில்தானே கேட்கிறீர்? அப்பா அம்மா வேஷம் போடும் சுப்பையா, துரைசாமி, கண்ணாம்பா, பண்டரிபாய் இப்படி ஒரு பெரிய பட்டாளமே நம் தமிழ்ப் பட உலகில் இருக்கிறார்களே.

ச. பரமசிவம் (குளித்தலை)

ஒரு மனிதன் நினைத்தால் எவ்வளவு சம்பாதிக்க முடியும்?

'நினைத்தால்' சம்பாதிக்க முடியாது; உழைத்தால்தான் சம்பாதிக்க முடியும்.

டி. ஸி. லட்சுமணன் (சென்னை-1)

ஏதாவது ஒரு தமிழ்ப் படத்திற்கென மேனாட்டில் சென்று காட்சிகள் தயாரித்திருக்கிறார்களா?

அஸந்தாஸ் தயாரித்த "நவயுவன்" என்ற படத்திற்காக லண்டனுக்குச் சென்று சில காட்சிகளைத் தயாரித்து வந்தார்கள்.

என். சின்னு (வேலூர்)

முன்பெல்லாம் நட்சத்திரங்கள் கிரிக்கெட் ஆடுவார்களே. இப்பொழுது எங்கே அந்தமாதிரி நிகழ்ச்சகளைக் காண முடிவதில்லை?

பிரபல கிரிக்கெட் ஆட்டக்காரர்கள், தங்கள் ஆட்டததைக் கிண்டல் செய்வதாக மான நஷ்ட வழக்குத் தொடருவதாக பயமுறுத்தினர்களோ, என்னவோ?

கு. ரங்கன் (ஸ்ரீரங்கம்)

ஏழே ரூபாய்கள் இருந்தால் போதும், ஒரு படம் பிடித்துவிடலாம் என்று என நண்பன் ஒருவன் கூறுகிருனே?

அடேயப்பா, அவ்வளவு பணம் எதற்கு? ஒரு ரூபாய்க்கே மூணு போட்டோ படம் எடுத்துக் கொள்ளலாமே. உம் நண்பன் குறிப்பிடுவது, சினிமாப் படம் எடுப்பது என்ருல் அதற்கு குறைந்தது ஏழுலட்சம் தேவைப்படுமே!

'நாவுக்கரசன்' (மதுரை)

முரசொலி மாறன கதை-வசனம் எழுதுகிருர்; கண்ணதாசன் பாட்டுகள் எழுதுகிருர்; எம். ஜி. ராமச்சந்திரன், எஸ் எஸ் ராஜேந்திரன், பத்மனி, சாவித்திரி இவர்கள் நடிக்கிருர்கள். கே. சங்கர் டைரெக்ட் செய்கிருர். இப்படி ஒரு படம் தயாரிக்கப்பட்டால் அது வைர விழாக் கொண்டாடும் அல்லவா?

நிச்சயமாகச் சொல்ல முடியாது. நம் ரஸிகர்கள் மதில்மேல் பூனை.

கே. சங்கரன் (திருமங்கலம்)

தான் முன்னுக்கு வர உதவியாயிருந்த, நட்சத்திர பதவியின் உச்சியை அடைய உதவிய ஏணியை உதறித் தள்ளும் மனிதரைப் பற்றி நீர் என்ன நினைக்கிறீர்.

'நன்றி மறந்த நயவஞ்சகன்' என்பது தான் நானும் நீரும் அளிக்கும் தீர்ப்பு; ஆனல், உச்சியில் ஏறியவர் தன்னை யாரும் பின் தொடராதிருக்க அதுதான் வழியென நினைக்கிருரே!

கருணகரன் (கோடை)

காலஞ் சென்ற கலைவாணர் நடித்து வெளிவராத படங்கள் ஏதேனும் இருக்கின்றனவா?

"தோழன்" என்ற படத்தில் அவர் நடித்திருக்கிருர். அப்படத்தை சீக்கிரமே நீங்கள் பார்க்கப் போகிறீர்கள்.

ஐராவதம் (மேலூர்)

......ஊரில் ..... நடிகை கற்பழிக்கப்பட்டது உண்மைதான?

காதல் கொண்டது, கற்பழிக்கப்பட்டது "இச்" என்று முத்தமிட்டார் இவைகளைப பற்றியெல்லாம் தயவு செய்து என்னிடம் கேட்கவேண்டாம். இதற்கென வேறு சில பத்திரிகைகள் இருக்கின்றனவே.

ராமநாதன் (விஜயபுரம்)

பிரபல நட்சத்திரங்கள் ஒன்று சேர்ந்து நடித்த சில படங்கள்கூட சமீபத்தில் மண்ணைக் கவ்வி விட்டனவே காரணம்?

அவர்களுக்கு தொழிலில் அக்கறை செலுத்த அவகாசம் இல்லாமல் போனதுதான்.

தளவாய் ராஜு (திருநெல்வேலி)

சில படங்களில் நடித்தவுடன் தானே டைரெக்ட் செய்வதாய் விளம்பரப்படுத்திக் கொள்கிருர்களே, அதற்கென யோக்கிய தாம்சமே அவசியமில்லையா?

கொஞ்சம் பண வசதியுடன் நடிகர்களைக் கட்டி மேய்க்கும் திறமையும், ஒரு நல்ல உதவி டைரெக்டர், அல்லது கேமிராமேன் தயவும் இருந்தால் போதும் ஒரு சாதாரண ஆசாமிகூட டைரெக்டர் ஆகிவிடலாம்.

"இளங்கிளி" (குடந்தை)

எம். ஜி. ஆர். தற்பொழுது நடித்துவரும படத்தின் பெயர்களை தயவு செய்து கூறவும்.

நடிப்பதாகவும், நடித்துவருவதுமான படங்களின் பெயர்ப் பட்டியலை விட எந்தப்படம் இந்த வருஷம் வரும் என்ற கேள்வி பொருத்தமா யிருக்கும் நண்பரே!

குளிர்ந்தநாயகி (கோவூர்)

ஈ. வி. சரோஜாவிற்கு சமீபத்தில் குழந்தை பிறந்ததாக பத்திரிகையில் படித்தேன். அவருக்கு எப்பொழுது கல்யாணமாயிற்று. கணவர்...... பெயர்......

உஷ். சத்தம் போட வேண்டாம், தேவரகஸ்யம் என்பார்களே அது போல இது சினிமா ரகஸ்யம். திரை உலகில் மட்டும் இந்த விதமான ஆராய்ச்சிகள் கூடாது சகோதரி.

கோவிந்தன் (கோவை)

சென்னை சினிமா ரஸிகர் சங்கம் என ஒன்று பிரதி வருஷமும், நடிகர், நடிகைகள் தேர்வு என்று நடத்தி பரிசளிப்பு விழா என்று கொண்டாடுகிறார்களே, எந்த ரஸிகர்கள் இவர்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள்?

ஆரம்பத்தில் முதல் வருஷம் ரஸிகர்களின் அபிப்பிராயங்களைக கொண்டு தான் பரிசளிப்பு விழாக் கொண்டாடினார்கள். பிறகு ரஸிகர் சங்கம் என்பது சில பாகஸ்தர்கள் கொண்ட கூட்டுக் கம்பெனியாக மாறி பிறகு அதிலிருந்து சில பாகஸ்தர்கள் விலகி தனிக் கம்பெனி, அதாவது "பிலம் ஸொஸைடி" என்று ஆரம்பித்திருக்கிறார்கள். ரஸிகர்களிடையே இதற்கு ஒரு தனி மதிப்போ கவுரவமோ இல்லாமல் போய்விட்டது வருந்தத் தக்கதே.

★ குணத்தில்
★ மணத்தில்
★ நிறத்தில் சிறந்தது.

பார்ஸன்ஸ் டீ

PARSONS TEA COMPANY

வெளியூர் விற்பனை ஏஜெண்டுகள் தேவை.
விபரங்களுக்கு:
பார்ஸன்ஸ் டீ கம்பெனி,
118, அரண்மனைக்காரத் தெரு, சென்னை-1.

இளம் பிராயம் முதல், அழகிய நீண்ட கூந்தல் வளர்ச்சிக்கு சிறந்தது.

ஹேரோடின்

"ஹேரோடின்" மூல மயிர்க்கால்களுக்குப் புத்துயிரளிப்பதுடன் மூளைக்குக் குளிர்ச்சி அளித்து கருமையான கேசத்தைப் பெருக்க உதவுகிறது.

தயாரிப்பு: கர்னடிக் கெமிகல்ஸ், சென்னை-6.

சென்னை T. U. C. S. எல்லா பிராஞ்சுகளிலும் இப்பொழுது விற்பனையாகிறது.

"கல்யாண பரிசு"

உள்ளத்தைத் தொடும் உன்னதமான கதை, நயமான சம்பாஷணைகள், சிந்திக்க வைக்கும் கருத்தமைந்த சில பாடல்கள், நெஞ்சை யள்ளும் இசை அமைப்பு, கண்ணுக்கு விருந்தளிக்கும் வெளிப்புறக் காட்சிகள், அருமையான ஒளி, ஒலிப்பதிவுகள், திறமையான எடிட்டிங், சரோஜாதேவி—கணேசன் ஜோடியின் பிரமாதமான நடிப்பு, ஒவ்வொரு கதா பாத்திரங்களின் குண இயல்புகள் நல்ல பண்புள்ளவைகளாகச் சித்தரிக்கப்பட்டிருத்தல், எல்லாவற்றிற்கும் மேலாக கதையில் கடைசி கட்டத்தில் நம்மை உணர்ச்சியின் உச்சத்திற்கு இட்டுச் செல்லும் வகையில் அமைந்துள்ள கதாசிரியர் ஸ்ரீதரின் புதுமையான டைரெக்ஷன் — இவை அனைத்தும் கலந்ததுதான் வீனஸ் பிக்சர்ஸின் "கல்யாண பரிசு" அது மகத்தான சாதனை எனபனதார மகிழலாம்!

ஜானகிராமன, சென்னை - 5.

எந்த ஒரு காதல் ஜோடியையும் பண்புக்குப் புறம்பாகப் போகவிடாமல் தமிழரின் மாண்பை மெச்சத் தக்க வகையில் படமாக்கியிருக்கிறார்கள். கடைசிக் கட்டம் கல்மனதையும் கண்ணீர் உகுக்க வைக்கும். காதல் கட்டங்களும், சோகக் கட்டங்களும் ஒன்றுக்கொன்று சளைக்காமல் உயர்வாக உள்ளன.

சாவித்திரி ராமன், திருவல்லிக்கேணி.

"இரத்தபாசம்" என்ற படத்தால் திரை உலகிற்கு அறிமுகமான கதாசிரியர் ஸ்ரீதர் "கல்யாண பரிசு" படமூலம் தாம் ஒரு நல்ல டைரெக்டர் என்பதை நிரூபித்துள்ளார். காதல் என்ற விதை வளர்ந்து செடியாக, பின்னர் அது தோல்வியுறும் போது இலைகள் உதிர்ந்து செடி பாழாகுதல், ஒரு பக்கம் தன்னைச் சீராட்டி வளர்த்த அக்காவின் பாசம், மறு பக்கம் ஆசைக் காதலனின் நேசம் இரண்டையும் ஓர் தராசினில் வலியுறுத்தல் போன்றவைகள் அவரது திறமையான உத்திகளுக்கு சில உதாரணங்கள். ஆமாம், அந்தக் கடைசீக் கட்டம்தான் படத்தின் தரத்தை உயர்த்துகிறது. வாழ்க ஸ்ரீதர்! வளர்க அவர் கலைத்தொண்டு!!

எஸ். ஜி. கிருஷ்ணன், சென்னை — 1.

வீனஸ் பிக்சர்ஸாரின் "அமர தீபம்" படத்திற்குப் பின் "கல்யாணப் பரிசு" படம் சோக ரசத்தை நமக்குப் பிழிந்து தந்து நம் நினைவில் என்றும் மறவாத நிலையை நிலை நாட்டியுள்ளது. எதிர்பாராத கதைத் திருப்பங்கள், தங்கவேலுவின் தமாஷ்கள், ஏ. எம். ராஜாவின் இனிமையான இசையமைப்பு, உள்ளத்தைத்தொடும் இரண்டு பாடல்கள், உயரிய டைரெக்ஷன், ஜெமினி-சரோஜாதேவியின் உயரிய நடிப்பு ஆகியவைகள்தாம் படத்தின் விசேஷ அம்சங்கள்!

பசுபதி, கடலூர்.

வாழ்க்கையில் அன்றாடம் நிகழக் கூடிய சம்பவங்களை அப்படியே தமது கதையில் பிரதிபலித்திருப்பதுடன் இயல்பு நடையில் அருமையான வசனங்களை எழுதியுள்ளார் கதாசிரியர் — டைரெக்டர் ஸ்ரீதர். ஏதோ ஓர் உயரிய ஆங்கிலப் படம் ஒன்றைப் பார்ப்பது போன்ற

பிரமை இப்படத்தைக் காண்கையில் ஏற்படுகிறது. ஒவ்வொரு நடிகரும் ஒத்துழைத்து நடித்துள்ளார்கள். இளைஞர் ஸ்ரீதரின் வெற்றி வளர்க, வாழ்க!

சுசீலா, விருதுநகர்.

குற்றம் குறைகளுக்கு இடம்தராமல் பாத்திரங்களின் பண்புக்கு பாதகம் ஏற்படாமல், கதையின் சுவாரஸ்யம் குன்றாமல், விறுவிறுப்பான வசனத்தோடு, துடிப்பான நடிப்போடு, கருத்தான பாடல்கட்கு இனிய இசையமைப்போடு, நல்ல உத்திகளோடு நல்ல முறையில் படமாக்கிய கதாசிரிசர்—டைரெக்டர் ஸ்ரீதரைப் போற்றிப் புகழாமலிருக்க முடியாது!

என. சுபரமணயம், சென்னை—1.

நல்ல தீர்ப்பு

தமிழ்ப் படம் பார்க்கிறோமா அல்லது அசல் ஆங்கிலப் படத்தையே பார்க்கிறோமா என்ற வகையில் தமிழ்ப் படங்களில் சாதாரணமாக இருக்காத அற்புதக் கதையமைப்பு காணப்படுகிறது. கதையை டைரெக்டர் பிரகாஷ்ராவ் கையாண்டுள்ள முறை பிரமாதம். வசனங்கள் சாதாரண அளவிற்கும் கீழே உள்ளது. முரசொலி மாறனின் முத்திரை அதில் காணப்பட்டாலும் விறுவிறுப்பு இல்லை. நகைச்சுவை அமைப்பு கதைக்குள் பலவந்தமாகத் திணிக்கப்பட்டுள்ளது. துரைராஜும்—ராமச்சந்திரனும் நகைப்பூட்ட வருகிறார்கள். ஆனால் சிரிப்புத்தான் நமக்கு வருவதில்லையே. பொருட் செறிந்த பாடல்களுக்குப் பொருத்தமான இசை. ஜெமினி கணேசன நடிப்பில் புதிய திருப்பம். அளவோடு அழகாக நடிக்கிறார். ராகினியின் பாத்திரம் கதைக்குத் தேவைதானா? எல்லாவற்றிற்கும் மேலாக உண்மைக் குற்றவாளியை கடைசிவரை காட்டாமல் வைத்திருந்தது சிறப்பான முறை. அருமையான டைரெக்ஷன்.

"சாரா" சென்னை—1.

"அந்த நாள்" படத்திற்குப் பின் வரும் ஓர் புதுமையான கதை. புதுமையான கதையில் நம்ப முடியாத சம்பவங்கள் பல உள்ளன. முக்கியமான ஒரு ஓட்டலில் ஒருவனை இருவர் தாக்கும் ஒவ்வொரு சமயமும் போலீஸோ—பொது ஜனமோ வராதது விந்தை. துரைராஜின் மாமனார் தன்மையும்—ராமச்சந்திரனின் மாப்பிள்ளைப் போக்கும் அசம்பாவிதமாக உள்ளன. வேடிக்கை பண்ண விலாவில் குத்தலாமா! ரசிகர்கள் என்ன முட்டாள்களா! இந்தமாதிரி தரித்திரமான ஹாஸ்ய மெல்லாம் என்று ஒழியுமோ?

செல்வம் நாகராஜன், காரைக்குடி.

நான்கு நாளைக்கொரு படம் வெளிவரும் இந்த நாளிலே, நல்லதொரு படமாக வெளி வந்திருக்கிறது "நல்ல தீர்ப்பு". மக்களின் மனதை, தனதாகக் கொண்ட மாறனின், திரைக்கதை வசனம் நன்றாக அமைந்திருக்கிறது. நடிகர்களும் தமது பாத்திரத்தை உணர்ந்து நன்றாக நடித்துள்ளார்கள். கண்ணம்மாவும், கணேசனும், பேசும் வசனங்கள் மிகையாக இருக்கிறது. சில இடங்களிலே சிவாஜியின் நடிப்பையே ஜெமினியிடம் பார்க்கிறோம். பொதுவாக, பொது ஜனங்களின், வாயிலிருந்து நல்ல படம் என ஒரே தீர்ப்பைத் தரும் படம் இது.

லக்ஷ்மி நரசிம்மன, வீரமாங்குடி.

மாறன் எழுதிய கதை வசனத்திற்கு நாட்டுமக்கள் அளிக்கும் ஒரே தீர்ப்பு நல்ல தீச்ப்பு.

கண்ணம்பாவும், கணேசனும் சிற்சில இடங்களிலே, அதிகமாக நடித்திருக்கிறார்கள். அது சற்றே பார்ப்பவருக்கு ஆயாசததைத் தருகிறது. ஜெமினி, சிவாஜியைக் காப்பியடிக்க

வேண்டியதில்லை. பாடல்களும், அப்படியொன்றும், "ஆஹா, ஓஹோ" என்னும்படி இல்லை.

இருந்தாலும். சிறு கதையைத் துணிந்து படமெடுத்து. மக்களின் பாராட்டுதலையும் பெற்று விட்டார்கள்.

கிருஷ்ணன், திருவல்லிக்கேணி.

பெற்றெடுத்த தகப்பனுக்கு உண்டான பெரியதொரு அவமானத்தைப் போக்கி தன்னைப் பெற்றவன் தவறு இழைத்தவனல்ல என்பதை பல வருடங்களுக்குப் பிறகு நிரூபிக்கிறான் மைந்தன்.

ஆதாரம் தேடும் நேரத்திலே, முத்தாரம் கிடைக்கிறது. மதி முகத்தாளுடன் பண்பாடுகிறான். அவளும அவனின் இன்பதுன்பத்திலே பங்கு கொள்ளுகிறாள்.

கதையிலே பல இடங்களிலே குறை இருந்தாலும், வசனங்கள் நல்ல முறையிலே நிறைந்திருக்கிறது. நடிப்போரிடம் நடிப்பு மிகையாக இருக்கிறது. மற்ற அனைத்தும், நல்ல முறையிலேயே உள்ளன.

இப்பொழுது வந்து மறையும் படங்களுக்குள்ளே 'நல்ல தீர்ப்பு' சற்று பிரகாசித்து மறைகிறது.

பி. ரகுபதி, ஈரோடு.

"தாயைப் போல பிள்ளை நூலைப்போல சேலை"

மகத்தான படம் என்று மார் தட்டி விட்டு மக்கள் ஆதரவை இழக்கும் நிலையில் பல படங்கள் இன்று உள்ள நிலையில், நீண்ட தலைப்பைக் கொண்ட இப் படம் அதற்கு விதிவிலக்கு. அருமையான பின்னணிகளைக் கொண்ட கதையமைப்பு, சுவாரஸ்யமாகப் பின்

அழகிய அச்சிற்கு அருமையான
பிளாக்குகள் மிக அவசியம்.

★

நூதன முறையில் நல்ல பிளாக்குகளை
தயார் செய்பவர்கள்

ரவி பிராஸஸ்

வாலாஜா ரோட், சென்னை-2.
போன்: 85396

★

லைன், ஆப்டோன், கலர் பிளாக்குகள், ரப்பர் ஸ்டாம்புகள்,
எதுவாகிலும் எங்களைக் கலந்து ஆலோசியுங்கள்.

னப்பட்ட சம்பவக் கோர்வை, பேசும் பாமரரிடையில் தெள்ளிய வசனத் தொடுப்பு, நெஞ்சைத் தொடும் பாடல்களுடன் இனிப்பான இசை, பிரமாதமாக அமைக்கப்பட்டுள்ள "எடிட்டிங்", தரமாக உள்ள ஒலி ஒளிப்பதிவுகள். ஒவ்வொரு நடிக நடிகையரின் பரிபூரண ஒத்துழைப்பைக் கொண்ட உன்னத நடிப்பு, தமிழர்கள் பண்பை பல வகையிலும் உயர்த்தும் வகையில் சிருஷ்டிக்கப் பட்டுள்ள பாத்திரங்களான உயரிய குண இயல்புகள், சிறப்பான டைரெக்ஷன் இவை தான் இப்படத்தின் விசேஷ அம்சங்கள். போலீஸ் குடும்பத்தை வைத்து கதை அமைத்துள்ள முறை துணிவான முயற்சி தான். போலீஸாரே பார்த்துப் பரவசமடைந்து போற்றிப் பரிசளிப்பர். ஒவ்வொரு தயாரிப்பிலும் ஏ. பி. நாகராஜன் ஏதேனும் ஒரு புதுமை பண்ணத்தான் செய்கிறார் அடுக்குச் சொல்லில்-அர்த்தமில்லாத கதையமைப்பால் படங்களை அமைக்கும் இதரர்களைப் போலல்லாமல் நமது ஏ. பி. என். பாணி யாருக்கும் வராது! வாழ்க அவர் கற்பனைத் திறன்! வளர்க அவர் தொண்டு!!

"த. மு. ரா." சென்னை.

அருமையான இப்படத்தில் நமக்கு சலிப்பைத் தரும் காட்சி ஒன்று உண்டென்றால் அது பத்மினி பிரியதர்சனியின் நடனமும் நடிப்பும் தான். நடனத்தைக் காணவே கண் கூசுகிறது. இந்த லட்சணத்தில் நடிக்கவும் அவர் வந்துவிட்டதால் நமக்கு வெறுப்புத் தட்டுகிறது. அவரை எதற்காக (!) படத்தில் போட்டார்கள் என்பது புரியாத புதிர்!

'உண்மையாளன்' சென்னை.

போலீஸில் நம் உறவினர்கள் இருப்பினும் அவர்களும் கடமைக்குக் கட்டுப்பட்டு சட்டத்தைக் கண்யத்துடன் காப்பாற்றுபவர்கள் என்ற வகையில் கதை பூராவும் வலியுறுத்தப்பட்டிருக்கும் விதம் போலீஸாரே கண்டால் பிரமித்துப்போவர். இது சாதாரணப் படமல்ல. "சினிமா வெறும் பொழுதுபோக்கு மட்டுமல்ல. நல்ல பல நீதி நெறிகளையும் நமக்குப் போதிக்கிறது" என்று சொல்லும் வகையில் இப்படம் உள்ளது. வி. கே. ராமசாமி சப்-இன்ஸ்பெக்டராக, மனோஹர் 'டிப்டி'யாக, சாரங்கபாணி போலீஸ் ஜவானாக எப்படி நடிக்கின்றனர்! பத்மினி பிரியதர்சனி பட்டும் புகுத்தப்படாமலிருந்தால் இன்னும் தரமுடையதா யிருந்திருக்கும். அவர் ஆட்டமும்-ஓட்டமும் ஜீவனில்லாத நடிப்பும் பெண்மைக்கே உள்ள மிருதுத்தன்மையைப் பாழாக்கி விடுகின்றன.

வசந்தா, செங்கற்பட்டு.

போலீஸைப்பற்றி ஜனங்களுக்கு எவ்வளவு உயர்வாக எடுத்துச் சொல்ல முடியுமோ அந்த அளவு சொல்லியிருக்கிறார்கள் இக்கால சினிமா நடிகை போல் அக்கால நடனக்காரிகளை அக்காலத்திலும் சிலர் கலைக்கண்ணோடு காணாது, வாய்க்கு வந்தபடி பேசுவதற்கு சரியான சவுக்கடி கொடுத்திருப்பது நடிகர்கள் சமூகத்திற்கு நிச்சயம் ஆறுதல் அளிக்கும்.

சாதாரண நடிகர்களைக் கொண்டு சிறப்பாகப் படத்தைத் தயாரித்துள்ளார்கள். ஏ. பி. என். தொட்டதெல்லாம் மணக்கிறது. இதுபோலப் படத் தயாரிப்பாளர்கள் கலையம்சம் ததும்பும் இப்படத்தைக் கண்ணுற்று தலை குனியட்டும். பிறகு திருந்தி ஏ. பி. என். பாதையில் பவனி வரட்டும்.

'சினிமாவல்' திருச்சி.

Printed by K. Ganapathiraman at the Vadapalani Press, Madras-26 and Edited and Published by K. Radhakrishnan, 6 Conronsmith Road, Madras-6 for the proprietor of M/s. Nataraja Publications.

நல்லதொரு பானமே நீங்கள்
அருந்த விரும்பினால்

வாங்குங்கள்

ஆல்விடோன்



கடைசி ஸ்பூன் வரை

இனிமை தரும்

உன்னத

உணவு பானம்

ஆல்விடோன் லபாரட்ரீஸ், மதராஸ்-16.

CHARI

இலங்கையில் கிடைக்கும் இடம்: A. V. R. A. Ltd., Colombo.
ரேடியோ ஸிலோன் 41-72 மீட்டரில் 'இசை விருந்து'—
வெள்ளிக்கிழமை தோறும், மாலை 6-30 முதல் 6-45 வரை